# பொருளியல் நோக்கு

ஏப்ரல்
1983





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பல்கலைக்கழகம் – அனுமதி, அபிலாஷைகள், எதிர்காலம்


ஒரு மாணவன் பாடசாலையில் 12 ஆண்டுகளைக் கழித்த பின்னருங்கூட, ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையானது பல்கலைக் கழக அனுமதிக்காகத் தாண்ட வேண்டிய மாபெரும் தடையாக இருந்து வருகிறது. இலங்கையின் கல்வித்துறையில் மிகக் கடுமையான போட்டி இடம் பெறும் இடம் இதுவென்றுதான் கூற வேண்டும். இறுதியாக, தெரிவு பெறும் குறிப்பிட்ட



தொகையினர் ஆர்வத்துடனும், நிறைய எதிர்பார்ப்புக்களுடனும் உள்ளே நுழைகின்றனர். ஆனால் அவர்களில் பலர் குறிப்பாக வேலைவாய்ப்புக்கள் குறைவாக உள்ள கற்கை நெறிகளைப் பயில்வோர் கூடிய சீக்கிரத்தில் நிச்சயமற்ற எதிர்காலம் குறித்த விரக்தியில் பல்வேறு நடவடிக்கைகளுக்கு தூண்டப்படுகிறார்கள். இந்த நிராசைகளும், இலட்சியரீதியான சமூகமொன்று குறித்த குறிக்கோள்களும் ஒன்றாக இணைந்து அவை ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்ப்புக்களிலும் வெளிப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், இறுதியில் அவர்கள் ஆசார ரீதியான பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, யதார்த்த உலகினைச் சந்திப்பதற்காக வெளியே வருகிறார்கள்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் 9 இதழ் 1 ஏப்ரல் 1983

# பொருளியல் நோக்கு

Appropriate Technology Services
121, POINT-P.-LFO [illegible]
NALLUR, JAFFNA
No. 257

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்

நிகழ்ச்சிக்குறிப்பேடு 2. மார்ச் 1983

இந்த இதழுக்கான விஷேச அறிக்கையைத்தயார் செய்வதில் எமக்குப் பல வழிகளிலும் துணை புரிந்த கலாநிதி (திருமதி) விமலா டீ சில்வாவுக்கு எமது நன்றி.

### விசேஷ அறிக்கை

3 இலங்கையில் உயர் கல்வி

4 பல்கலைக்கழக கல்வி — அதன் தோற்றம், வளர்ச்சி, அடிப் படைக் கோட்பாடுகள்; இலங்கையில் பல்கலைக்கழக கல்வியின் அறிமுகமும், வளர்ச்சியும் இன்றைய பிரச்சினைகளும்

### சிறப்புக் கட்டுரைகள்

ஆர். எ. அரம்பேவெல 24 அரேபிய வளைகுடா நாடுகளுடனான இலங்கையின் வர்த்தகம் (பாகம் 2)

ஜோன் தியன்தாஸ் 26 அரசாங்க தீர்மானங்கள் அவற்றின்மீது செல்வாக்குப் பிரயோகிக்கும் ஆவணங்களில் காணப்படும் பிழைகள்

### அடுத்த இதழில்

* மேற்கத்தைய பொருளாதாரங்களின் மந்தம் — அதன் தன்மை, சர்வதேச நாணய முறைமைக்கான அபாயம், வளர்முக உலகு மீதான தாக்கம் என்பன பற்றிய ஒரு விரிவான பரிசீலனை
* மத்திய கிழக்குக்கான தொழிலாளர் ஏற்றுமதி
* இலங்கையில் பனஞ்சீனி உற்பத்தி
* இலங்கையில் அரிசி கோதுமை மா நுகர்வு

### அட்டைப் படம்

இந்த இதழுக்கான அட்டைப்படத்தை வரைந்த ஓவியர் ஜே. பி. அத்துலத்முதலி.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**மார்ச்**

1. நெல்லுக்கான உத்தரவாத விலை புசலொன்று ரூபா 57.50 இலிருந்து ரூபா 62.50 ஆக உயர்த்தப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கிக்கு அதன் முதலீடுகளைப் பன்முகப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது; இதன் பிரகாரம் வருடாந்தம் தேசிய சேமிப்புக்களில் 10 சதவீதத்தை குறிப்பிட்ட சில அபிவிருத்தித்திட்டங்களில் முதலீடு செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி அரசாங்கத்தின் வட்டி மானியத்தில் தங்கியிருக்கும் நிலையைக் குறைப்பதற்கு இத்திட்டம் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதன் செயற்பாட்டு நட்டங்களை நீக்கும் வகையில் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றின் விற்பனை விலையை அதிகரித்தது. பெட்ரோல் லீட்டருக்கான விலை ரூ. 10 இலிருந்துரூ. 12; மண்ணெண்ணெய் ரூ. 3-88 இலிருந்து ரூ. 5-20; சுபர் டீசல் ரூ. 6-60 இலிருந்து 7-90; ஓட்டோ டீசல் ரூ. 5-97 இலிருந்து 6-75.

8. 1983-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டீ மெல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

9. இலங்கையின் கலாசார முக்கோணப் பகுதியில் அமைந்திருக்கும் பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படுவதற்கான ரூ. 44 லட்சம் ஜப்பானிய கடனொன்றுக்கான பத்திரங்கள் இரு நாடுகளுக்குமிடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன. அகழ்வு வேலைகளுக்கும், பாதுகாப்புக்கும் தேவையான பொறியியல், நிர்மாண உபகரணங்களை வாங்குவதற்காக இக் கடன் பயன்படுத்தப்படும்.

10. டீசல் விலையில் மேற்கொள்ளப்பட்ட உயர்ச்சிப் போக்கிலான மாற்றத்தையடுத்து, போக்குவரத்து அமைச்சு பஸ், ரெயில் கட்டணங்களில் மாற்றங்களை அறிவித்தது. பஸ் கட்டண அதிகரிப்பு 25 சதவீதமாகவும், ரெயில் கட்டண உயர்வு 40-48 சதவீதமாகவும் இருக்குமென்று எதிர்பார்க்கப்டுகின்றது.

16. பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும், வங்கிகள் சிறு ஏற்றுமதியாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதற்கு தூண்டுதல் அளிக்கவுமென இலங்கை மத்திய வங்கி மேலதிக மீள் நிதி வசதியொன்றை அறிமுகஞ் செய்து வைத்தது.

24. வெளிநாட்டு பங்கெடுப்புடனான இலங்கையின் முதலாவது வணிக வங்கியை கொழும்பில் நிதி, திட்டமிடல் அமைச்சர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்; இது மக்கள் வங்கியினதும், லண்டன் கின்னஸ் மேஹன் கம்பனியினதும் கூட்டு முயற்சியாகும். மக்கள் வணிக வங்கி நிறுவனம் எனப் பெயரிடப்பட்டுள்ள இவ்வங்கியின் நடவடிக்கைகளில், பொது தனியார் துறைகளில் அபிவிருத்தித் திட்டங்களை நிதிப்படுத்துவதும் அடங்கும்; மேலும் கூட்டாக நிதியளிப்பு, பங்கு வெளியீடுகளை முகாமை செய்தல் கடன் ஏற்பாடுகள் என்பனவும் இவ்வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும்.

வங்கி வீதத்தை மத்திய வங்கி 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாக குறைத்தது; வர்த்தக வங்கிகளின் கப்பற்படுத்துவதற்கு முன்னரான ஏற்றுமதிக்கடனுக்கான மத்திய வங்கியின் மீள் நிதிக்கான வட்டி வீதம் 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக குறைக்கப்பட்டது. மாத்தளை, பொலநறுவை மாவட்டங்களில் கிராமிய நீர் வழங்கல், பொதுச் சௌக்கியம் என்பவற்றை நிதிப்படுத்துவதற்காகடென்மார்க் அரசாங்கம் வழங்கும் 18-4 கோடி ரூபா கொடைக்கான பத்திரங்கள் இரு நாடுகளுக்கிடையிலும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

25. ஆடம்பரப் பொருட்கள், உள்நாட்டு உற்பத்திகளுடன் போட்டியிடும் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கிய 800க்கும் அதிகமான பொருட்களுக்கு வெளிநூலா இறக்குமதிக் கட்டுப்பாட்டை விதித்தது.


29. ஜூனில் பெல்கிரேடில நடக்கவிருக்கும் அங்டாட் கூட்டத்துக்கு சமர்ப்பிக்கவேண்டிய நடவடிக்கைத்திட்டத்தை தயாரிப்பதற்காக "77" குழுவின் (வளர்முக உலக நாடுகள்) அமைச்சர் மட்ட கூட்டமொன்று போனஸ் அயர்சில நடந்தது.

30. கிரிந்த கடற்றொழில் துறைமுகத்திட்டத்தின் முதலாவது கட்டத்தை நெறிப்படுத்துவதற்கான கொடையாக ஜப்பான் வழங்க விருக்கும் 6.5 கோடி ரூபாவுக்கான பத்திரங்கள் இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இக் கொடை, முதலாவது கட்டத்துக்கான நிர்மாண உபகரணங்கள், கட்டடப் பொருட்கள், ஆலோசனை கட்டணம் என்பவற்றைப் பெறுவதற்காக பயன்படுத்தப்படும்.

31. ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி முகவராண்மையால் நிதிப்படுத்தப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கும் மூன்று திட்டங்களுக்கு மேலதிகமாக 39.7 கோடி ரூபா வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இத்திட்டங்கள் மகாவலி வடிநில அபிவிருத்தி II (36.8 கோடி ரூபா), அபிவிருத்திச் சேவைகளும், பயிற்சித் திட்டமும் (1.8 கோடி ரூபா) தனியார் தொண்டர் நிறுவனங்கள் கூட்டு நிதித்திட்டம் (1.1 கோடி ரூபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல்கலைக்கழக கல்வி

கடந்த முப்பது வருடகாலத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும், அரசியல்வாதிகளும், நிர்வாகிகளும், நாட்டின் அபிவிருத்தியில் கரிசனை கொண்ட பல்வேறு குழுவினரும், பல்கலைக்கழகம் மீது கூடிய அக்கறையும், கவலையும் தெரிவித்து வந்துள்ளனர். தொடர்ந்தும், அதிகரித்து வரும் உயர் கல்விக்கான தேவைப்பிரச்சினை 1960ஆம் ஆண்டிலும், 1970ஆம் ஆண்டிலும் பாரதூரமான மட்டங்களை எய்திற்று. 1960ஆம் ஆண்டின் துவக்கத்தில் புதிய அபிலாசைகளுடனும், இலட்சியங்களுடனும் எழுச்சியடைந்த சமூகக் குழுவினர் அந்நாளைய சமூக, பொருளாதார, அரசியல் நிறுவனங்கள் மீதுசெல்வாக்கினைப் பிரயோகிக்கக்கூடியவர்களாக இருந்தனர். பொருளாதாரத்தினால் எவ்வகையிலும் இந்த நெருக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை; எனவே, அவ்வச்சமயத்துக்கேற்ற சில தீர்வுகள் செய்யப்பட்டன. கடந்தமூன்று தசாப்தங்களில் உயர் கல்வித்துறையில் நிகழ்ந்த அபிவிருத்திகள் அவ்வக்கால கட்டத்தைய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுடன் நெருங்கிய வகையில் தொடர்புற்றவையாயிருந்தன, இந்த ஸ்திரமற்ற தன்மை 1970ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து நீடித்தது. பல்கலைக்கழகங்களை மையப்படுத்துவதற்கும், 1978 இல் பன்முகப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டமுயற்சிகள் நாட்டின் உயர்கல்வி அமைப்பின் நிகழ்ந்த பிரதானமாறுதல்களாகும்; அண்மையில் இத்துறையில் நிகழ்ந்த முக்கியமான மாற்றம் ஒரு தனிப் பல்கலைக்கழக அமைப்பு சுயாதிக்கமுள்ள ஆறு தனித்தனிப் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டதாகும். இப்பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்குவதுடன், நிதிகளைப் பல்கலைக்கழகங் களிடையே பகிர்வதும், கல்வித் தரத்தைப் பேணுவதும் இவ்வாணைக்குழுவின் வேலையாக இருக்கும். 1950ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டொன்றுக்கு 1.3 கோடி ரூபாவாக இருந்தஉயர் கல்விக்கான அரசாங்கச்செலவு 1970ஆம் ஆண்டின் இறுதியில் 2.8 கோடி ரூபாவாக அதிகரித்திருந்ததுடன், 1984-1986ஆம் கால கட்டதில் ஆண்டொன்றுக்கு 45 கோடி ரூபாவாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் பற்றிய பொது விபரங்களையும், இலங்கையில் பல்கலைக்கழகக்கல்வி தொடர்பான சில பிரதான பிரச்சினைகளையும் இந்த இதழுக்கான விசேஷ அறிக்கை பரிசீலனை செய்கிறது.

### பல்கலைக் கழகக் கருதுகோளும் இலங்கைப் பல்கலைக் கழகங்களும்

### பல்கலைக்கழகம் பற்றிய கருத்து

பல்கலைக்கழகம் என்பது என்ன? அதன் அலாதியான சிறப்பியல்புகள் யாவை? பல்கலைக் கழகம் பற்றிய கருத்துக்கு ஆதாரமாயுள்ள அடிப்

படைக் கருதுகோள்களிலும் சிலவற்றைப் புரிந்துகொள்வதற்கு, பல்கலைக்கழகக் கல்வியின் இரு பாரம்பரியங்களை (பௌத்த பாரம்பரியமும் மேற்கு ஐரோப்பிய பாரம்பரியமும்) சுருக்கமாக ஈண்டு ஆராய்வோம். இவ்விரு பாரம்பரியங்களும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மீது தங்கள் செல்வாக்கைப் பிரயோகித்துள்ளன.

**பௌத்த பாரம்பரியங்கள்**

பௌத்த சமயம் தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே, இந்தியா உயர்கல்வியில் ஒரு மிகத் தொன்மையான பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. ஆனால் ஏறக்குறைய கி. மு. மூன்றும் நூற்றாண்டளவில் பௌத்த சமயம் தோன்றியதுடன்தான் ஒரு ஸ்தாபன அமைப்போடும், ஒரு கட்டுக்கோப்புடனும், ஆசிரியர்களும் மாணாக்கர்களும் இணைந்த ஒரு கூட்டமைப்போடும் உயர்தரப் படிப்புக்கான தாபனங்கள் விருத்தியடைந்தன.

**உயர் கல்வியின் மத்திய நிலையங்களாக விளங்கிய மகா விகாரைகள்**

—பிராமண சமய பாரம்பரியம் தனித்தனியாக வழிபடுவதையே அல்லது படிப்பதையே ஆதரித்தது; எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டாக வழிபடுவதை அல்லது படிப்பதை ஆதரிக்கவில்லை. சமய கல்வி நிகழ்வுகளிலோ அல்லது சமயச்சார்பில்லாத நிகழ்வுகளிலோ ஆசிரியருடன் நெருங்கிய நேரடியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது ஓர் இன்றியமையாத அம்சமாயிருந்தது. ஆதலால் பிராமண சமயக்கல்வி ஆசானின் இல்லத்தில் உள்ள சிறிய அறைகளில் புகட்டப்பட்டது. ஆனால், பௌத்த கல்வி கிரியாம்சையில் சங்கத்துக்கு (பௌத்த துறவிகள்)க் கல்வி புகட்டுவதாகவே இருந்தது. ஆதலால் விகாரைகளை (மடாலயங்கள்) மையமாக்கிக் கொண்ட பௌத்த கல்வி ஸ்தாபன ரீதியில் புகட்டப்பட வேண்டியது தருக்கரீதியான செயலே. மேலும், சகல தொழிற்பாடுகளிலும் மனத்தை ஜீவாதாரமாகக் கருதும் பௌத்த சமயம் மகா விகாரைகளில் (பெரிய மடாலயங்கள்) ஆசிரியர்களையும், மாணாக்கர்களையும் கொண்ட சமூகத்தின் ஒரு பிரிவினர் உயர்கல்வியறிவு பெறுவதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதற்கு உதவி, உதவியாய் இருக்கவல்ல, ஸ்தாபன அமைப்பையும் கட்டுக்கோப்பையும் உருவாக்கவேண்டியதும் தருக்கரீதியானதே. ஆதலின், மகாவிகாரையை மையமாகக்கொண்ட கல்வி முறை பௌத்த இந்தியாவில் வளர்ச்சியுற்று, பின்னர் பௌத்த சமயம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய நாடுகளுக்குப் பரவியது.

**கல்வியில் தேர்ந்த அறிஞர்களுக்குக் கட்டடங்கள் :** சங்கத்தின் வளர்ச்சியினால் தங்கள் இல்லங்களை விட்டுச் சங்கத்தில்

சேர்ந்தவர்களுக்குரிய வாசஸ்தலங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியம் எழுந்ததால், விகாரைகள் கட்டப்படுவதற்கு புத்தரேவிசைத் தூண்டுதல் அளித்துள்ளாரென்று கூறப்படுகிறது. "சக்தியுள்ளவர் தமது சொந்த நல்வாழ்வுகருதி மனோகரமான மடாலயங்களைக் கட்டி தங்களுடைய கற்றுத் தேர்நத அறிஞர்கள் வசிப்பதற்கு அவற்றில் இடம் கொடுப்பாராக" (சுல்லவக்க -iv 1.5) விகாரைகளைக் கட்டுவதற்கான விவரங்களும் அங்கு ஏற்படுத்த வேண்டிய சுக சௌகரியங்களும் சுடசுலவக்கவில் குறிப்பிடப்பட்டுள்ளன. விகாரைகள் சரியான இடத்தில் அமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவமும் வலியுறுத்தபபட்டுள்ளது. விகாரைகளை அமைப்பதற்குரிய சிறந்த இடம் ஒரு நகருக்கு வெகு தூரத்திலுமிருக்கக் கூடாது, மிகச் சமீபத்திலுமிருக்கக் கூடாது. படிப்பதற்கும் தியானஞ் செய்வதற்கும் உள வளர்ச்சிக்கும் ஏற்ற இடமாக இருக்க வேண்டும். இத்தேவை காரணமாக விகாரைகள் பௌத்த இந்தியாவெங்கும் எழுந்தன—சில, மன்னர்களாலும் பெருஞ்செல்வந்தர்களான வியாபாரிகளாலும் பணக்காரப் பிரஜைகளாலும் கட்டப்பட்டன — இவைவிசாலமான பூங்காவனங்களில் அமைக்கப்பட்ட விஸ்தாரமான ஆலயங்களாகும்.

மகா விகாரைகள் சமூகத்தால் சம்ரட்சணை செய்யப்பட்டன. அவற்றின் பராமரிப்புக்காக நன்கொடையளிக்கப்பட்ட கிராமங்களிலும் காணிகளிலும் உற்பத்தியான விளைபொருள்களைக்கொண்டு அவை பராமரிக்கப்பட்டன. இதன் பயனாக விகாரைகளில் கல்வி இலவசமாகவே வழங்கப்பட்டது. கல்வி பெறுவோருக்கு விகாரைகளிலேயே வசிப்பிடவசதி செய்யப்பட்டது. ஆசிரியர்கள் மாணாக்கர் ஆகிய இரு சாராருக்கும் உணவு, வாசஸ்தலம், உடைகள், மருந்துகள் ஆகிய அடிப் படைத் தேவைகள் வழங்கப்பட்டன.

**கல்வியறிவு பெறுவதற்குரிய ஏற்பாடுகள் :** அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மாணவரும் பிராமண சமயக்கல்வி முறையில் போலவே தனிப்பட்ட பராமரிப்பையும் கவனிப்பையும் பெற்றனர். எனினும் இந்தத் தேவை வினயாவிதிகள் (சங்கத்தைக்கட்டுப்படுத்தும் ஒழுகலாற்றுவிதிகள்) வாயிலாக பௌத்த் தல்வி முறைக்குள் புகுத்தப்பட்டது. இவ்விதிகளின் படி ஒவ்வொரு புதிய மாணாக்கரையும் அல்லது மாணவரையும் தகுந்த யோக்கியதாம்சமுள்ள இரு

(6 ம் பக்கம் பார்க்க)

# மகா விகாரை

மகா விகாரை என்பது ஒரு பொதுச் சொல்லாக இருந்தபோதிலும், இலங்கையில் அது அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட முதலாவது சமய குருமார் ஸ்தாபனத்தையே குறிப்பிடலாயிற்று. அதன் பிரதான பணி புது மாணாக்கர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் புத்த தருமத்தைப் போதிப்பதாகும். ஆனால், இந்தியாவிலிருந்து முதலாவதாகச் சமயத்தூதின் பேரில் வந்த மகத்துவம் பொருந்திய தேரர்களுக்காகக் கட்டப்பட்டதால், அது ஆரம்பத்திலிருந்தே உயர்தரப் படிப்புக்கான ஒரு மையமாகவும் விளங்கியது. கல்விமான்களான சந்நியாசிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இதைக் காணலாம்.

மஹிந்தா கொண்டு வந்த பாளி மொழியிலுள்ள பிரமாணங்களையும், வியாக்கியானங்களையும் சிங்களத்தில் மொழி பெயர்ப்பதே மகாவிகாரை முதலில் கைக்கொள்ள வேண்டிய பணிகளில் ஒன்றாக இருந்தது என்னென்றால், ஒவ்வொருவரும் பௌத்த தருமத்தைத் தமது சொந்த மொழியிலேயே படிக்க வேண்டுமென்பது புத்தரின் அறிவுரை. மூல பாட நூல்களை விளங்கிக் கொள்வதற்குப் பாளிமொழி அறிவு அத்தியாவசியமாயிருந்தபோதிலும், ஒவ்வொரு மட்டத்திலும் சிங்களமே படிப்புமொழியாக இருந்தது.

மொழி பெயர்க்கப்பட்ட நூல்களுடன், வியாக்கியான இலக்கியத்துறைகளிலும் ஏராளமான மூல நூல்கள் வெளியிடப்பட்டன. மகா விகாரை தேரவாடா பாரம்பரியத்திலுள்ள அத்தகதாவில் மூலநூல்களைப் படித்துப் பாண்டித்தியத்தை வளர்ப்பதற்கான மையமாகியது. மகாவிகாரை வெளியிட்ட மகா அத்தகதா அல்லது மூலஅத்தகதா மிகச்சிறந்த உரைவிளக்கமெனக் கருதப்படுகிறது. இது மகா விகாரையை பௌத்த உலகெங்கும் உயர் கல்விப்புலமைக்கான ஒருமத்திய நிலையமாக நிலைநாட்டியது.

மகா விகாரையின் இன்னொரு சிறந்த சாதனையென்னவென்றால், நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, வாய்மொழியில் கர்ண பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்ட பாளிமொழியிலுள்ள பௌத்த சமயப் பிரமாணங்களை எழுத்து வடிவத்தில் ஆக்கும் பிரமாண்டமான பணியை நிறைவேற்றியதாகும். கி. பி. முதலாம் நூற்றாண்டளவில் மகாவிகாரையைச் சேர்ந்த பிக்குகள், இப் பிரமாணங்களை அவற்றின் மூல உருவத்தில் பாதுகாக்க வேண்டுமாயின்; அவை எழுத்திற் பதிவு செய்யப்படுவது ஜீவாதாரமாகுமெனக் கருதினர். அலுவிகாரையில் 500பிக்குகள் இவ் வேலையைச்செய்து முடித்தனர். அதே சமயத்தில் அவற்றின் வியாக்கியானங்களும் எழுத்தில் வடிக்கப்பட்டன. இப்பிடகம் முழுவதும் இடைக்கக்கூடிதாயிருந்த உரை விளக்கங்களும் எழுத்தில் பதிவு செய்யப்பட்டது. இதுவே முதல் முறையாகும்.

பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியதும், இன்றும் கூட மக்களின் மன நிலைகளையும், விழுமியங்களையும், நடத்தையையும் உருவாக்கிவருவதுமான இன்னுமொரு சிரமசாத்தியமான பணியும் நிறைவேற்றப்பட்டது. அஃதாவது, நாட்டைப்பற்றிய வரலாற்றுப்பிரதிகளைத் திரட்டிமுறைப்படுத்தியதாகும். ஒவ்வொரு விகாரையும் தனது வரலாற்றைச் சிங்களத்தில் தொகுப்பது வழக்கமாகும். ஆனால், கி. பி. எட்டாம் நூற்றாண்டில் மகாநாம தேரர் மகா வம்சத்தை வடிவான பாளி மொழிச் செய்யுள்களில் வெளியிடுவதற்காக மகாவிகாரையின் காலக்கிரம வரலாற்றுக்குறிப்புக்களை மட்டுமன்றி மற்றும் ஆதாரத் தகவல்களையும் உபயோகித்தார். மகாவம்சம் தேரவாத பௌத்த கோணத்திலிருந்து நாட்டின் சரித்திரத்தைக் கூறும் கிரமப்படியான ஒரு பதிவேடாகும்.

மகா விகாரை இருந்துவந்ததற்கே இந்தியாவிலுள்ள பௌத்த சந்நியாசிகள் மேற்கொண்ட சமயத்தூது நடவடிக்கைகளே காரணமாகும். எனவே, பௌத்த சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று பௌத்த தருமத்தைப் பரப்புவதாகுமென ஏற்றுக் கொள்ளப்பட்டது. பௌத்த சமயத் தூதுக் குழுக்கள் தென்னிந்தியாவுக்கும், மலையா தீபகற்பத்துக்கும், இந்தோனீசியத் தீவுகளுக்கும் அனுப்பப்பட்டன. ஆதலால், இந்த நாடுகளின் மொழிகளைக் கற்பது ஒரு முக்கியமான படிப்புத் துறையாகியது. சிங்களமொழியிலிருந்த வியாக்கியானங்கள் பாளி மொழியில் பெயர்க்கப்பட்டதற்கு, பௌத்த சமயம் பரவுவதை இலகுவாக்குவதற்கு பௌத்த இலக்கியங்கள் ஒரு பொது மொழியில் இருக்க வேண்டுமென்பது ஒரு காரணமாக இருந்திருக்கலாம்

மகா விகாரையிலிருந்த பிக்குகள் எவ்வளவு ஆழமான கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தார்கள் என்பதையும், விகாரைக்குள் அனுமதிப்பது எவ்வளவு கடுமையாகப் பாதுகாக்கப்பட்டது என்பதையும் இந்தப் பதிவேட்டு உண்மையிலிருந்து அறிந்துகொள்ளலாம். சிங்களத்திலிருந்த அத்தகதாவைப்பாளி மொழியில் பெயர்ப்பதற்காகத் தேரர் புத்தகோசர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தபோது, ஒரு மூலவியாக்கியானத்தை எழுதுவதன் மூலம் வியாக்கியானங்களை மொழிபெயர்க்கும் அவருடைய திறமையை நிரூபிக்குமாறு மகாவிகாரையிலுள்ள பிக்குகள் அவரைக் கேட்டனர். புத்தகோசர் இதைச் செய்தார். தமது கல்விப் பாண்டித்தியத்தை நிரூபிப்பதற்காக அவர் இயற்றிய விசுத்திமக்க, தேரவாத பௌத்தத்தின் ஒரு தரமான பொழிப்புரையாகிவிட்டது. புத்தகோசர் இரு கூட்டாளிகளுடன் புத்ததத்தர், தர்மபாலா ஆகிய இருவரும் இந்தியாவிலிருந்தே வந்தனர்; அப்பொழுது கிடைத்த சகல சிங்கள வியாக்கியான நூல்களையும் பாளியில் மொழி பெயர்த்ததாகக் கூறப்படுகிறது.

"புத்தகோசரின் சாதனையென்னவென்றால், கோட்பாடுகளின் தொகுப்பாக மட்டுமே இருந்து வந்த தேரவாத பௌத்தத்தை ஒரு மெய்யியல் முறையாக விருத்தி செய்துள்ளமையாகும். கோட்பாடுகளில் தேரவாத மேற்கொண்ட பார்வை நிலைகள் புத்தகோசர் தமது நூல்களில் ஸ்தாபித்தவையாக எவ்வளவோ பூரணமாக ஆகிவிட்டன. ஆதலில், தேரவாத பௌத்தம் இரியாம்சையில் அவருடைய சிந்தனை முறையுடனும், வேத வியாக்கியானத்தோடும் ஒன்றித்துவிட்டது. ஆனால், அச்சிந்தனை முறை அவருடையதல்ல; பெருமளவுக்கு அசலாகக் கூட இல்லை. அது அநுராதபுரத்திலிருந்த பௌத்த சந்நியாசிகளின் வட்டாரங்களில் நிலவிய பாரம்பரியத்தின் அடிப்படையையே நெருக்கமாகப் பின்பற்றியது. அவரே ஒப்புக் கொண்டுள்ளது போல, அது புராதன சிங்கள அத்தகதாக்களால் அவருக்காக உருவாக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டுள்ளது" என்று என். தத்தர் தமது "பௌத்த சந்நியாசிகளும் இந்தியாவின் மடாலயங்களும்" என்னும் நூலில் தெரிவித்துள்ளார்.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**([illegible]ம் பக்கத் தொடர்ச்சி)**

மேலதிகாரிகள் – உபாத்தியாயரும் ஆசாரியரும் அல்லது கர்மாச்சாரியரும் – பொறுப பேற்கவேண்டும். உபாத்தியாயர் மாணவனின் கல்வியை கவனிக்க, ஆசாரியார் அல்லது கர்மாச்சாரியார் மாணவனின் நடத்தை ஒழுங்கு முறை பொதுச் சேம நலம் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்வார். இவ்விதமாக ஒரு மகா விகாரையை ஆசிரியர்களும் மாணுக்கர்களும் அடங்கிய பல்வேறு குழுக்களைக் கொண்ட ஒரு மகா சம்மேளனம் என்று கூறலாம். பிராமண சமயக்கல்வி முறையில் போலவே, இங்கும் ஆசிரியர் மாணுக்கர் ஆகிய இருவரின் கடமைகளும் பொறுப்புகளும் நன்கு வரையறுக்கப்பட்டன.

**ஆரம்ப கல்வியின் சாரம்**

விகாரைகள் ஆரம்ப கல்வி உயர் கல்வி ஆகிய இருவகைக் கல்வியும் வழங்கின. ஆதிகால பௌத்த சமயத்தில் கல்வியென்பது பாளியிலுள்ள சமயப் பிரமாணங்களையும் தேரவாத பிரிவினர் ஏற்றுக்கொண்டவாறுன அதன் மெய்யியலையும் கற்பதுடன் நின்றுவிட்டது. ஆனால், ஏறக்குறைய கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் மகாயாண பிரிவு தோன்றியதுடன் படிப்பு அதிக தாராளத் தன்மையுடையதாகியது. விகாரைகளில், குறிப்பாக மகாயாண பிரிவினரின் விகாரைகளில் புகட்டப்பட்ட ஆரம்பக் கல்வி பெருமளவுக்கு இந்தியாவில் போதிக்கப்பட்ட பொதுக் கல்வியின் பரந்த அடிப்படையிலேயே அமைந்திருந்தது. பௌத்த தருமப் படிப்பு ஆரம்ப கல்வியின் அடிப்படையாயிருந்தது. ஆனால், பிராமண சமயக் கல்வி முறையில் போல, வியாகரணம் (இலககணம்), சில்பசாதன வித்தியா (கலைகளும் கைப்பணிகளும்), ஹேது வித்தியா (தருக்கவியல்) அதியாத்ம வித்தியா (உள்ளாத்ம ஞானம்) ஆகியனவும் பாடபோதனையில் சேர்க்கப்பட்டன. மேலும் ஸ்தாபன அமைப்பைப் பராமரிப்பதில் பிக்குகளுக்குப் பயிற்சியளிப்பதும் அவசியமாயிருந்தது. இவ்விதமாக, விகாரைகளைக் கட்டியெழுப்பிப் பராமரிப்பதற்காகக் கட்டடக்கலையிலும், தங்கள் நிலையங்களைத் தயாரிப்பதற்கும் தொழிலும், நோயுற்றோருக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்து ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்வதற்காக மருத்துவ வியலிலும், பண்டகசாலைகளைக் கவனிப்பதற்கும் விகாரைகளை முகாமைசெய்வதற்கும் வணிகவியலிலும் பயிற்சியளிக்கப்பட்ட பிக்குகளைப்பற்றி சுல்ல வக்கவில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால், உயர் தரக்கல்வி பெறச் செல்லும் ஒரு மாணவருக்கு பௌத்த சமயத்தில் மட்டுமன்றி ஐந்து சாஸ்திரங்களிலும் ஒரு பெரிய ஸ்தாபனத்தைத் திறமையாக நடத்துவதற்குத் தேவையான வினையாண்மைகளிலும் அடிப்படை அறிவு இருந்தது.

பௌத்த சமயத்தைப்பாதுகாப்பதும் பரப்புவதும் போன்ற சமூக நோக்கங்களை நோக்கிச் செலுத்தப்பட்ட குறிக்கோள்களிலிருந்தே மகாவிகாரைகளையொட்டிய பிரதான நடவடிக்கைகளில் இரண்டு – கல்வி போதனைகளும் ஆராய்ச்சியும் விருத்தியடைந்தன

பௌத்த தருமத்தை அதன் தூய உருவில் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் கீழ்க் கண்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு அடிகோலியது :

(i) புத்தரின் போதனைகளுக்குத் தலைப்பிட்டு, அவற்றை வகைப்படுத்தி, நியமக் கிரந்தமாக அதாவது திரிபிடகமாகத் தொகுப்பது.

(ii) உரை விளக்க நூல்களைக் கொண்ட பெரிய தொகுப்பு ஒன்றைத் தயாரிப்பது – பௌத்த தருமத்தில் விளங்குவதற்குக் கடினமாயுள்ளவிஷயங்களைத் தெளிவாக்குவதற்காக உரை விளக்கங்கள், விரிவான விளக்கங்கள், வியாக்கியானங்கள் (அத்தகதா) ஆகியவற்றைத் தயாரித்தல். இதற்குப் பெரும் புலமையும் மிக உயர்ந்த நுணுக்கமான பகுப்பாய்வுத் திறனும் தேவைப்பட்டன.

எனவே, பௌத்த இந்தியாவில் உயர்கல்வியூட்டும் முறை பௌத்த சங்கத்தின் நோக்கங்களைச் சாதிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டதென்பது தெளிவாகிறது. மகாயாண பௌத்தம் தோன்றியதுடன் சமயச் சார்பில்லாப் படிப்புகளும் பாடபோதனையில் சேர்க்கப்பட்டன வெனினும், பொதுவாகச் சாமாணியர்கள், ஜாதகக் கதைகளில் விவரிக்கப்பட்டுள்ளது போல, தொழிலுக்கான கல்வியும் சமயச்சார்ப்பற்ற கல்வியும் பெற விகாரைக்கு வெளியேயுள்ள படிப்புத் துறைகளையே நாடவேண்டியிருந்தது. ஆனால் இந்த வரையறைகளிருந்தபோதிலும், மகாவிகாரைகளில் வழங்கப்பட்டவாறு உயர்கல்வி துரிதமாக விரிவடைந்தது; சீன யாத்திரிகர் ஃபா–ஹியன் குறிப்பிட்டுள்ளவாறு, கி. பி. ஐந்தாம் நூற்றூண்டில் தேரவாத பிரிவைச் சேர்ந்த விகாரைகள் மட்டும் ஐந்நூறுக்குக் குறையாதிருந்தன. இவற்றில் சில உ ர்கல்வி வழங்கியிருக்குமென்பது நிச்சயம். இவற்றைத் தவிர, மகாயாண பிரிவுக்கும் மற்றுஞ் சிறிய பிரிவுகளுக்கும் சொந்தமான விகாரைகளும் இருந்தன. கல்வித் தேர்ச்சி அளவில் மட்டுமன்றித் தரச் சிறப்பிலும் விருத்தியடைந்தது. மகாவிகாரைகள் பல கல்விப் புலமைக்கும் பாண்டியத்திற்கும் ஆகக்கூடிய பிரசித்திபெற்றிருந்தன. இதற்கு விகாரைகளில் கல்வி போதித்த ஆசிரியர்களின் அறிவாற்றலே காரணமாகும். இவ்விகாரைகள் பௌத்த உலகின் சகல பாகங்

களிலுமிருந்து மாணவர்களை ஈர்த்தன. இவற்றில் உலகப் புகழ்பெற்றது நாளந்தாவாகும்.

**மேற்கு ஐரோப்பவில் பல்கலைக்கழகப் பாரம் பரியங்கள்**

“பல்கலைக் கழகங்கள் தொடர்ந்து இருந்து வரும் ஸ்தாபனங்கள் என்ற முறையில் அவற்றைஸ்தாபிக்கும் நடவடிக்கை கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலேதான் ஐரோப்பாவில் தோன்றியது. ஆனால், அவை உள்ளடக்கிய பாரம்பரியங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை. **ஸ்டுடியம் ஜெனரேல்** என்னும் பொதுக் கல்விச் சாலைகள் அல்லது உயர் கல்விப்பாடசாலைகள் என்ற அமைப்பிலிருந்தே இப்பாரம்பரியங்கள் உருப்பெற்றன. இந்தியாவில் போலவே ஒவ்வொரு பாடசாலையிலும் புகழ் பெற்ற கல்விமானொருவரும் அவருடைய கல்வியறிவையும் வினைத்திறன்களையும் கிரகித்துக் கொள்வதற்காக அவரைச்சுற்றிலும் திரண்ட மாணவர்களும் அடங்கியிருந்தனர்.

ஸ்டேடியம் என்னும் பொதுக் கல்விச்சாலைகளுடன் இணைந்த உயர் கல்விப் பாரம்பரியங்கள் அயர்லாந்தில் ஏறக்குறைய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாயினவென்றும் அங்கேயே அவை உறுதியாக அதிகரிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டனவென்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆரம்ப வருடங்களில் கூட அயர்லாந்தில் இரு ஸ்டேடியங்கள் இருந்தனவென்றும் மாணவர்கள் பெருந்திரளாக இக் கல்விச் சாலைகளில் வந்து குவிந்தனரென்றும் பதிவேடு கூறுகிறது. ஒவ்வொரு ஸ்டேடியத்திலும் 7,000 மாணவர் வரை படித்தனர். உயர்கல்வியறிவூட்டுவதற்கு இவ்வி நம் பிரக்கியாதியடைந்த நகரங்களில் ஒன்று அர்மாக். அங்குகுள்ள இலக்கிய பாடசாலைகளின்காரணமாக, அந்நகரம் நாகரிகத்தின் தலைநகரமாகியது. அயர்லாந்தின் பிறிஹான் சட்டங்களில் இம் முறையைப் பாதுகாப்பதற்கு விசேஷபாதுகாப்புகள் அடங்கியுள்ளன. பாடசாலைகளின் சுதந்திரத்தையும், தாங்கள் விரும்பிய பாடசாலைகளில் படிக்க மாணவர்களின் உரிமைகளையும் ஒரு பாடசாலையிலிருந்து இன்னொரு பாடசாலைக்கும் ஒர் ஆசிரியரிடமிருந்து மற்றொரு ஆசிரியரிடமும் போய்ப் படிக்கும் சுதந்திரத்தையும் அவை உறுதிப்படுத்தின. ஆசிரியர்–மாணவர் உரிமைகளையும் கடமைப்பாடுகளையும் கூட வரையறுத்து விளக்கிய அச்சட்டங்கள் வறிய மாணவர்களின் பராமரிப்புக்கும் வகைசெய்தன.

இத்தகைய உயர்கல்வி நிலையங்கள் ஐரோப்பாவின் நாலா பக்கங்களிலும் பரவின. இவற்றில் கற்பித்த பிரசித்திபெற்ற கல்வி மான்களால் பல நாடுகளிலிருந்தும் மாணவர்கள் ஈர்க்கப்பட்டனர். இவ்விதமாக “அகில உலகத் தன்மை ஸ்டேடியத்தின் ஓர் அடிப்படைச் சிறப்பியல்பாக ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்தது. மத்திய கால ஐரோப்பாவில் இலத்தீன் மொழியே உயர் கல்விக்குரிய மொழியாக விளங்கியதால், இத்தன்மையைப் பாதுகாப்பது இலகுவாக இருந்தது. அதன் விளைவாக இது கல்வி முறையில் வேரூன்றிவிட்டது.

ஆதிகாலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வந்த இன்னோர் அம்சம் யாதெனில், இந்தப் பாடசாலைகளில் சமயச் சார்ப்பற்ற கல்வியும் சமயக் கல்வியும் அளிக்கப்பட்டதாகும். இவை மெய்யியல், இறையியல் போன்ற நூற் கல்விமாத்திரமன்றித் தொழிற் கல்வியும் புகட்டின. உதாரணமாக, பாரிஸ் மெய்யியலுக்கும் இறையியலுக்கும், பொலோனா சட்டவியலுக்கும் பாலர்னோ மருத்துவவியலுக்கும் பெயர் பெற்று விளங்கின. இந்த உயர்கல்வி மையங்கள் போதனையளிப்பதுடன் நின்றுவிடவில்லை. அறிவை விருத்தி செய்வதும் அவற்றின் அடிப்படைப் பணிகளில் ஒன்றெனக்கருதப்பட்டதென்பதற்குச் சான்றுகள் உள்ளன.

தற்கால அடிப்படையில் ஒரு கூட்டு அமைப்பாக முதலாவது பல்கலைக்கழகம் பொலோனாவிலேதான் ஸ்தாபிக்கப்பட்டது. பொலோனா பல்கலைக் கழகம் உயர்கல்வி பீடமொன்றை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் அமைக்கப்படவில்லை. ஏனென்றால், உயர் கல்வி பீடமொன்று ஏற்கனவே அங்கு இயங்கி வந்தது. ஆனால், மாணவர்களின் சுதந்திரங்களையும் உரிமைகளையும் விசேஷ நல உரிமைகளையும் பாதுகாப்பதற்காக அவர்களைக் கொண்ட ஒரு சங்கமாகவே பொலோனா பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. இக்காலத்தில் ஸ்டேடியம் தனது சட்டப் படிப்புக்கு உலகெங்கும் பிரசித்தியடைந்து விட்டது. ஏறக்குறைய 10,000 மாணவர்கள் இதில் படித்தனர். 16 வெவ்வேறு நடுகளைச் சேர்ந்த மாணவர்களை இது ஈர்த்தது. ஸ்டேடியம் பொலோனா நகருக்கு ஒரு பெரும் பொக்கிஷமாகும் என்பதை உணர்ந்த அந்நகர குடிமக்கள் ஆசிரியர்களின் சுதந்திர இடப்பெயர்வைத் தடுக்கவும், அவர்களுடைய நடவடிக்கைகளை நகர எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி வைக்கவும், இவ்விதம் மாணவர்களின் இடப்பெயர்வுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் தங்கள் நகர சபை (கம்யூன்) மூலம் முயன்றனர். மாணவர்கள் பரம்பரையாக அனுபவித்து வந்த சுதந்திர நடமாட்ட உரிமை மீது நகர சபை விதிக்கும் கட்டுப்பாடுகளை எதிர்த்து மாணவர்கள் எல்லோரும் தெரிவித்த ஆட்சேபனை நடவடிக்கையின் பயனாகவே பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிதமாயின. நகரசபை அதிகாரிகளுக்கும் ஸ்டேடியத்துக்குமிடையே இதே போன்ற மோதல்கள் ஐரோப்பாவின் இதர பகுதிகளிலும் நடைபெற

றன. பொலோனு பல்கலைக் கழக மாணவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் அக் காலத்தில் அனைத்துலக அதி காரியாக விளங்கி பாப்பாண் டவரை அதிதுரிதமாக நடவடிக் கை எடுக்கச் செய்தது. அவர் அக்காலத்தில் விரிவான அள வில் கொள்ளப்பட்ட ஏற்றுக் கொள்ளத்தக்க நம்பிகைகளை ஊர்ஜிதம் செய்யும்) "லெக்ஸ் கிறிடென்டி (நம்பிக்கைச் சட் டம்) என்னும் சட்டத்தின் மூலம் ஸ்டூடியத்தின் பாரம்பரிய நல வுரிமைகளை உறுதிப்படுத்தி னார். அத்துடன் "ஜஸ் உபீக் டொசென்டி (எல்லா இடங் களிலும் போதிக்கும் உரிமை)

# அபயகிரி விகாரை

மகாவிகாரை மட்டுமே உயர்கல்வி பீடமாக விளங்கவில்லை. சமூகவியத் துவம் பொருந்திய இன்னொரு மையம் கி.பி. முதலாம் நூற்றாண்டில் விருத் தியடைந்தது. மன்னர் வட்டகாமினி ஸ்தாபித்த அபயகிரி விகாரை, மகாவி காரை பிக்குகளுடன் கருத்து வேறுபாடு கொண்டு, மகாயான நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்ட சந்நியாசிகளின் மத் திய நிலையமாக விளங்கியது. அபய கிரியின் கண்ணோட்டம் தாராள மனமுடையதாயிருந்தது. அது மற் றும் பிரிவினருடனும், இந்தியாவில் தோன்றிய புதிய இயக்கங்களோடும் தொடர்புகளை ஏற்படுத்தியது. அது சமஸ்கிருத மொழியிலுள்ள மகா யான மூலக்கிரந்தங்களைப் படித்து, மகாயான பாரம்பரியத்துக்கேற்ப, 5 அடிப்படைச் சாஸ்திரங்களின் படிப் பையும் மற்றும் சமயச்சார்பில்லாத துறைகளையும் அறிமுகஞ்செய்தது.

பல்வேறு அரசியல் போமனிகள் நடைபெற்றபோதிலும், பிரிவேனுக்கல்வி முறை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து இருந்து வந்தது. எனி னும், காலப்போட்டத்தில் அது பல உயர்வு-தாழ்வுகளைக் கண்டது. என் றனும் பௌத்தத்தைப் பாதுகாத்து, கல்விப்புலமைப் பாரம்பரியங்களைப் பராமரித்து வந்த மத்திய நிலையங் களாகப் பிரிவேனுக்கள் தொடர்ந்து இருந்து வந்தன. (பதினைந்தாம் நூற் றாண்டிலேதான் பிரிவேனுக்கள் செழித் தோங்கின.)

## 15ஆம் நூற்றாண்டில் பிரிவேனுக்கள்

ஓர் உயர்பிரிவேனு ஸ்தாபிக்கப்பட் டதைப்பற்றியும், அதனெவ்வாறு இயங் கியது என்பதைப் பற்றியும் வேண் டிய தகவல்களைப் பெபிலியானகல் வெட்டிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இக்கல்வெட்டில், ஒரு பிரிவேனுவுக் குத் தேவையான நூலகத்தையும் மாணவர் விடுதியையும் மற்றும் கட் டடங்களையும் கட்டுவதற்காக 25,000 பொற்காசுகளை வழங்கும்படி உத்த ரவிடும் அரச கட்டளை காணப்படு கிறது. போதனாசிரியர்களுக்கும் மற் றும் அலுவலர்களுக்கும் சம்பளம் கொடுப்பதற்காகவும், பாடநூல்களை எழுதுவோரின் சேவைகளைப் பெறுவ தற்காகவும் வழங்கப்பட்ட அறக் கொடைகள் உயர்ந்த கல்வித்தரங்களை ஸ்தாபிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. திரிபிடகத் திலோ அல்லது ஐந்து சாஸ்திரங்களிலோ – ஒரு பிரிவேனுவில் பரம்பரை யாக உள்ள படிப்புத்துறைகள் - பாண் டித்தியம் படைத்தவர்கள் எவரேனுமி ருந்தால், நிரந்தரமதிப்பூதியத்தின் பேரில் போதிக்க அவர்கள் உடனடியாக வேலைக் கமர்த்தப்பட வேண்டுமென்ற கட்டளை யால், உயர் கல்விப்புலமை வாய்ந்தவர் களை ஈர்ப்பதன் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகிறது.

சந்தேஸ பாடல்கள் இக்காலத்தில் பிரிவே னுக்களுக்குள் நடந்தவற்றையும், அவை ஏற்படுத்திய நுண்ணறிவு சார்ந்த நட வடிக்கைகளையும், கலாசார நடவடிக்கை களையும் மிகத் தெளிவாக எடுத்துக்காட் டுகின்றன. எனவே, அபயகிரி விகாரை அறிமுகம் செய்த படிப்புத்துறைகள் வேரூன்றிவிட்டதாகத் தோன்றுகிறது. பிரிவேனுக்கள் சமயக்கல்வி புகட்டுவதற் மட்டுமன்றிச் சமயச்சார்பில்லாத கல்வி புகட்டுவதற்கும் சட்டம், மருத்துவம் போன்ற உயர்தொழில்களுக்குப் பயிற்சி யளிப்பதற்குமுரிய கலாசாலைகளாகி விட்டன. சமயப் படிப்பில் திரிபிடகத் தையும் உரை விளக்க நூல்களையும் படிப்பது உட்பட வேத தத்துவஞான த்தையும் (இந்து மத ஆதார நூல் கள்) ஏனைய இந்திய மெய்யியல்களை யும் படிப்பதும் அடங்கும்.

செய்யுள், நாடகம் உட்பட மொழி யும், இலக்கியமும் முக்கிய படிப்புத் துறைகளாக விளங்கின. சிங்களம், தமிழ், சமஸ்கிருதம், மகதம் (பாளி), பிராகிருதம் ஆகிய மொழிகள் போதிக் கப்பட்டதாக விசேஷமாகக் குறிப்பிடப் படுகின்றன.

ஷாத் பாஷா பரமேஸ்வரா (ஆறு மொழிகளையறிந்த வல்லுநர்) என்னும் பட்டப் பேர் பெற்ற தொட்டகமுவ விஜயபாகு பிரிவேனுவின் தலை மையாசான தொட்டகமுவ ஸ்ரீ ராகுல போன்ற கல்விமான்கள் அங்கு இருந் தார்கள் என்பதைக் கவனிக்குமிடத்து, ஆறும் மொழிகளும் போதிக்கப்பட்டி ருக்கக்கூடும். பொருளியல், வாணியல், எண் கணிதம், கலை, கட்டடக்கலைபோன்ற மற்றும் சமயச்சார்பற்ற கற்கைகளும் பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டன. இக் காலத்தில் இலக்கியத்துறையிலே மகத் தான முயற்சிகள் நிகழ்ந்தன. இலக்கி யப் பயன் மதிப்புள்ள அல்லது புல மைத் தகுதியுள்ள ஒவ்வொரு நூலும் பிரிவேனுவில் தமது கல்வியைப்பெற்ற ஒரு கல்விமானாலேயே எழுதப்பட்டது. நாட்டிலுள்ள மிக உயர்ந்தோர் (மன் னர்களும், இளவரசர்களும்) கூட பிரி வேனுவிலேயே தங்கள் கல்வியைப் பெற்றனர்.

பேராதிக்க அரசுகள் நாட்டை அடி மைப்படுத்தியதுடன், பிரிவேனுக்கள் சீணிக்கத் தொடங்கின. போர்த்துக் கேயர் சில பிரிவேனுக்களைத் தீ மூட்டி நாசம் செய்தனர். பிரிட்டிஷ் ஆட்சி யுடன், அவை மற்றும் காரணங்க ளால் மேலும், சீணித்தன. பிரிட்டி ஷார் வேறு விழுமியங்களை, புதிய தேவைகளை நாட்டுக்குள் கொண்டுவந் தனர். அவர்கள் புகுத்திய கல்விமுறை இத் தேவைகளைப் பூர்த்தி செய்தது. அரசாங்க சேவையில் சேருவதற்கு ஆங் கில அறிவு தேவையென விதிக்கப்பட் டது. இரும்புப்பாதை போக்கு வரவு, தந்திப் போக்குவரத்து போன்ற சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதால், நவீன விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பவியலி லும் பயிற்சி பெற்ற ஆட்கள் தேவைப் பட்டனர். இவற்றைப் பிரிவேனுக்களால் சொல்லிக்கொடுக்க முடியவில்லை.

பௌத்த சமயமே ஒரு தாழ்ந்த நிலை க்குத் தள்ளப்பட்டுப் புறக்கணிக்கப்பட் டது. எனவே, பிரிவேனுக்களும் மதிப் பிழந்தன. எனினும், அவை பௌத்த தருமத்திலும், பரம்பரை அறிவுத்துறை களிலும் போதனையைப் பாதுகாத்து, அளித்து வந்தன. அவற்றிற்கு அரசா ங்க ஆதரவு கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும் அவ்வுதவி மிகக்குறை வாகவே இருந்திருக்கக்கூடும். பிரிவேனுக் களின் போதனைகள், புதிய தேவைகளுக் குப் பொருந்துவதாயில்லை. ஆதலால், உயர் கல்வி பீடங்களாகவும், மகத் தான நுண்ணறிவு சார் முயற்சிகள் நிகழும் மத்திய நிலையங்களாகவும் அவை முன்பு வகித்த கௌரவமான நிலையை இழந்துவிட்டன. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற் பட்ட தேசிய மறுமலர்ச்சி பிரிவேனு முறைக்குப் புத்துயிரளித்தது. இரு புதிய பிரிவேனுக்கள் - வித்தியோதய, வித்தியாலங்கார - ஸ்தாபிக்கப்பட்டன. இவை பௌத்த கல்வி மையங்களாகச் சிறப்புற்றோங்கின.

எனனும் சொற்றொடர் மூலம் பல்கலைக்கழகப் பட்டத்துக்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரமும் வழங்கினார். பாப்பரசரின் அதிகார எல்லை ஸ்டூடியத்தின் அடிப்படைப்பாரம்பரியங்களை இவ்விதம் உறுதிப்படுத்தி, சட்ட சம்மதமுள்ளனவாக ஆக்கியது — அஃதாவது, ஸ்டூடியம் ஓர் அனைத்துலக் கல்வி மையம்; அது அமைந்திருக்கும் இடம் முக்கியமல்ல; ஆசிரியர்களும் மாணவர்களும் இடத்துக்கிடம் செல்வதற்கான சுதந்திரம் ஜீவாதாரமானது; நகரசபை (குடியியல்) அதிகாரிகளின் கட்டுப்பாடுகளின்றிக் கல்விமான்களும் மாணாக்கர்களும் பாதிக்கப்படாதிருக்கும் பாதுகாப்பு ஓரளவு இருக்கவேண்டும்; உட்புறக் கட்டுப்பாடுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

## ஒகஸ்போர்டும் கேம்பிரிட்ஜும்

பிரிட்டனின் இரு மிகப்புராதனமான சர்வகலாசாலைகள் இந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்தனவாகும். ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலை, மத்தியகால ஐரோப்பாவில் முதலாவது பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்ட சமகாலத்தில் அதாவது பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆதியில் அவை சமய–பயனுள்ள கல்விக்குரிய இடங்களாகவே ஸ்தாபிக்கப்பட்டன. எனவே அவை ஒரு குறிப்பான சமூகத் தேவைக்குப் பயன்படும் சமூக ஸ்தாபனங்களாக விளங்க வேண்டும் என்ற கருத்துடனேயே அமைக்கப்பட்டன. அவை ஸ்தாபிக்கப்பட்டதன் சமயத்தன்மை, அவற்றின் பல்வேறு நடவடிக்கைகளில் உறுதியான அடையாளங்களைப் பதித்தது. அச்சர்வகலாசாலைகளில் கிறிஸ்தவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டனர். (புரொடெஸ்டாந்து திருச்சபைகளை ஸ்தாபிப்பதில் போய் முடிந்த பதினாறாம் நூற்றாண்டு சமயச் சீர்திருத்த இயக்கத்துக்குப் பின் இங்கிலாந்து திருச்சபை அங்கத்தவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.) இந்தச் சமய சோதனை (அஃதாவது சமயத்தை அடிப்படையாகக்கொண்டு மாணவர்களை அனுமதிக்கும் முறை) பத்தொன்பதாம் நூற்றாண்டு மத்தியிலேதான் அகற்றப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இங்கிலாந்தில் இவ்விரு சர்வகலாசாலைகள் மட்டுமே இருந்தன. இவை ஒவ்வொன்றும் தத்தம் சொந்தப் பாரம்பரியங்களை விருத்திசெய்துள்ளபோதிலும், இவற்றின் பொதுப் பாரம்பரிய இயல்புகள் வலுவுள்ளனவாயிருப்பதன் காரணமாக மக்களின் உள்ளங்களில் இவை இணைந்தே இடம்பெற்றுள்ளன

ஆதிகாலத்தில், ஐரோப்பாவிலிருந்த மற்றும் கல்வி மையங்களைப் போலவே, இவ்விரு சர்வகலாசாலைகளில் எதுவும் சொந்தக் கட்டடங்களைக்கொண்டிருக்கவில்லை. மாணவர்கள் தங்களைத் தாங்களே பராமரித்துக்கொண்டனர். ஆதலால் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து தங்களுக்கென வீடுகளை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் வழக்கம் விருத்தியுற்றது. (அதிபராகப்) பணியாற்றும் ஏனையோருக்குப் பிரதிநிதித்துவம்வகிக்கவும்ஒரு மாணவர் தெரிவு செய்யப்பட்டார். படிப்படியாக இந்த மாணவர் விடுதிகள் அல்லது மண்டபங்கள் சர்வகலாசாலையின் கட்டுப்பாட்டுக்குள் சென்றன. அதே சமயத்தில் செல்வமிக்க உபகாரிகள் வறியமாணவர்களைத் தாபரிப்பதற்காக மாணவர் விடுதிகளுக்கு அறக்கொடைகளை வழங்கினர். இவை பின்னர் கல்லூரிகளாக—தங்கள் சொந்தச் சட்ட விதிகளைக் கொண்டு, தங்கள் சொந்தப் பட்டதாரிகளால் கட்டுப்படுத்தப்படும் கூட்டு அமைப்புகளாக—வளர்ந்தன. ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிலுள்ள பேரியல் கல்லூரியும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலுள்ள பீட்டா ஹவுஸ் கல்லூரியும் இவ்வாறே ஆரம்பமாயின.

ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையும் திருச்சபையையும் அரசாங்கத்தையும் நிர்வகிப்பதற்குத் தேவையான பயிற்சி பெற்ற நுண்ணறிவுபடைத்த படித்தவர்களை வழங்கியதால் இரு சர்வகலாசாலைகளும் பெரும் பணமுடிப்புகளுடன் கூடிய அறக் கொடைகளைப் பெற்றதுடன் பாப்பரசர்கள், மன்னர்கள் ஆகிய இரு சாராரின் ஆதரவையும் அனுபவித்து வந்தன. இவ்விதமாக அரசாங்கத்துக்கு அரசியல் மதியூகிகளையும் சிவில் சேவை ஊழியர்களையும் வழங்கும் ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையின் பாரம்பரியம் ஆதிகாலமுதலே இருந்து வந்த ஒன்றாகும். இது ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையின் சமயோபதேச பிரார்த்தனையில் அடங்கியுள்ளது: "திருச்சபையிலும் அரசாங்கத்திலும் ஆண்டவனுக்கு ஊழியம் புரிய ஏற்ற தகைமையுள்ளவர்கள் அடுத்தடுத்து வருவதில் ஒரு போதும் குறை ஏற்படாதிருக்குமாக".

ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையும் புவியியல் முறையில் தனித்தனியாக எட்ட அமைந்திருப்பதும், அவற்றிலுள்ள கட்டடங்களின் சிற்பவியல் மாட்சிமையும், விசாலமான மைதானங்களும், அவற்றிலுள்ள விரிவான வசதிகளும், சில குறிப்பிட்ட கற்கைத்துறைகளில் அவை பெற்றுள்ள பிரசித்தியும், அவற்றின் வளமார் பாரம்பரியங்களும், வழக்கமாக அவற்றில் படிக்கவருவோரின் சிறப்புத் தகைமையும், அவற்றில் உள்ள மண்டபங்களில் பெரும்பாலான மாணவர்கள் இன்றும் ஆனந்தமாக அனுபவிக்க கூடியதாயிருக்கும் கூட்டு வாழ்க்கையும்—அவற்றிற்குச் சில சிறப்பியல்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியுள்ளன. இச் சிறப்பியல்புகளே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்படுவதைப் பெருமளவுக்கு உருவாக்கின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இங்கிலாந்தில் இருந்த சர்வகலாசாலைகள் ஒக்ஸ்போர்டும் கேம்பிரிட்ஜும் மட்டுமே என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். ஆதலால், பிரிட்டனில் மட்டுமன்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பரந்திருந்த தூரப்பிரதேசங்களிலும் கூட உயர்கல்விக்கு அவைகளே அதி சிரேஷ்ட முன்மாதிரிகளாக விளங்கின. தூரந்தொலைவிலுள்ள குடியேற்ற நாடுகளில் கூட பிரிட்டிஷ் கல்வி முறையின் செல்வாக்குக்கு உட்பட்ட பெற்றோர் பலரின் நோக்கம், தமது பிள்ளைகளை ஒக்ஸ்போர்ட் அல்லது கேம்பிரிட்ஜுக்கு அனுப்புவதாகவே இருந்தது. குடியேற்ற நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட பல சர்வகலாசாலைகள் அவைகளுடைய பாரம்பரியங்களின் பலத்த செல்வாக்குக்கு உட்பட்டன.

## ஒரு பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கருதுகோள்களில் சில :

இரு முக்கியமான சர்வகலாசாலைப் பாரம்பரியங்களைப்பற்றி மேலே தரப்பட்ட விவரங்கள் ஒரு பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கருதுகோள்களில் சிலவற்றை வெளிக்கொணருகின்றன:

1. ஒரு பல்கலைக்கழகத்தின் கருவூலம் ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். பல்கலைக்கழகம் ஒரு நிலையான இடத்தில் அமைந்திருப்பதோ அல்லது அதன் கட்டடங்களோ அதன் கருவூலமாகா.
2. பல்கலைக்கழகம் என்பது, கலைகளின் அறிவு, தொழிற்பயிற்சி ஆகிய இரண்டும் சம்பந்தமாக ஒரு சமூகத்தின் அதி உயர் அறிவுத் தேவைகளை வழங்கும் ஒரு சமூக ஸ்தாபனமாகும்.
3. ஒரு பல்கலைக்கழகத்தின் பிரதான குறிக்கோள், அறிவைப்பேணிப் பாதுகாப்பதும், பரப்புவதும் விரிவாக்குவதுமாகும். இது போதனை, ஆராய்ச்சி, விரிவாக்க வேலைகள் மூலம் சாதிக்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் மற்றும் நடவடிக்கைகள் இவற்றிலிருந்தே தோன்றுகின்றன. அவை இந் நடவடிக்கைகளை நிறைவாக்கி, வளப்படுத்துகின்றன.
4. ஒரு பல்கலைக்கழகத்தின் உற்பத்தி தொழில் சந்தையில் உயர் மட்டத்தில் உள்ளீட்டை வழங்குகிறது. பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு நிர்வாகத்திலும், உயர்தொழில் துறைகளிலும் ஆக உயர்ந்த நியமனங்கள் திறந்திருக்கின்றன. இத்தகைய வேலைகளுக்குப் பயிற்சி பெற்ற நுண்ணறிவு மட்டுமன்றி மேம்பட்ட ஆளுமைக் குணங்களும் தேவைப்படுகின்றன.
5. சமூக ஸ்தாபனம் என்ற முறையில் பல்கலைக்கழகம் உயர்கல்விக்கான சமூக அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதுடன், சமூக மாற்றங்களுக்கேற்ப நடந்து கொள்ளவேண்டியுமிருக்கிறது. இவைகளே ஒரு பல்கலைக்கழகத்தின் விசேஷ குறிக்கோள்களையும், மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோல்களையும், படிப்புத்துறைகளையும், பயிற்சி நெறிகளின் உள்ளடக்கத்தையும், ஆசிரியர்களின் தகைமைகளையும், முக்கிய கல்வி நடவடிக்கைகளையும் வழங்கப்படும் வசதிகளையும் நிர்ணயிக்கின்றன.
6. அறிவு என்பது அனைத்துலகத் தன்மை வாய்ந்ததாயின், ஒரு பல்கலைக்கழகம் மாணாக்கர்களின் சர்வதேச சமூகத்துக்குச் சொந்தமானதாகும். ஆதலால், அது எந்தச் சமுதாயத்துக்குள்ளே பணியாற்றுகின்றதோ அந்தச் சமுதாயத்தின் தேவைகளையும், சர்வதேச கல்விப்புலமைத் தேவைகளையும் அனுசரித்து நடக்க வேண்டியிருக்கிறது.
7. நுண்ணறிவுசார் நடவடிக்கைகள் நிகழும் மத்திய நிலையம் என்ற முறையில் ஒரு சர்வகலாசாலை சமுதாயத்தின் பெருமதிப்பைப் பெறுகின்றது. எனவே, காணிகள் கட்டடங்கள் மற்றும் வசதிகளின் உருவில், அரசாங்கமும், சமூகமும் வழங்கக்கூடிய சிறந்தவற்றை அது பெறுகின்றது. மாணவர்களின் உடல் வளர்ச்சித் தேவைகளும், கல்வியறிவுத் தேவைகளும் நன்கு கவனிக்கப்படுகின்றன. ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்குப் பெருங்கௌரவம் கிடைக்கின்றது.
8. ஒரு பல்கலைக்கழகத்துக்கு அதன் குறிக்கோள்களைச் சாதிக்கப் பல சுதந்திரங்கள் வழங்கப்படுகின்றன. கல்வியறிவுச் சுதந்திரம், அதன் சொந்தக் கட்டுப்பாட்டு முறைகளைப் பிரயோகிக்கவும் அதன் சொந்தத் தொழில் தரங்களை உருவாக்கவும் சுதந்திரம் ஆகியன. ஒரு சமூக ஸ்தாபனம் என்ற முறையில் அதன் கடமைகளை அது நிறைவேற்றத் தவறினாலன்றி மற்றப்படி ஆகக்குறைந்த வெளித்தலையீட்டுடன் அதன் சொந்த அலுவல்களை நிர்வகிக்க அதற்குச் சுதந்திரமுண்டு.

ஒரு பல்கலைக்கழகம் கட்டடங்கள், நிதிகள், புத்தகங்கள் மற்றும் வசதிகளின் உருவில் எத்தகைய சொத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும், அதன் மிகப்பெரிய சொத்து அதன் ஆசிரியர்களாவர். ஒரு பல்கலைக்கழகத்தின் பயன்படு திறன் அவர்கள் வழங்கும் ஆதாரத்திலேயே தங்கியுள்ளது. அவர்களுடைய கல்விப்புலமையின் சிறப்பு, மாணவர்களிடத்து அவர்கள் காட்டும் அக்கறை ஒரு பல்கலைக்கழகத்தின் போதனை, ஆராய்ச்சி, விரிவாக்க வேலைகள், ஆகிய பிரதான பணிகளை ஆற்றுவதில் அவர்கள் காட்டும் ஊக்கமும், விடாமுயற்சியும் ஆகியனவே ஒரு பல்கலைக்கழகத்தின் சீர் சிறப்பை நிர்ணயிக்கின்றன.

## இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி

சமூக தாபனங்கள் என்ற முறையில் பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி சம்பந்தமாகச் சமூகத்தின் தேவைகளை எவ்வளவு தூரத்துக்கு நிறைவேற்றுகின்றன? அவை எந்த அளவுக்கு அறிவு நடவடிக்கைகளில்சுறுசுறுப்பாகவும் ஊக்கத்துடனும் நிகழும் மையங்களாக இருக்கின்றன? போதனை எவ்வளவு பயனுள்ளதாயுள்ளது? ஆராய்ச்சி எவ்வளவு விரிவாகவும் பொருளுள்ளதாகவும் நடைபெற்று வருகிறது? உயர்கல்வி சம்பந்தமாகத் தற்போதைய நிலைமை பற்றிய கணிய முறைத் தரவுகள் அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன. ஒரு சமூகஸ்தாபனம் என்ற முறையில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விஷயம் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. அதைப் பாதித்த ஒன்றோடொன்று பின்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள சக்திகள் சிக்கலான தன்மையைப் புரிந்து கொள்வதற்காக, அது வரலாற்றுக் கோணத்திலிருந்து ஆராயப் படுகின்றது.

நாட்டில் பௌத்த பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்கல்விக்குரிய விரிவான முறையொன்று இருந்து வந்த போதிலும், தற்கால பல்கலைக்கழகங்கள் இச்சுதேச முறையிலிருந்து அபிவிருத்திபெறவில்லை. முதலாவது பல்கலைக்கழகம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பிரிட்டிஷ் மாதிரியில் உண்டாக்கப்பட்டது. அதற்குப் பின் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலும் அதே அடிப்படைக் கட்டுக்கோப்புபாதுகாக்கப்பட்டது.

**1920 ம் ஆண்டுக்கு முன்பு ..**

பிரிட்டிஷார் இலங்கையை அடிமைப்படுத்தியதுடன், பிரிட்டிஷ்முறையை அடிப்படையாகக் கொண்ட ஓர் இடைநிலை (செகண்டரி)க் கல்வி முறை இலங்கையில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இது காலனி ஆதிக்கத்தின் தேவைகளையும் நலன்களையும் பூர்த்திசெய்வதற்காக ஏவப்பட்டது. இப்பாடசாலைகள் நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டன. கல்வி ஆங்கிலத்தில் புகட்டப்பட்டது. காசு கொடுத்துப் படிக்கக்கூடிய நிலையிலிருந்தவர்களுக்கு அது கிடைக்கக்கூடியதாயிருந்தது. ஆங்கிலப் பாடசாலைகள் சமூகம் மேல் நோக்கி உயர்வதற்கு வகை செய்தன, அரசாங்க சேவையில் நடுத்தரங்களிலும் குறைந்த தரங்களிலுமுள்ள உத்தியோகங்களுக்குத் தேவையான வரையறுத்த தொகுதியினரை உற்பத்திசெய்தன. மிகத் தாழ்ந்த-கீழ்த்தர மட்டத்தில் "தாய்மொழி"ப் பாடசாலைகள் பாமர மக்களுக்காக நடைபெற்றன. இப்பாடசாலைகளில் கல்வி இலவசமாகச் சிங்களத்திலும், தமிழிலும் அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பல்கலைக்கழகக் கல்வியின் சிறப்பியல்புகளாக விளங்கிய அம்சங்களில் பெரும்பாலானவை இடைநிலைப் பாடசாலை முறையிலிருந்தே தோன்றின. பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்க வேண்டியிருந்த பிரதான பிரச்சினைகள் இந்த இரட்டைக் கல்வி முறையிலிருந்தே முளைத்தன. இது புதிய உயரிகள் வர்க்கமொன்றைச் சிருஷ்டித்ததுடன் ஒரு சமூகப் பிளவையும் உண்டாக்கியது.

**கல்லூரிகள்;** பல்கலைக்கழகக்கல்வி எனக் கூறப்படும் கல்வி 1920 ம் ஆண்டில் பல்கலைக்கழகக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதுடனேயே வழங்கப்பட்டது. ஆனால், உயர்கல்விக்கானதேவையை இடைநிலை (செகண்டரி)ப்பாடசாலைகளே பூர்த்திசெய்தன. இவற்றில் பலதரப்பட்ட வகுப்புக்களை ஏற்கனவே அமைத்திருந்தனர். இந்தக் "கல்லூரிகள்" லண்டன் சர்வகலாசாலை, இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகள் ஆகிய வற்றின் வெளிவாரிப் பட்டங்களுக்கு மாணவர்களைப் பயிற்றின. அரசாங்கத்தால் நடத்தப்படும் ஸ்தாபனமாயிருந்த இராணியின் கல்லூரி (பின்னர் றோயல் கல்லூரியானது)யைத் தவிர இந்தக்கல்லூரிகள் யாவும் கிறிஸ்தவ மிஷனரி சங்கங்களாலேயே நடத்தப்பட்டன. மேற்கத்திய வைத்திய முறையில் வைத்திய உதவியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒரு வைத்தியக்கல்லூரி அமைக்கவேண்டியதன் அவசியத்தைஅரசாங்கம் விரைவில் உணர்ந்தது. எனவே, 1870 ம் ஆண்டில், ஒரு வைத்தியக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அது விரைவில் வைத்திய தொழில் நடத்துவதற்குப் பூரண தகுதியுள்ளவர்களை உற்பத்தி செய்ய வல்ல ஒரு ஸ்தாபனமாக விருத்தியடைந்தது. அத்துடன் பிரிட்டிஷ் பொது வைத்திய சபையின் அங்கீகாரத்தையும் பெற்றது. எனவே, தற்கால பல்கலைக்கழகக்கல்வி ஆரம்பமாவதற்கு அந்தக் "கல்லூரிகளும்" வைத்தியக் கல்லூரியும் தான் வித்திட்டன. இது, பொதுக் கல்வியும் தொழிற் பயிற்சியும் வழங்கிய பண்டைக்கால உயர்கல்வி நிலையங்களின் வழக்கத்தை ஒத்தே நடைபெற்றுள்ளது.

**பல்கலைக்கழக இயக்கம்**

கல்லூரிகளிலுள்ள மாணவர்களில் போராற்றல் படைத்தவர்கள் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் படிப்பதற்காகப் புலமைப்பரிசிலின் பேரில் அனுப்பப்பட்டனர். பணவசதியுள்ள பெற்றோர்களும் இதே போலத்தங்கள் பிள்ளைகளை பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் படிக்க அனுப்பினர். இவ்விதமாக, பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் உயர் கல்வி பயின்ற புதிய உயரிய வர்க்கமொன்று தோன்றியது. இவர்களே தேசிய மறுமலர்ச்சிக்குரிய தலைவர்களைத் தோற்றுவித்தனர். இத் தேசிய மறுமலர்ச்சியின் ஓர் அங்கமே பல்கலைக்கழக இயக்கம். அரசாங்கம் பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்று இந்த இயக்கம் கிளர்ச்சி செய்தது. வெளிநாட்டுச் சர்வகலாசாலைகள் பரீட்சைகளில் மாணவர்கள் சித்தி பெறுவதிலேயே அக்கறை கொண்டுள்ளனவாதலின், அச் சர்வகலாசாலைகளின் வெளி வாரிப்பட்டங்களைப் பெறுவதற்காகப் பாடுபடும் முறை உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யாததுடன் உண்மையான கல்வியையும் வழங்கவில்லையென்று பல்கலைக்கழக இயக்கம் சுட்டிக்காட்டியது. இவ் வியக்கத்தை ஆரம்பித்தவர்கள் ஒரு சர்வகலாசாலை எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றிப் பரந்த கருதுகோளைக் கொண்டிருந்தனர். சர்வகலாசாலை என்பது தயிர்க்கடையும் மத்து போலப் பட்டங்களைக்கடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளித்தள்ளும் ஒரு தொழிற்சாலையைப்போலன்றி, தேசிய கலாசார மறுமலர்ச்சிக்கான மையமாக விளங்கும் ஒரு சமூக ஸ்தாபனமாகவும் நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் ஒரு மத்திய நிலையமாகவும் விளங்கவேண்டுமென்று அவர்கள் கருதினர். மனித நலன்களுக்கும், மனிதனின் உள்ளத்துக்கும் மிக முக்கியமான இடமளிக்கும் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளின் சிறந்த பாரம்பரியங்களுக்கு ஒப்ப, பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. அதே சமயத்தில் புதிய பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளின் அடிப்படையில் விஞ்ஞானத்துக்கும் தொழில் நுட்பவியலுக்கும் உயர்ந்துவரும் கோரிக்கைக்கு உரிய ஏற்பாட்டை அது செய்யுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

**பல்கலைக் கழகக் கல்லூரி ஸ்தாபிதம்:** – ஆனால், பல்கலைக்கழகத்தின் அறிவிக்கப்பட்ட நோக்கங்களில் ஒன்று அரசாங்கத்தின் சொந்த நலன்களுக்கு எதிராக வேலை செய்யக்கூடியதாயிருந்தால், இத்தகைய ஓர் ஸ்தாபனத்தை அமைக்க அரசாங்கம் விரையும் என எதிர்பார்க்க முடியாதிருந்தது. இவ்விதமாக, பல்கலைக்கழகமொன்று அமைக்கப்படவேண்டுமென்ற கருத்து முதல் முறையாக வெளியிடப்பட்ட காலத்திலிருந்து பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் அரசாங்கத்தின் நோக்கங்களுக்கு முரணாக இருந்து வந்தன. எனவே, ஏதோ காரணங்களுக்காக, பல்கலைக் கழகமொன்றை ஸ்தாபிக்கும் விஷயம் 1920 ம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது. 1920 ம் ஆண்டில்பல்கலைக்கழகக் கல்லூரி பூரணமடையா உருவில் கொழும்பிலே அமைக்கப்பட்டது. நிதிவசதி யின்மையே இதற்குப் பிரதான காரணம் எனக் கூறப்பட்டது. –"பரிதாபமான சமயோபாய—ஆரம்

## இலங்கையில் பல்கலைக் கழக கல்வி வளர்ச்சி வரலாறு

1870 — வைத்தியக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

1881 — லண்டன் சர்வகலாசாலையின் வெளிவாரிப் பட்டங்களுக்கான பரீட்சை முதல் முறையாக நடத்தப்பட்டது.

1889 — மருந்துவத்திலும், அறுவை வைத்தியத்திலும் புலமைச் சான்றிதழ்கள் (டிப்ளோமா) வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமாக வைத்திய கல்லூரி பிரிட்டிஷ் பொது வைத்திய கல்லூரியினால் அங்கீகரிக்கப்பட்டது.

1920 — லண்டன் சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டதாகக் கொழும்பில் பல்கலைக் கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

1942 — வைத்தியக் கல்லூரியையும் இணைத்து, கலைகள், கீழைத்தேய மொழிகள் விஞ்ஞானம், மருத்துவம் ஆகிய போதனாபீடங்களைக் கொண்டதாக இலங்கைப் பல்கலைக்கழகம் 1942-ஆம் வருட 20-ஆம் இலக்கமுள்ள இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டத்தினால் உண்டாக்கப்பட்டது.

1947 — விவசாய, மிருக வைத்திய திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது.

1949 — சட்டத் திணைக்களமும், விவசாய, மிருக வைத்திய திணைக்களத்தின் மூன்றாவது வருட—இறுதிவருடப் பகுதிகளும் முதலாவதாக பேராதனையிலுள்ள பல்கலைக்கழகப் பூந்தோட்டத்துக்கு மாற்றப்பட்டன. எந்திரவியல் போதனாபீடம் ஸ்தாபிக்கப்பட்டது.

1952 — கலை - கீழைத்தேய மொழிக்கல்வி போதனாபீடங்களிலிருந்து மாணவர்கள் பேராதனைக்கு மாற்றம்.

1957 — சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் வாயிலாகப் படிக்க முதலாவது மாணவர் குழு தெரிவு.

1959 — வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

1961 — பேராதனையில் ஓர் இரண்டாவது விஞ்ஞான போதனாபீடம் ஸ்தாபிக்கப்பட்டது.

1961 — பேராதனை பல்கலைக்கழகத்தில் வதிவற்ற "வெளிவாரி" மாணவர்கள் முதலாவதாகச் சேர்க்கப்பட்டனர்.

1962 — பேராதனையில் ஓர் இரண்டாவது வைத்திய பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது.

1963 — கொழும்பில் ஓர் இரண்டாவது கலை - கீழைத்தேய மொழி கல்வி போதனாபீடம் ஸ்தாபிக்கப்பட்டது.

1964 — எந்திரவியல் போதனாபீடம் கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாற்றம்.

1966 — 1966-ஆம் வருட 20-ஆம் இலக்கமுள்ள உயர்கல்விச் சட்டம் 1942-ஆம் வருட 20-ஆம் இலக்கமுள்ள கட்டளைச்சட்டத்தையும், 1958-ஆம் வருட 45-ஆம் இலக்கமுள்ள சட்டத்தையும் நீக்கிவிட்டது. உயர் கல்விக்கான தேசிய சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இச்சட்டம் பல்கலைக்கழகங்கள் மீது அரசாங்கத்துக்குக் கட்டுப்பாட்டதிகாரமிருக்க உத்தியோகபூர்வமாக ஏற்பாடு செய்தது. இந்தச் சட்டத்தின் கீழ்வந்த வித்தியோதய, வித்யாலங்கார பல்கலைக்கழகங்கள் நவீன சமயச்சார்பற்ற பல்கலைக் கழகங்களாக மாற்றப்பட்டன.

1967 — கொழும்புப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

1967 — மொறட்டுவையிலுள்ள கட்டுபெத்தையில் உயர்தர தொழில் நுட்பவியல் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

1972 — 1972-ஆம் வருட 1-ஆம் இலக்கமுள்ள இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் இயற்றப்பட்டது: இதன் வாயிலாக ஒரே சீரான பல்கலைக்கழகக் கட்டுக்கோப்பு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

1974 — யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பம்.

1974 — பட்டப் பின்னிலைப்படிப்பு நெறிக்கான மருத்துவக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம் என்பதனுல் சகித்துக் கொள்ளலாம்" என்று சர். பொன்னம்பலம் அருணுசலம் குறிப்பிட்டார். அது லண்டன சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்ட ஓர் அரசாங்க ஸ்தாபனமாயிருந்து. வெளிவாரிப் பட்டங்களுக்கு லண்டன் சர்வகலாசாலை நிர்ணயித்த கற்கை நெறிகளும் பாடதிட்டங்களுமே பல்கலைக்கழகக் கல்லூரியில் பின்பற்றப்பட்டன.

பிரிட்டிஷ் முறைக்கிணங்க, பல்கலைக்கழகக் கல்லூரியில் கல்விபயில்வதற்குப் பணம் செலுத்த வேண்டியிருந்தது. ஆதலால், பணக்காரர்களின் பிள்ளைகளே ஏகபோகமாக இங்கு படித்து வந்தனர். உள்ளுறை வசதிகள் வரையறுக்கப்பட்டிருந்தன. பௌத்த மகாவிகாரைகளிலும் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளிலும் நிலவிய பாரம்பரியங்களின் படி தகுந்த யோக்கியதாம்சமுள்ள ஓர் ஆசிரியர் மாணவனைக் கிட்ட இருந்து மேற்பார்வை செய்வதற்கும் கவனிப்பதற்கும் இக்கல்வி முறை வகைசெய்யவில்லை. கூட்டு வாழ்க்கையின் வளமார் தாக்கம் ஏற்படுவதற்கும் இது வழியமைக்கவில்லை. இவ்விதமாக, அதன் கட்டுக்கோப்பின் காரணமாக, அங்கு நிகழ்ந்த பிரதான நடவடிக்கைகள் ஒரு வெளிநாட்டுப் பட்டத்தைப் பெறுவதிலேயே நாட்டமுற்றிருந்தன. குறிப்பாக, இந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்றே பல்கலைக்கழக இயக்கத்தை ஆரம்பித்த முன்னோடிகள் எண்ணியிருந்தனர்.

**கற்கை நெறிகள்:** கலைகள், கீழைத் தேய கல்வி, விஞ்ஞானம். தேசிய அபிவிருத்திக்கு உதவியாயிருக்கக்கூடியவையும் முக்கியமான படிப்புத்துறைகளென கருதப்பட்டவையுமான வணிகவியல் விவசாயவியல் ஆகியவற்றில் கற்கை நெறிகள் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஏற்படுத்தப்படவில்லை. பல்கலைக்கழகக் கல்லூரியைத் தேசிய – கலாசார மறுமலர்ச்சிக்குரிய ஒரு மையமாக்கும் இலட்சியத்தைச் சாதிப்பதற்கு எடுக்கப்பட்ட ஒரே ஒரு நடவடிக்கை கீழைத்தேயக் கல்வித் துறையை அமைத்ததாகும். ஆனுல், இதுவும் சாரமற்ற ஒரு கற்கை நெறியாகவே இருந்தது. இதன் உள்ளடக்கமான பாடங்களும் லண்டன் சர்வகலாசாலையாலேயே நிர்ணயிக்கப்பட்டன. பொருளாழத்தில், உயர் பிரிவேனுக்களில் இத்துறைகளில் கற்பிக்கப்பட்ட கல்வியுடன் இவற்றை ஒப்பிட்டுக்கூற முடியாது. போதனு மொழி ஆங்கிலமாக இருந்தது. சிங்களமும் தமிழும் படிப்பது கூட ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. இவ்விதமாக, பல்கலைக்கழக இயக்கத்தை ஆரம்பித்தவர் விளக்கிக் கூறியவாறு, சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பதிலாக, பல்கலைக்கழகக் கல்லூரி மேனுட்டுக்கல்விமுறையை வளர்த்து வரும் ஒரு கருவியாகி, அதை மென்மேலும் அரண் செய்து ஆழமாகப் பதித்து, புதிய உயரிகள் வர்க்கமொன்றை ஸ்தாபித்தது. சுதேசக்கல்விப் பாரம்பரியங்களிலிருந்து அடியோடு பெயர்க்கப்பட்ட இந்த வர்க்கம் புதிய கல்வி முறை (மேனுட்டுகல்வி முறை) யிலும் பலமாக வேரூன்றவில்லை. அரசாங்க நிர்வாகத்துக்கும், ஆசிரியர் சேவைக்கும் தேவையான ஆட்களை வழங்குவதே அதன் பிரதானதொண்டாயிருந்தது.

**பட்டப் பின்னிலைப் படிப்பு**

பல்கலைக்கழகக் கல்லூரி பட்டப்பின்னிலைப் படிப்புக்கு ஏற்பாடுசெய்யவில்லை. உயர்தரப் படிப்புக்கான தகுதியைப் பெற்றவர்கள் லண்டனுக்குத் தான் போகவேண்டியிருந்தது. பல்கலைக்கழகக் கருதுகோளைப் போதனையுடன் வரையறுத்தன் விளைவு இரட்டிப்பானது.

கல்வி கற்கும் நிலையம் என்ற முறையில் பல்கலைக்கழகக் கல்லூரியின் வளர்ச்சியை அது உறுதியாகத் தடுத்து விட்டது. அது மாணவர்கள் கல்வி கற்கும் ஓர் இடமாக மட்டுமே இருந்தது, மாணவர்கள் சுறுசுறுப்பாகவும் ஊக்கத்தோடும் அறிவு நடவடிக்கைகளில் ஈடுபடும் இடமாக அது விளங்கவில்லை. உதாரணமாக, விஞ்ஞானமுன்னேற்றத்துக்கான இலங்கைச் சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான தொடக்க முயசியைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் எடுக்கவில்லை, ஆனுல், ஓர் அரசாங்கத்திணைக்களத்தின் தலைவரான டாக்டர் டி என். வாடியா எடுத்தார். இரண்டாவதாக, வெளிநாட்டில் பயிற்சி பெற்ற மாணவர்

1975 — பட்டப்பின்னிலைப்படிப்பு நெறிக்கான விவசாயக்கழகமும், பட்டப்பின்னிலைப் படிப்புநெறிக்கான பாளி - பௌத்த கல்விக்கழகமும், அழகியல் கலைகள் படிப்புக்கான கழகமும், தொழிலாளர் கல்விக்கழகமும் ஸ்தாபிக்கப்பட்டது.

1977 — சுதேச வைத்தியக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

1978 — 1978ஆம் வருட 16ஆம் இலக்கமுள்ள பல்கலைக்கழகங்கள் சட்டப்படி பல்கலைக்கழக மானியக் கமிஷன் (ஆணைக்குழு) ஸ்தாபிக்கப்பட்டது. ஒரே சேர்க்கப்பட்ட கட்டுக்கோப்புக்குள் இருந்து ஆறு வளாகங்கள் தனித்தனியான பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டன.

1978 — உயர்கல்வி அமைச்சொன்று உண்டாக்கப்பட்டது. இந்த அமைச்சின் செயலாளர் பல்கலைக்கழக மானியக் கமிஷனின் தலைவராகவும் இருப்பார்.

1979 — றுகுணை பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

1979 — அம்பாறையில் பேராதனை வளாகமொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

1980 — திறந்த வெளிப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

1982 — மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உள்நாட்டுத் தேவைகளு டன் எத்தகைய சம்பந்தமும் கொண்டிராத நிபுணத்துவ துறைகளிலும், குறையபிவிருத் தியையே கண்டுள்ள ஒரு குடி யேற்ற நாட்டில் மீண்டும் உண் டாக்க முடியாத நிலைமைகளி லும் தங்களுடைய சிறப்புப் பயிற்சியைப் பெற்றனர். இது இத்தகைய பயிற்சிபெற்ற தனியாளுக்கு விரக்தியை ஏற் படுத்தியதுடன், நாட்டின் கோணத்திலிருந்து பார்க்குமி டத்து, நாட்டுக்கு பயன்படாத வீண் விரயமுமாகும்.

**வதிவு வசதிகளைக்கொண்ட பல்கலைக்கழகமொன்றை ஸ்தா பிக்க முயற்சி:-** எதிர்கால பல் கலைக்கழகத்தின் உட்கருவாக அமைய வேண்டியிருந்த பல் கலைக்கழகக் கல்லூரி ஒரு சிறிய கல்வித்தாபனமாக இருந்தது. அதன் கற்கை நெறியின் வாய் ப்புகள் அகலத்திலும் ஆழத்தி லும் வரையறுக்கப்பட்டிருந்த தன. ஒரு வெளி நாட்டுச் சர்வகலாசாலையின் பரீட்சைக ளுக்கும் தேவைகளுக்கும் ஏற் பத் தொழிற்படும் நிலையிலிரு ந்தது; பிரதானமாக நிதி வசதியின்மையைக் கருத்திற் கொண்டு ஓரிடத்தில் ஸ்தாபிக் பட்டிருந்தது. எனவே, எதிர் கால பல்கலைக்கழகம் கொழும் புக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும்; அது உள்ளுறைவச திகளுடன் ஒரு கலாசார மறு மலர்ச்சி மையமாகத் திகழ் வதற்கேற்ற இடத்திலும் மை தானத்திலும் கட்டடங்கள் அமைந்திருக்க வேண்டும் என்று ஒரு சக்திவாய்ந்த குழு வாதாடியது. இக்கருத்தை அக்காலத்திலிருந்த மந்திரி சபை ஏற்றுக்கொண்டது; வாச வசதிகளுடன் கூடிய பல்கலைக் கழகமொன்று கொழும்புக்கு வெளியே ஸ்தாபிக்க வேண்டு மென்ற முயற்சியைத் தொடங் கியவர்கள் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை கள் அமைத்த சூழலிலும், அங்கு நிகழும் வாழ்க் கையிலும் ஆட்கொள்ளப் பட்டவர்கள் என்பதில் யா தொருவிதமான சந்தேகமு மில்லை. எனினும், அது பௌத்த உயர்கல்விப் பாரம் பரியங்களுக்கு ஏற்றதாகவும் இருந்தது. ஆனால், அன்று நிலவிய அரசியல் சூழ்நிலை யில் பல்கலைக்கழகக் கல்வி முதல் முக்கிய இடம் பெறக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை. எனவே, பல்வேறு காரணங் ளுக்காக, ஒரு பல்கலைக்கழக த்தை ஸ்தாபிக்கும் விஷயம் தாமதமடைந்தது. 1942 ம் ஆண்டிலே தான் அதுவும் இரண்டாவது உலக மகாயுத் தத்தின் நெருக்கடி நிலைமைக ளிலிருந்து தோன்றிய நடை முறைக் காரணங்களினால் – அதாவது வினாப்பத்திரங்களை யும் விடைப்பத்திரங்களையும் லண்டனுக்கு அனுப்புவதிலும் அவற்றை லண்டனிலிருந்து பெ றுவதிலும் ஏற்பட்ட காலதாம தத்தினாலும், விரோதி நாடு களின் நடவடிக்கைகளினால் அவை நாசமாக்கப்பட்டுவிடக் கூடுமென்ற அச்சத்தினாலும் – பல்கலைக்கழகக் கல்லூரியும் வைத்தியக்கல்லூரியும் இணைக் கப்பட்டு இலங்கைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. 1942 ம் வருட 20 ம் இலக்க முள்ள இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டளைச்சட்டத்தினால் இது செய்யப்பட்டது.

**இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் தாக்கம்**

இச்சட்டத்தின் ஷரத்துகளைக் கவனிப்பது முக்கியமாகும். ஏனென்றால் பல்கலைக்கழகக் கட்டுக் கோப்பையும், பல்க லைக்கழகம் என்ன செய்ய முடி யும, என்ன செய்ய முடியாது என்பதையும், அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதையும் நிர்ணயிப்பதற்கான சட்ட அடிப்படையை இச்சட்டமே வழங்குகிறது. ஒரு பல்கலைக் கழகம் இயங்கும் விதத்தைச் சட்டங்கள் மட்டும் நிர்ணயித்து வருவதில்லையென்றாலும் இரண்டுக்குமிடையே ஒரு தொடர்பு இருந்துவருகிறது.

எனவே, பல்கலைக்கழகச் சட் டத்தின் கட்டுக்கோப்புக்குள் இருந்து நோக்குமிடத்து, சில பெரிய பிரச்சினைகள் எதிர்ப் பட்டபோது இலங்கைப் பல் கலைக்கழகம் எவ்வாறு செய லாற்றியதென்பதை விளங் கிக் கொள்ள முடியும்.

1929ம் வருடத்தில் றிடல் கமி ஷன் சிபார்சுசெய்தது போல, இலங்கைப் பல்கலைக்கழகம் "ஒற்றை அமைப்பாக, வாச வசதிகளுடன், சுயாட்சியுள்ள தாக" இருக்க வேண்டுமென இலங்கைப்பல்கலைக் கழகச் சட்டம் விதித்தது. அதன் உள் ளர்த்தம் என்ன? இச் சட்டத்தி லுள்ள வாசகத்தின் படி, பல் கலைக்கழகம் நாட்டின் வெவ் வேறு பகுதிகளில் பல வளா கங்களைக் கொண்டிருக்க முடி யாது. ஆதலால், அது ஒற்றையமைப்பாக இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டி ருப்பதாலும், அது உள்ளுறை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்ற நிபந்தனையி னாலும் அதன் விரிவாக்கம் வரையறுக்கப்பட்டது. "சுய வசதிகளைக் கொண்டிருக்க வரையறுக்கப்பட்டது. "சுயா ட்சி" என்ற சொல் அதன் சுதந் திர நிலையை உத்தரவாதப்ப டுத்தியது—இது பல்கலைக்கழகப் பாரம்பரியங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு விழுமி யம், இதற்காகவே பொலோ ரு சர்வகலாசாலை மாணவர் கள் பன்னிரண்டாம் நூற்றாண் டில் போராடினார்கள். இவ் விதமாக, பல்கலைக்கழகத்தின் சட்ட ஆதாரம் இரு முக்கிய அம்சங்களில் அதன் அபிவி ருத்திக்கு ஏற்பாடு செய்தது. இந்த அபிவிருத்தி முன்னர் அமைக்கப்பட்ட வற்றுள் ஒன்று இணைக்கப்பட்டிருந்த லண்டன் சர்வகலாசாலையின் பாணியி லன்றி, ஒக்ஸ்போர்ட், கேம்பி ரிட்ஜ் சர்வகலாசாலைகளின் மாதிரியில் நடைபெறவேண்டு மென விதிக்கப்பட்டது. ஓர் இலட்சியப் பல்கலைக்கழகம் என்பது ஒக்ஸ்போர்ட், கேம் பிரிட்ஜ் சர்வகலாசாலைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் அமைந்திருக்கவேண்டுமென்றே மக்கள் கருதினர்கள். எனினும் ஒரு சமூக ஸ்தாபனம் என்ற முறையில் பல்கலைக்கழகம் சமூகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விதிக்கும் ஓர் உள்ளமைந்த ஏற்பாட்டைச் செய்ய இச் சட்டம் தவறி விட்டது.

**கட்டடங்கள்** – சட்டம் இயற்றப்பட்ட போது, பேராதனையிலுள்ள பல்கலைக்கழகப் பூந்தோட்டத்தைஅமைப்பதற்கான எல்லைக்குறிகளைக் கொண்ட திட்டப்படங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டன. ஆனுல், இரண்டாவது உலக மகா யுத்தத்தினுல் ஏற்பட்ட கால தாமதங்களினுல், கட்டடத்திட்டத்தின் முதற்பகுதி 1952ம் ஆண்டில்தான் பூர்த்திசெய்யப்பட்டது. எனினும், இறுதியில் எந்தப் பல்கலைக்கழக வளாகத்துடனும் சரி சமானமாகப் போட்டியிடும் சிறப்புடன் அது விளங்கியது. அழகான நிலக் காட்சிகள், பாரம்பரிய சிற்பவியல் பாணிகளை இணைத்துக்கொண்ட வடிவான கட்டடங்கள் என்ற முறையில் புராதன பௌத்த பாரம்பரியங்கள் விதித்துள்ளவாறு "கல்வியில் தேர்ந்த அறிஞர்களின்" வாசஸ்தலங்கள் சம்பந்தமான அமைப்பு விதிகள் அனுசரிக்கப் பட்டிருந்தன. இது அறியாது நடந்தேறிய ஒரு விஷயம். எனினும் முழுப் பல்கலைக்கழகத்துக்கும் பேராதனை எனப் பெயரிடமுடியவில்லை. வைத்திய, விஞ்ஞான போதனு பீடங்கள் கொழும்பிலேயே இருந்துவந்தன.

வரியிறுப்பாளர்களின் பெருஞ் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம், ஒரு சமூக ஸ்தாபனம் என்ற முறையில் மாறிவரும் சமூகத் தேவைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றியுள்ளன?

**ஒரு சமூக தாபனமாக இலங்கைப் பல்கலைக்கழகம்**

**மேனுட்டுமயம்:–** கல்விச் சாதனைகளைப் பொறுத்த வரை, ஏறக்குறைய 1960இன் முற்பகுதி வரை பல்கலைக்கழகம் உயர்ந்த தரங்களைக் கட்டியெழுப்பியிருந்தது. "இது பொது நலவாய நாடுகளிலுள்ள சர்வகலாசாலைகளிடையே மிக்க பொறாமை யூட்டும் புகழைப் பல்கலைக்கழகத்துக்கு ஏற்படுத்தியது" (மலலசேகரா) ஆனுல், பல்கலைக்கழகக் கல்லூரி, அது ஸ்தாபிக்கப்பட்ட பிரதான நோக்கங்களில் ஒன்றை–அதாவது உயர் கல்வியில் உள்நாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் கலாசார அபிவிருத்திக்கான ஒரு மையமாகவும் விளங்கவேண்டும் என்பதைச் சாதிப்பதற்குப் பதிலாக, அது உண்மையில் மேனுட்டுமயமான உயர்கள் வர்க்கமொன்றைச் சிருஷ்டிப்பதில் ஒரு மகா சக்தியாகி விட்டதென்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இலங்கைப் பல்கலைக் கழகம் இந்தப் பாரம்பரியத்தின் வாரிசாகியது. பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் பெயர்ந்தபோது, ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளின் மாதிரியில் வாச மண்டபங்களில் அமைந்த வாழ்க்கை முறை மேனுட்டுமயத்தைப் பலப்படுத்திவிட்டது. இதனுல் பல்கலைக்கழகம் மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் அனுசரித்து தேசிய வாழ்க்கைச் சுறுசுறுப்புடன் நிகழும் ஒரு மையமாகவன்றிச் சுதேச அம்சங்களை உண்மையில் வெறுக்காவிட்டாலும் நாட்டின் தேவைகளை சற்றும் உணரா ஒரு ஸ்தாபனமாகப் பொது மக்களால் கருதப்பட்டது. இக் கருத்துக்குப் போதிய ஆதாரங்களுண்டு. பல்கலைக்கழகக் கல்வியை விரிவாக்கல், தேசிய மொழிகள் மூலம் கல்வி புகட்டல் ஆகிய இரு ஜீவாதாரமான பிரச்சினைகள் சம்பந்தமாகப் பல்கலைக்கழகம் நடந்து கொண்ட விதம் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இருபதாம் நூற்றுண்டு ஆரம்பமானதும் தேசியவாத இயக்கம் வளர்ச்சியடைந்து, சமூக நீதி பற்றிய தற்காலக் கருத்துக்கள் பரவியதுடன், படுமோசமான ஏற்றத் தாழ்வுகளுடன் நாட்டில் இருந்துவந்த இரட்டைக் கல்வி முறைமென்மேலும் கண்டனங்களுக்கு இலக்காகி வந்தது. சகல பாடசாலைகளையும் ஒரே கல்வி முறையின் கீழ் கொண்டுவரும் சட்டம் 1945 ம் ஆண்டில் இயற்றப்படும் வரை இக்கண்டனங்கள் இருந்து வந்தன. அனைத்து வயதுவந்தோர் வாக்குரிமை அமுலுக்கு வந்தமையும், காலத்துக்குக் காலம் நடைபெறும் தேர்தல்களில் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கப் பெருந்தொகையான பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்ட சந்தர்ப்பங்களும் கூட இச் சட்டம் இயற்றபடுவதில் ஒரு முக்கியமான பங்கெடுத்துக்கொண்டன.

பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலும் கூட, அனுமதிக்கான கோரிக்கை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. 1,000 மாணவர்களுக்காக முன்னர் தயாரிக்கப்பட்ட கட்டடத் திட்டங்களை 4,000 மாணவர்களுக்கு இடமளிப்பதற்காக மாற்ற வேண்டியிருந்தது. ஆனுல், இதுவும் போதாததாகவே இருந்தது. வழங்கல்—கோரிக்கை விதிகள் ஒரு புறமிருக்க, கல்வி பெறுவதற்கான உரிமை ஒரு சமூகத் தேவையாக உலகெங்கும் வலியுறுத்தப்பட்டுவந்த ஒரு சமயத்தில், அப்போது உப வேந்தராயிருந்த சர். ஐவர் ஜெனிங்ஸ் பல்கலைக்கழகத்தை விரிவாக்கும் யோசனையை எதிர்த்தார். இதற்கு அவர் கூறிய காரணம், வேலை பெறுவதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்பதே. அத்துடன், மாணவர்களின் தொகை அதிகரித்தால் கல்வித் தரங்கள் குறைந்து விடும் என்ற உண்மையான அச்சமும் தெரிவிக்கப்பட்டது. அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையைப் பல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக்கழகம் கணிசமான அளவுக்கு அதிகரிக்க முடியாதிருந்த போது, வெளிவாரிப் பரீட்சைகளையேனும் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை கிளம்பியது. இதற்கும் எதிர்ப்புக்காட்டப்பட்டது. எனவே, உபவேந்தர் வேண்டுமென்றே உயர்கல்வியை வரையறுத்து வருகிறார் என்ற கருத்து வலுவுற்றது. ஆனால், சர். ஐவரின் சார்பில் ஒரு உண்மை தெரிவிக்கப்படவேண்டும். அஃதாவது, இப்பிரச்சினையை முன்கூட்டியே உணர்ந்த அவர் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகை 3,500 ஐ எட்டும் போது, கொழும்பில் இன்னோர் உப உயர்கல்வித் தாபனத்தை நிறுவவேண்டுமென்று யோசனை கூறிய பெருமை சர். ஐவரையே சாரும். ஆனால், உயர்கல்விக்காக உயர்ந்து வரும் சமூக அபிலாஷைகளை நிறைவேற்றுவது பல்கலைக்கழகத்தின் ஒரு பிரச்சினையாகக் கருதப்படவில்லை. எனவே, ஓர் இரண்டாவது ஸ்தாபனத்தை அமைப்பதற்கு எந்தத் திட்டங்களும் சமர்ப்பிக்கடவில்லை. சர் ஐவர் ஜெனிங்ஸ் தெரிவித்த யோசனைகள் திட்டமிட்ட முறையில் அமுல் செய்யப்படவில்லை. சர் ஐவரையடுத்து சர். நிக்கலஸ் ஆட்டிகலே உபவேந்தராகப் பதவியேற்றபோது, அவரும் மாணவர் தொகையைக் கட்டுப்படுத்தும் அதே கொள்கையையே பின்பற்றினார். இந்நிலையை அவர் மேற்கொண்டதற்கு நியாயமான காரணமுண்டு. பல்கலைக்கழகக் கல்வி விரிவாக்கப்படவேண்டுமென்று அரசாங்கம் வலியுறுத்திய போதிலும் அந்நோக்கத்துக்காக அது போதிய நிதிகளை வழங்கவில்லை. 1961 ஜூன் 2 ந் திகதி சர் நிக்கலஸ் கல்வி பற்றி ஜயசூரிய கமிஷனுக்குச் சுட்டிக்காட்டியதுபோல, பல்கலைக் கழகக் கல்வியைத் தற்போது கிடைக்கக் கூடியனவாயுள்ள வசதிகளுக் கேற்ப கட்டுப்படுத்தி விடுவதா அல்லது தகைமை பெற்ற எல்லா மாணவர்களையும் அனுமதிப்பதா என்பது பற்றி அரசாங்கம் ஒரு முடிவு செய்ய வேண்டியிருந்தது. தகுதியுள்ள எல்லோரையும் அனுமதிப்பதென்று முடிவுசெய்யப்பட்டால், அப்பொழுது தர்க்க ரீதியாக கொழும்பிலும், காலியிலும், யாழ்ப்பாணத்திலும் மற்றும் பல்கலைக் கழகங்களைத் திறக்க வேண்டியிருக்கும். இத்தகைய விரிவாக்கத்திற்குத் திட்டமிடவும், அதைச் சுறுசுறுப்பாக முன்னேற்றிச் செல்லவும் இலங்கைப்பல்கலைக்கழகம் தவறிவிட்டது. எனவே, அனுமதிக்கான நெருக்கல் அதிகரித்த போது, ஒவ்வொரு சலுகையையும் கிரியாம்சையில் பல்கலைக்கழகத்திடம் இருந்து பலாத்காரமாகப் பறித்தெடுக்க வேண்டியேயிருந்தது. இதன் விளைவாக, திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி நடைபெறுவதற்குப் பதிலாக, பல்கலைக்கழகத்தின் ஒழுகலாற்றையும் நம்பிக்கையையும் நோக்க உறுதியையும் இலட்சியப் பற்றையும் முற்றாகப்பாதிக்கும் விசேஷ நடவடிக்கைகள் அவ்வப்பொழுது எடுக்கப்பட்டன. 1961 ம் ஆண்டில் ஓர் இரண்டாந்தர அடிப்படையில் பெருந்தொகையான வதிவற்ற மாணவர்கள் "வெளிவாரி" மாணவர்களாக (இவர்களுக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள எல்லாவசதிகளும் வழங்கப்படவில்லை.) அனுமதிக்கப்பட்ட போது அது பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்ட முதல் முக்கிய சலுகையாக அமைந்தது.

இலங்கையில் இருந்துவரும் "எல்லோருக்கும்" இலவசக் கல்வி வழங்கும் முறையிலுள்ள நன்மைகளைக் குறித்து எவரும் ஆட்சேபக் குரல் எழுப்பவில்லை. ஆனால் இலவசக்கல்வித்திட்டம் செயற்படும்விதம் பல்வேறு வட்டாரங்களில் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. இத்தகைய ஒரு விமர்சனம் கேலிச்சித்திரக்காரரான கோலட்டிடமிருந்து வந்தது. அவர் இலவசக் கல்வித்திட்டத்தை வன்மையாகக் கண்டித்தார். பேராசிரியர் சுவர்ண ஜயவீர ஒரு பத்திரிகையில் எழுதியுள்ள இந்த விமர்சனம் எடுத்துக்காட்டுவது போல, பல்கலைக்கழகக் கல்வி மீது ஏற்பட்டுள்ள விளைவுகள் வெடிக்கும் தன்மையுள்ளனவாகும். "இடைநிலைப் பாடசாலையில் போதனா மொழியாக ஆங்கிலம் உபயோகிக்கப்படுவதனால் இலவசக்கல்வியின் தாக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது. 1953 ம் ஆண்டிலிருந்து 1959ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் தரம் தரமாக போதனா மொழி தேசிய மொழிகளுக்கு மாற்றப்பட்டதனால் இத்தடை அகற்றப்பட்டது. மிகப்பெரிய தாக்கம் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்களில் (தரம் 11ம் 12ம்) தான் ஏற்பட்டது. இவ்வகுப்புக்கள் இதுவரை ஆங்கிலத்தைப் போதனாமொழியாகக் கொண்ட இடைநிலை (செகண்டரி)ப் பாடசாலைகளில் மட்டுமே இருந்துவந்தன. ஜி.ஸீ.ஈ. (சாதாரண தர) பரீட்சையில் தேறிய மாணவர்களின் தொகை அதிகரித்து வந்ததைச் சமாளிப்பதற்காகப் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டன.

1958 ஆம் ஆண்டிலும் 1959 ஆம் ஆண்டிலும் தரம் 11இலும் தரம் 12இலும் போதனா மொழி மாற்றப்பட்டதன் விளைவாக,

தங்களுடைய கல்வியைத் தொடரும் சந்தர்ப்பம் இவர்களுக்கு கிடைத்தது.

இப்பொழுது கிடைத்துவரும் சிரேஷ்ட இடைநிலைக் கல்வி நாட்டின் பல்வேறு பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டதால், இத் தரங்களில் பதிவாகிய மாணவர் தொகை 1957 ம் ஆண்டிலிருந்து 1959ம்ஆண்டு வரை இரட்டித்து, 1964ம் ஆண்டளவில் ஆறு மடங்கு அதிகரித்தது. 1942 ம் ஆண்டில் 30 பாடசாலைகள் பல்கலைக்கழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் புகுமுகப் பரீட்சைக்கு மாணுக்கர்களை (நேர்வுநாடிகளை) அனுப்பின, 1960 ம ஆண்டளவில் 319 பாடசாலைகள் இவ்வாறு செய்தன. 1957 ம் ஆண்டில் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு 2,289 மாணவர்கள் தோற்றினர், இவர்களின் தொகை 1962ம் ஆண்டில் 11,870ஆக அதிகரித்தது. 1946ம் ஆண்டுக்குப்பின் எதிர்பாரா வெடியைப்போல, அதிர்ச்சியளிக்கும்விதத்தில் விரைவாக அதிகரித்த ஜனத்தொகை காரணமாக இடைநிலைப் பாடசாலைகளின் உச்சநிலையை அடைந்த 1964ம் ஆண்டில் நடைபெற்ற ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்கு 31,350 மாணவர்கள் தோற்றினர்."

பல்கலைக்கழகக் கல்விக்கான இந்தத் துரிதமடைந்த கோரிக்கை சமூக மாற்றக் காற்றுக்களாலும் அடிக்கப்பட்டுவந்த பல்கலைக்கழகத்துக்குப் பிரச்சினைகளை உண்டாக்கியது. 1956 ம் ஆண்டுக்குப் பிற்பட்ட சகாப்தத்தின் அரசியல் —சமூகச் சூழ்நிலை விசேஷ நல உரிமைகளும் ஏற்றத்தாழ்வுகளும் ஒழிக்கப்படுவதற்கான கலாசார - சமூகக் கட்டாயத் தேவைகளுக்கு அதிகரித்த உத்வேகத்தைக் கொடுத்தது. பல்கலைக்கழகம் கௌரவமும் நல்ல ஊதிய முமுள்ள வேலைகளுக்குச் செல்ல வழியமைத்துக் கொடுத்ததனுல் கல்விவாய்ப்புப்பிரச்சினை வலுவடைந்து விட்டது. பல்கலைக்கழகம் அரசாங்கத்தின் நெருக்கலுக்கும்; சமூக நெருக்கலுககும் இடங்கொடுத்தது. அதன் விளைவாக 1958 ம் ஆண்டிலிருந்து 1966 ம் ஆண்டு வரை யுள்ள காலத்தில் பல்கலைக்கழகத்தில் பதிவான மாணவர் தொகை திடீர் என வெடியைப் போல அதிர்ச்சியூட்டுவதாயிருந்தது

### அட்டவணை-2

**விண்ணப்பதாரர்களின் சதவிகிதமாக மாணவர் அனுமதிகள்**

| ஆண்டு | விண்ணப்பதாரர்களின் தொகை | அனுமதிக்கப் பட்டோரின் தொகை | அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் சதவிகிதம் | பதிவான மொத்த மாணவர் தொகை |
|---|---|---|---|---|
| 1943 | 350 | 197 | 56.3 | 904 |
| 1947 | 1,387 | 412 | 29.7 | 1,554 |
| 1952 | 2,026 | 520 | 25.6 | 2,232 |
| 1957 | 2,289 | 766 | 33.4 | 2,718 |
| 1962 | 11,870 | 2,551 | 21.4 | 7,816 |
| 1966 | 31,432 | 3,656 | 11.6 | 14,287 |
| 1972 | 31,411 | 3,338 | 10.8 | 12,074 |
| 1977 | 77,474 | 3,721 | 5.9 | 14,146 |

ஆதாரம்: சுவர்ண ஜயவீர, இலங்கையின் தேசிய விஞ்ஞான சபை கருத்தரங்கு அறிக்கை, பல்கலைக்கழகக்கல்வி (1980)

தகுதி பெற்றவர்களுக்கு அனுமதி வழங்கும் வகையில் 1963 இல் கொழும்பு தர்ஸ்டன் வீதியில் இவ்விரு பீடங்களினதும் இரண்டாவது கற்பித்தல் அலகு ஏற்படுத்தப்பட்டது. 1965 ல் இது குதிரைப் பந்தய திடலுக்கு (ரேஸ் கோஸ்) மாற்றப்பட்டது ஆகையால் - இது குதிரை வித்தியாலயம். (அஸ்வ வித்தியாலய) என அழைக்கப்பட்டது.

1966 இல் கொழும்பில் மாணவர்களின் எண்ணிக்கை பெரும்பாலும் பேராதனைப்பல்கலைக்கழக எண்ணிக்கைக்குச் சமமாக விருந்தது. ஆகையால் 1968 இல் கொழும்புப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஒரு புதிய பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. ஏற்கனவே ஸ்தாபிதமாகியிருந்த பேராதனைக்கு மாற்றப்படாதிருந்த மருத்துவ, விஞ்ஞானப் பீடங்களையும் வேறுபட்ட ஆரம்பத்தினையும், அமைப்பினையும் கொண்டிருந்த புதிய கலைப் பீடத்தையும் இது கொண்டிருந்தது.

உயர் கல்விக்கான கேள்வி 1970 ல் தொடர்ந்து அதிகரிக்கலாயிற்று. இப்பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பல்கலைக்கழக அனுமதி விகிதாசாரத்தை இலங்கை கொண்டிருந்த போதிலும், இலங்கையினுல் இக்

### அட்டவணை—1

**பல்கலைக்கழகத்தில் / பல்கலைக்கழகங்களில் முழுநேர மாணவர்களின் எண்முறையான — சதவிகிதப்பரம்பல்**

| ஆண்டு | மொத்த மாணவர்கள் | கலைகளை அடிப்படையாகக் கொண்ட கற்கைநெறிகளில் மாணவர்களின் சதவிகிதம் | விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட கற்கைநெறிகளில் மாணவர்களின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 1942 | 904 | 43.8 | 56.2 |
| 1947 | 1,554 | 41.6 | 58.4 |
| 1952 | 2,232 | 40.6 | 59.4 |
| 1957 | 2,718 | 40.3 | 59.7 |
| 1962 | 7,816 | 62.9 | 37.1 |
| 1966 | 14,287 | 72.8 | 24.2 |
| 1972 | 12,074 | 65.2 | 34.8 |
| 1977 | 14,146 | 60.6 | 39.4 |
| 1981/82 | 17,636 | 59.2 | 40.8 |

ஆதாரம்: இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியை நிறைவுசெய்ய முடியவில்லை. இரண்டாந்தரக் கல்வியில் இலங்கையின் உயர் பங்கெடுப்பிற்கு இது முரணானதாகும். பல்கலைக்கழக அனுமதி மட்டத்தில் உயர் போட்டி நிலவுதல் இதன் விளைவாகும். உயர்தரப் பரீட்சை நாட்டின் தீவிர போட்டிப் பரீட்சையாக மாறும் அளவுக்கு இது வழிவகுத்துள்ளது. கல்வியின் குறிக்கோளை இது நாசப்படுத்தியுள்ள அதேவேளை பரீட்சைத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு பாடங்களை உருப்போடுகின்ற நிலைமைக்கு மாணவர்களைத்தள்ளியுள்ளது. மேலும் நாட்டின் பல இடங்களிலும் வர்த்தகரீதியான தனியார் கல்வி நிலையங்களின்தோற்றத்திற்கும் இது வழி வகுத்துள்ளது.

பல்கலைக் கழக அனுமதி மட்டத்திலான இத் தீவிரபிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் அனுமதி முறைமையைச் சீர்திருத்துவதுடன் பல்வேறு தீர்வுகளையும் பரீட்சித்து வருகின்றது. இது 1970 ன் ஆரம்பத்தில் சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பாகுபாட்டினைச் சரிப்படுத்தல் என்ற போர்வையில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இம் முறை தொடர்ந்து மாறி வந்ததுடன் இதிற் பல குறைபாடுகளும் இருந்தன. சமூக பொருளாதாரக் காரணிகளின் விளைவாக, இரண்டாம் தரக் கல்வியில் சில மாணவர்கள் எதிர்நோக்குகின்ற இக்கட்டான நிலையைச் சரிப்படுத்துவதற்கே இம் முறை அறிமுகம் செய்யப்படுவதாக விவாதிக்கப்பட்டது. இந் நடவடிக்கையின் நோக்கம் இதுவாயின், தற்போது இருப்பதனைப்போன்று பின்தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையிலன்றி, சமூக பொருளாதார காரணிகளில் அடிப்படையில் இதனை உருவாக்கியிருக்கலாம். இம் முறை அறிமுகம் செய்யப்பட்டமைக்குரிய ஒரு காரணி யாதெனில் 1970 ன் ஆரம்பத்தில் விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெறுவதற்கு மாணவர்களிடையே நிலவிய தீவிர போட்டி என்பதனை நாம் அவதானிக்கலாம். இதன் விளைவாக ஏற்பட்ட இன்னொரு பிரச்சினை யாதெனில் சிறுபான்மையோர் தமக்குப் பாகுபாடு காட்டப்படுவதாகக் கூறியமையாகும்.

அரசியல் என்ற வார்த்தையின் விரிவான கருத்தினை நோக்குமிடத்து, அரசியலற்ற ஒரு சமூகத்தை நாம் ஊகித்தல் இயலாத காரியமாகும். ஒரு பரிணாமத் தன்மை மிக்க சமூகச் செய்முறைக்குள் இவை இயங்குவதனால், "கட்சி அரசியல்" கலப்பற்ற சமூகங்கள் கூட இச்செய்முறைக்குள் பக்கம் சாருகின்றன. இக் கருத்தின் அடிப்படையில் நோக்கினால் கற்றல், கற்பித்தல், அறிவு விருத்தி போன்ற செய்முறைகளை அரசியல் உள்ளடக்கமின்றி நோக்குதல் கடினமாகும். மாணவர் 'பக்கச் சார்பற்ற அறிவினை'ப் பெற்று நிருவாகிகளின் பங்கினைப் பூர்த்தி செய்து; சமுதாயம் இருந்தது போன்று அதனைப் பரிபாலித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நேரடி அரசியல் அல்லது அரசியல் தலையீடு இருப்பின் இது சாத்தியப்படாது. அரசமுகாமைத்துவ தொடர்பான "பொருளியல் நோக்கு" இதழில் நாம் தெளிவானதும், மறைமுகமானதுமான அரசியல் மயமாக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். இதிற் குறிப்பிட்ட கருத்துக்களும் பல்கலைக்கழகங்களுக்குப் பொருந்துவதாகும். ஸ்தாபிதமான கட்சிகளுடன் மாணவர்கள் நேரடித் தொடர்பு கொண்டிருத்தல் சென்ற காலங்களுக்கும் தற்போதைய காலத்திற்கும் இடையில் நிலவுகின்ற வேறுபாடாகும். மாணவர் பேரவைகளுக்கான தேர்தல் செய்முறை உட்பட்ட மாணவர் நடவடிக்கைகளை இது நேரடிக் கட்சி அரசியலுடன் இணைத்துள்ளது. சில சமயங்களில் இவ் அரசியல் நடவடிக்கைகள் மாணவர்களுக்கு நன்மை பயத்துள்ளதனை விடவும் தீங்குகளையே விளைவித்துள்ளன. இன்னும் இது ஒரு பிரதானமான சமூகக் கல்விச் செய்முறையாக விளங்குகின்றது.

#### மாணவர் பிரச்சினைகள்

கற்கைச் செயமுறையில் மாணவர்கள் எத்தகைய தடைகளை எதிர்நோக்குகின்றனர்? "மாணவர் துன்பங்கள்—உயர் கல்வியின் பிரச்சினை" என்னும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் (அக்டோபர், 1971) விசாரணைக் குழு அறிக்கை அவற்றை விவரமாக தருகின்றது. மாணவர் பிரச்சினைகள் மூன்று பிரதான வகைகளுக்குள் அடங்கியுள்ளன :

(1) பல்கலைக்கழகக் கல்வி மீதான அபிலாசை, பல்கலைக் கழகங்களுக்குள் அரசியலின் ஊடுறுவல், பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ள முடியாத நலிந்த பொருளாதாரம் போன்ற சமூக – பொருளாதாரக் காரணிகளிலிருந்து எழுகின்ற பிரச்சினைகள்.

(2) மோசமான திட்டமிடல், போதிய வசதிகள் இன்மை, ஏற்கனவே கிடைக்கப்பெறுகின்ற மூலவளங்களிலிருந்து உச்சபயனைப் பெறுமைபோன்ற அமைப்பு ரீதியான பலவீனங்களிலிருந்து எழுபவை.

3) பச்சாதாபம், எதிர்காலம் தொடர்பாக பாதுகாப்பின்மை போன்ற மானிடக் காரணிகளிலிருந்து எழுபவை.

தற்போது ஏனைய யாவற்றையும் மறைப்பது சமூக-பொருளாதாரக் காரணிகளாகும். இவற்றுள் இரண்டு முக்கியமானதாகும். வதிவிட வசதிகளும், அதிகரித்த வங்கிக் கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுமே இவையாகும். வேலை வாய்ப்பு தொடர்பான பொதுப் பயம் மூன்றாவது அம்சமாகும்.

**வதிவிடம்**

கல்வி வாய்ப்புகளிலிருந்து உச்ச பயனைப் பெறுவதற்கு சில அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்; பண்டைக் காலத்திலிருந்தே இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் நாலாந்தா மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம், உடை, மருந்து ஆகிய நான்கு தேவைகளும் அளிக்கப்பட்டமை, "தாம் வந்துள்ள கல்வி நோக்கத்தின் நிறைவுக்குரிய ஒரு மூலமாகும்." என் ஹியூஸ் சாங் குறிப்பிடுகின்றார். மத்தியகாலங்களில் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்குவதிவிடங்கள் கட்டப்பட்டதுடன், வறிய மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1940 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் வதிவிடப் பல்கலைக்கழகமாக இருத்தல் வேண்டுமா? வதிவிடம் இல்லாதிருத்தல் வேண்டுமா என விவாதிக்கப்பட்டது. ஜென்னிங்ஸ் வதிவிடப் பல்கலைக்கழகத்தை ஆதரித்தார்; வதிவிடக் கல்வி விரிவாக்கத்துடன் வசதியற்ற குடும்பங்களிலிருந்து திறமையான மாணவர்கள் வருவர் எனவும் ஒரு வதிவிடச்சாலை இம்மாணவர்களின் பின்னணியின் வரையறைகளை வெற்றிகாண உதவும் எனவும் இவர் சுட்டிக்காட்டினார். வதிவிட வசதி என்றுமேமுழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை; திட்டமிடப்படாத பல்கலைக்கழகக் கல்வி விஸ்தரிப்புடன் இது முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டது. ஆகையால் வறிய கிராமபுற மாணவர்கள் போதிய வசதிகளோ அல்லது தமது கல்விக்கு தூண்டுதல் தரக்கூடிய பண்பாட்டு சூழலோ இல்லாது நெருக்கமான வதிவிடங்களில் தங்க நேரிட்டது.

வதிவிட மண்டபங்களில் நிலவுகின்ற குறைபாடுகளிலிருந்து எழுகின்ற பிரச்சினைகள் மாணவர் அமைதியின்மைக்குக் காரணமாக இருந்துள்ளன. சிலர் இதனைப்பிழையாகவும் வலியுறுத்தலாம். மண்டபங்கள், சில சமயங்களில் பலாத்கார தன்மை வாய்ந்த அரசியல் நடவடிக்கைகளின் மையமாக இருந்து வந்திருப்பதனை அதிகாரிகள் உணர்ந்ததனைத் தொடர்ந்து மண்டபங்கள் தொடர்பான பிரச்சினை தோன்றியது எனலாம்.

**மாணவர் கடன்**

மாணவர்கள் தம்மைப் பராமரிப்பதற்குரிய நிதி உதவி வதிவிட வசதித் தேவைகளுடன் இணைந்துள்ளது. 1960ன் நடுப்பகுதி வரை இலங்கையில் நிதி உதவி தேவைப்பட்டோருக்கு ஒரு மானிய உதவித் திட்டம் இருந்துவந்தது. உயர் கல்வி விரிவாக்கப் பட்டுக் குறைந்த வருமான வகுப்பிலிருந்து பெருந்தொகையான மாணவர்கள் வரத் தொடங்கியதிலிருந்து ஒருபுதிய உதவித் திட்டம் அறிமுகப் படுத்தப்படவேண்டியிருந்தது. ஆகையால் அரசாங்கம் ஒரு கடன் திட்டத்தை ஆரம்பித்தது. 1964 இல் இது தொடர்பாக முதலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி மாணவர்களுக்கு வருடாந்தம் ஆகக்கூடிய தொகையாக ரூபா 600 கொடுக்கப்பட்டது. மாணவர்கள் பட்டம் பெற்றுத் தொழிலொன்றைப் பெற்றதன் பின்னர் இதனை வட்டியுடன் திருப்பிச் செலுத்தல் வேண்டும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் கடன் தொகையும்அதிகரிக்கப் பட்டது ஆனால், 1972-ம் ஆண்டிலிருந்து அதன் உச்சத் தொகை ரூபா 2,700 ஆக இருந்ததுடன் கடன் பிரச்சினையை மாணவர்களின் நோக்கிலும், கடன் வழங்கும் வங்கிகளின்நோக்கிலும் நோக்குதல் வேண்டும். மாணவர்களைப் பொறுத்தவரையிலும் மாதாந்த வதிவிடக்கட்டணம் ரூபா 350இலிருந்து ரூபா400 வரையில் அதிகரிக்குமளவுக்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்தது

இதேபோன்று போக்குவரத்துச் செலவும் அதிகரித்தது. ஆகையால் அவர்கள்பெற்ற கடனையும் விடக் கூடுதலாக வாழ்க்கைச் செலவு அமைந்திருந்தது. கடன்பெற்ற மாணவர்களுள் 86.3 சத வீதமானோர் மானிடவியல், கலைப் பீட மாணணர்கள் என 1978 இல் மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப்பிரிவு நடாத்திய ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது. தந்தையின் தொழில் அடிப்படையில் வகைப்படுத்துகையில் 1976 இல் பட்டம் பெற்ற கலைப் பட்டதாரிகளுள் 70 சதவீதமானோரின் தந்தையர் விவசாயிகள், வர்த்தகர்கள், சாரதிகள், பொலீஸார் அல்லது குறைந்த தர தொழில்புரிவோராக இருந்ததாக சந்திரா குணவர்தன நடாத்திய ஓர் ஆய்வு (கலாநிதி ஆய்வுக்கட்டுரை 1980) தெரிவிக்கின்றது. வருமான அடிப்படையில் வகையீடுசெய்தால் 74 சத வீதமானோர் மாதாந்தம் ரூபா 600 க்கு குறைந்த வருமானம் உழைப்போராக இருந்தனர். பெருந்தொகையான மாணவர்கள் தம்மைப் பராமரிப்பதற்கு போதிய குடும்ப ஆதரவை பெற முடியாதவர்கள் என இந்த ஆய்வுகள், தெரிவிக்கின்றன. எனவே கடனை வாழ்க்கைச் செலவுடன் இணைக்க வேண்டிய தேவை உண்டு.

வங்கியின் கருத்துப்படி (இலங்கை வங்கியும் இத் திட்டத்தினுள் உள்ளது) இக் கடன் திட்டம் நட்டமளிப்பதாகவே இருக்கிறது. 1980 இல் பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து மக்கள் வங்கிக்கு வந்துசேரவேண்டிய கடன் நிலுவை ரூ. 5 கோடி 70 இலட்சமாகும். இது அளிக்கப்பட்ட மாணவர் கடனில் 86 சதவீதமாகும். (பல்கலைக்கழக மாணவர்களின் கடன் திட்டம்—மக்கள் வங்கி ஆய்வு அறிக்கை 1981)



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அறவிடமுடியாக்கடன் களாலும், கடனை அறவிடுவதற்குத் தாக்கமான வழிகளின்றியும் அவதியுறும் வங்கிகள் கடன்களை அதிகரிக்கத் தயங்குவதில் வியப்பேதுமில்லை.

இப் பிரச்சினையும் ஒரு புதிய கோணத்தில் நோக்கப்படுதல் வேண்டும். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆளணியின் திறன் அவசியம் என்ற அடிப்படையில், பயிலுநர்சபை ஒரு பயிலுனருக்கு மாதாந்தம் ரூபா 350 அளிக்கின்றது. இதேபோன்று ஒரு பட்டதாரிக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சியும் தேசியத்தேவையாக–புத்தி ஜீவிகளை பயிற்றுவித்தலாக–நோக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பாக கொள்கை வகுப்போர் புதிய நோக்கினைக் கொண்டுள்ளனர். மகா பொல புலமைப் பரிசில் திட்டம் காட்டுகின்றது. இதன்படி 1982 – 83 காலப்பகுதியில் திறமை, தேவை என்பவற்றின் அடிப்படையில் 1,001 பல்கலைக்கழக மாணவர்கள் மாதாந்தம் 400 ரூபாவைப் பெறுவர். எல்லா மாணவர்களையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் இத் திட்டத்தினை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது உயர் தரக் கல்வியின் தத்துவ ரீதியான விரிவாக்கமாக விளங்குவதுடன், பௌத்த உலகிலும் மேற்கு ஐரோப்பாவிலும் பின்பற்றப்பட்ட அறிவைத் தேடுவோருக்கு உதவுகின்ற பண்டைய வழக்கத்தைப் பின்பற்றுவதாகவும் உள்ளது.

**கலைப் பட்டதாரிகளின் வேலையின்மை**

மூன்று நான்கு வருடங்கள் உயர் கல்வி பயின்ற ஒருவர் தான் விசேடமாகக் கற்ற துறையிலும், பாரம்பரியமாக பட்டதாரிகள் தொழில்புரிகின்ற மட்டத்திலும் தொழிலை எதிர்பார்ப்பது இயல்பாகும். ஆனால், பல்கலைக்கழகக் கல்வியின் விரிவாக்கத்துடன் வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினை தோன்றியது. குறைந்த அறிவுத்திறனையும் கல்வி மட்டத்தையும் வேண்டுகின்ற இலிகிதர் போன்ற தொழில்களில் பட்டதாரிகள் அமர்த்தப்படும் கீழுழைப்பு முறையும் தோற்றம் பெற்றது.

இன்று இது பிரதானமாக கலைப் பட்டதாரிகள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாகவே இருக்கின்றது. விஞ்ஞானம், தொழிநுட்பவியல் என்பவற்றின் எழுச்சியுடன், நவீன தொழில், அபிவிருத்தித் தேவைகள் என்பவற்றுக்கு இத்தகைய பயிற்சி நெறிகளின் தேவை உணரப்படலாயிற்று. குறிப்பாக, அபிவிருத்தியை முழுக்க முழுக்க பொருளாதார வடிவில் நோக்குகின்ற வறிய நாடுகளில் நவீனத்துவ, அபிவிருத்தி என்பவற்றின் உடனடித் தேவைக்கு மானிடவியல் கல்வி நெறிகளின் முக்கியத்துவம் உணரப்படுவதில்லை. பொருளாதார அபிவிருத்தியுடன் தெளிவான தொடர்பில்லாத பயிற்சிநெறிகள் மீது செய்யப்படுகின்ற செலவு, வரி செலுத்துவோரின் பணத்தை வீண் விரயம் செய்வதாகக் கருதப்படுகின்றது. மானிடவியல் கல்வி நெறிகள் ஒரு முழுமையான மனிதனின் உருவாக்கத்துக்கு இட்டுச்செல்கின்றன என்ற நிலை இன்று தலைகீழாகத் திரும்பியுள்ளது. அரசியல், பொது வாழ்க்கையில் மேலான இடத்தைப் பெற விரும்புவோர் இத்தகைய பயிற்சி நெறிகளைக் கற்றல் வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட ஒரு காலமும் இருந்ததுண்டு. வசதிகளை இணைந்த வகையில் விரிவாக்காமலும், சமூகப் பொது முதலீட்டு வசதிகளை உறுதிப்படுத்தாமலும் 1960 ல் கலைப் பயிற்சி நெறிகள் பரவலாக்கப்பட்டமையால் பல்கலைக்கழகக் கல்வியின் சுபாவமாக நோக்கக்கூடிய அளவுக்கு அதன் தரம் வீழ்ச்சி கண்டது. மேலும் பாரம்பரியமாக குறைந்த வருமானவகுப்பில் இருந்து போதிய ஆங்கில அறிவுஇன்றி வருகின்ற சராசரிக் கலை மாணவன், தனது வீட்டுப் பின்னணியின் வரையறைகளைவென்றெடுப்பதற்கான உதவியைப் பல்கலைக்கழகத்திடமிருந்து பெறுவதில்லை. ஆகையால் கலைப் பீடத்தின் "உற்பத்திகள்" அரச துறை தவிர்ந்த ஏனைய துறைகளில் தொழில்வாய்ப்பினைப் பெறுவது கடினமாக உள்ளது. இத்தேக்க நிலை கலைப்பட்டதாரிகளிடையே வேலையின்மையை அதிகரிக்கின்றது. பெரும்பாலான தனியார் துறை வேலை கொள்வோர் அவர்களைத் தீண்டுவதில்லை. கலைப் பீட பட்டதாரி ஒருவர் நவீன தொழிற்றேவைகளை நிறைவுசெய்யாமையால் திறந்த தொழிற் சந்தையில் அவருக்கு குறைந்த கிராக்கியே நிலவுகிறது. இந் நிலைமையைச் சீர்செய்வதற்கு அரசாங்கமும் தொண்டர் நிறுவனங்களும் முயற்சி எடுத்துள்ளன. குறிப்பாக, இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சு பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கான தனியான ஒருபிரிவினை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் அல்லாத துறையில் இலங்கைப் பல்கலைக்கழகப் பெண்கள் ஒன்றியம், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பெண் கலைப் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும் அவர்கள் கூடுதலாக வேலை வாய்ப்பினைப் பெறக்கூடிய ஒரு செய் திட்டத்தை விருத்தி செய்வதற்கு முயன்றுள்ளது எனினும், இம்முறைகள் இப் பிரச்சினையின் மீது கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தியதாக தென்படவில்லை. இப் பிரச்சினையின் அடிப்படைக் குறைபாடுகளை அகற்றுவதற்கு நீண்டகாலத் திருஷ்டியுடனும் பன்முக நோக்குடனும் கூடிய திட்டமொன்று அவசியமாகும்.

இத்தகைய ஒரு வேலை வாய்ப்பு நிலைமையில் நாளைய எதிர்காலம் குறித்த அச்சம் கல்வி முறைக்கு மாறான பல் வேறு வழிகளிலும் வெளிப்ப



Appropriate Technology Services
121, POINT-P. LFO ROAD
NALLUR, JAFFNA
No.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுதலைக் காணலாம். உதாரமாக கல்வியைப்; பாதிக்கின்ற பகிஷ்கரிப்புக்கள், ஏனைய நடவடிக்கைகள் என்பன மருத்துவ, எந்திரவியல், விஞ்ஞான பீடங்களில் காணப்படுவது குறைவாகும். இம் மாணவர்களுக்கு இலங்கையில் மட்டுமன்றி உலகின் ஏனைய பாகங்களிலும் தொழில் வாய்ப்பு இருப்பதுடன், அவர்களது பயிற்சிக்கு சமூக அங்கீகாரமும் கிடைக்கிறது. ஆனால், இதற்கு மாறுபட்ட ஒரு எதிர்காலத்தை எதிர்நோக்குகின்ற நிலை மாணவர்களிடையே அடிக்கடி வேலை நிறுத்தங்களும், வன் செயல்களும் இடம்பெறுவதனைக் காணலாம்.

**ஆசிரியர்**

ஒரு கல்வி நிறுவனம் தனது கற்பித்தற் பணிகளைத் தாக்கத்துடன் புரிதல் இறுதியாக ஆசிரியர்களிடமே தங்கியுள்ளது. அவரது அறிவுத்திறன், கல்விச் செய்முறைக்கு மாணவர்களை ஊக்குவித்து, வழிநடாத்துதல் என்பவற்றை இது குறிக்கும். நாலந்தா, விஜயா பிரிவெனா என்பவற்றின் கீர்த்தி அவற்றின் ஆசிரியர்களின் அறிவுத் திறத்திலேயே தங்கியிருந்தது. ஆற்றல் மிக்க ஓர் ஆசிரியர் மாணவனின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து கற்பித்தலுக்கு உயிரூட்டுகிறார். ஆகையால் மாணவர்களை அனுமதிப்பதற்குரிய கொள்கைகளை விடவும் ஆசியர்களைச் சேர்ப்பது தொடர்பான கொள்கை வலுவுள்ளதாக இருக்கின்றது. பல்கலைக்கழகங்கள் சிறந்த ஆசிரியர்களை தம்முள் வைத்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

**பணிகள்**

ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளரின் வேலை பன்முகப்பட்ட ஒரு வேலைத் தொடரினை உள்ளடக்குகின்றது; விரிவுரை செய்தல், கட்டுரை வகுப்புக்கள், பாடவிதானத் திட்டமிடலும் அபிவிருத்தியும், பரீட்சை விடைத் தாள்களைத் திருத்தல் மாணவர்களின் வேலைகளை மதிப்பிடுதல், பல்கலைக் கழகத்திற்குள்ளாகவும், வெளிச் சமூகத்திலும் பல்வேறு துறைகளில் கருமமாற்றுதல், புதிய அறிவினைத் தேடுதல், ஆராய்ச்சியில் ஈடுபடுதல், தனது திணைக்கள நிர்வாக வேலைகளில் ஈடுபடுதல் என இது பல்வகைப்படும். இப் பணிகளுள் ஒவ்வொருவரும் சமமான திறமையைப் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படவில்லை. மேலும், பல்கலைக்கழகத்தின் தேவைகள் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு வரலாற்றுக் கட்டத்தில் வேறுபட்டு அமையும். உதாரணமாக, புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக் ழகத்தில் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளனை விடவும் ஒரு சிறந்த ஆசிரியரே முக்கியம் பெறுவார். ஆகையால் பல்கலைக்கழகங்கள் தமது நீண்ட கால நோக்கங்களையும் தேவைகளையும் கருத்திற் கொண்டு ஆசிரியர் சேர்ப்புக் கொள்கைகளைத் தீர்மானித்தல் வேண்டும். மேலும், அவர்கள் சேவையில் நிலைத்திருக்கக் கூடிய வகையிலும் அமைப்பிற்குள்ளாகச் சிறப்பாக இயங்கக் கூடிய வகையிலும் வசதிகளை அளித்தல் வேண்டும்.

**நோக்குகள்**

அறிவுத்துறையில் சுறுசுறுப்பான, தேசிய, சர்வதேசிய தொழில்கள் விஞ்ஞான தாபனங்களில் தலைமை வகிக்கின்ற, கொள்கை ஆக்கத்தினைப் பாதிக்கின்ற பல்கலைக்கழக ஆசிரியர்கள் இருப்பது அங்கிகரிக்கப்படுவதேபோன்று; பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஈடுபாடும் சமூக அக்கறையும் இல்லாதவர்கள் எனவும், குறைந்தபட்ச அளவிலேயே செயலாற்றுபவர்கள் எனவும் குற்றஞ்சாட்டவும் படுகின்றனர். விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட பீடங்களை விடவும் கலை, மானிடவியல் பீடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தொடர்பாகவே இக் குறை கூறப்படுகின்றது. கலைப் பிரிவுகளில் நிலவுகின்ற அதிருப்தி பற்றி ஒரு சிரேஷ்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் பின்வருமாறு கூறினார். "நான் ஒரு இளம் பட்டதாரிக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவில் சேருமாறு ஆலோசனை கூற மாட்டேன். எனக்கு பல்கலைக்கழக பிணைக் கடப்பாடு இல்லாவிட்டால் சுற்றுலாத் துறையில் ஒரு சாரதியாகப் போயிருப்பேன்" என அவர் கூறினார். இது மிகவும் தீவிரமான ஒரு கருத்தாகும். தியாகசிந்தை மிக்க ஆசிரியர்கள் கலைப் பீடத்திலும் இருக்கிறார்கள். இவர்கள் தமது துறையின் விழுமியத்தை பேணிவந்துள்ளனர். எனினும், விரிவுரைகள் தவிர, பெரும்பாலான பிரிவுகளில் வேலை இல்லாமையால் சோம்பல் நிலவுகின்றது என்பது தெளிவாகும்.

**சம்பளம்**

தொடர்ந்து சம்பள அளவுகள் அதிகரிக்கப்பட்ட போதிலும் இச்சம்பள அளவுகளை தனியார் துறையுடனோ, முன்னேற்றமடைந்த நாடுகளுடனோ, பெற்றோலிய வள நாடுகளுடனோ ஒப்பிட முடியாது என ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பல்கலைக்கழகங்கள் உசாத்துணைச் சேவைகளுக்கு அனுமதி பெறுகின்றன. பொறியியல், மருத்துவ பீடங்களைப் போலன்றி கலைப் பீடத்தில் இவ் வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மத்திய தர விரிவுரையாளர்கள், மேலதிக வருமானமின்றி, அதிகரித்த வாடகைகளை வழங்க முடியாதவர்களாகவும் குடும்பப் பாவனைக்கு மாத்திரமாவது ஒரு காரை வைத்திருக்க இயலாத நிலையிலும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை நிலைமைகள்**

மேலும், வேலைப்பளு பற்றியும் தொழில் முன்னேற்றத்திற்கு உரிய வாய்ப்புக்கள் இன்மை பற்றியும் ஆசிரியர்கள் முறையிடுகின்றனர். உதாரணமாக, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு கல்வி விடுமுறை வழங்கப்பட்ட போதிலும் இலங்கை ரூபாவின் குறைந்த வெளிநாட்டுப் பெறுமதி காரணமாக இந்த உரிமையை அனுபவிக்க இயலாதவர்களாக அவர்கள் உள்ளனர். எனவே அவர்கள் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளில் நிலவுகின்ற பொருளாதாரப் பின்வாங்கல் காரணமாக இதனைப் பெறுதல் கடினமாக இருக்கின்றது.

கலைப் பீடங்களின் துரித விஸ்தரிப்பு காரணமாக விரிவுரையாளர்கள் குறைந்த வசதிகளுடன் காலந்தள்ள வேண்டியுள்ளது. சில சமயங்களில் அவர்களுக்குச் சொந்தமான கதிரையோ மேசைகளோ கூட இருப்பதில்லை. பல்கலைக்கழகங்கள் அரசியல் மயமாக்கத்திற்கு உட்பட்டிருப்பதனால் ஆசிரியர்களிடையே பிளவு உருவாகியிருப்பதாகவும் இதன் விளைவாக சந்தேகம் அவநம்பிக்கை என்பன ஏற்பட்டிருப்பதாகவும், அரசாங்கங்கள் மாறுகின்ற போது மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பழி வாங்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சமூகத்தின் நோக்கும் மனக் கலக்கமூட்டுவதாயிருக்கிறது. இன்று விஞ்ஞானத்தின் அடிப்படையிலான கல்விக்கே போட்டியும் மதிப்பும் இருக்கின்றது. இவற்றுக்கு தொழிற் சந்தையில் மட்டுமன்றி ஞாயிறு பத்திரிகைப் பதிப்புக்களில் வருகின்ற திருமண விளம்பரங்களிலும் வைத்தியர், பொறியியலாளர் போன்றோருக்கு கூடிய கோரிக்கை நிலவுகின்றது. மறுபுறத்தில் சராசரிக் கலைப் பட்டதாரி தொழிற் சந்தையில் நிராகரிக்கப்படுகின்றான். இது கலைப் பீடத்தின் அந்தஸ்தைக் குறைத்து, கலைப் பட்டதாரிகளின் மனோ திடத்தையும் அழித்து விடுவதாக இருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் தாபன அமைப்பு என்பவற்றில் உள்ள சில குறைபாடுகளும் ஆசிரியர்களின் அக்கறையின்மைக்குக் காரணமாகும். இலங்கைப் பல்கலைக்கழகங்கள் ஒரு முரண்பாடான நோக்கை பின்பற்றுகின்றன. கற்பித்தல் அவர்களது பிரதான வேலையாக இருந்த போதிலும் பதவி உயவுகளின்போது கற்பித்தல் திறன், பாடநூல்களின் தயாரிப்பு மாணவர்களின் வேட்கையைத் தூண்டும் பண்பு என்பன பற்றிக் கவனிக்கப்படுவதில்லை. இலங்கைப் பல்கலைக் கழகங்களில் ஒரு பிரதான நடவடிக்கையாக விளங்காத ஆராய்ச்சி வெளியீடுகளே பதவி உயர்வுக்குரிய அடிப்படை அம்சமாக கருதப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழகக் கல்வியை உயர்த்துவதற்கு பயிற்சி அவசியம் என்பது பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பேராதனை மருத்துவ பீடத்தைத் தவிர வேறு பீடங்களில் பயிற்சிக்கான வசதிகள் இல்லை 1970 ல் இலங்கைப் பல்கலைக்கழகம் ஒரு பயிற்சித் திட்டத்தினை அறிமுகம் செய்ய முயற்சித்தது. ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் இத் திடம் கைவிடப்பட்டது. மேலும், எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும், திணைக்களங்களுக்கும்பொதுவான பிரச்சினைகளை பற்றித் தீர்மானிப்பதற்கு மத்திய திட்டமிடலும் ஒன்றிணைப்பும் அவசியமாகும். உதாரணமாக ஆராய்ச்சி முன்னுரிமைகள், பயிற்சிக்கு ஒதுக்கக்கூடிய பணம், வரவு கட்டாயமானதா அல்லது எதேச்சையானதா போன்ற அம்சங்களைக் குறிப்பிடலாம்

**ஆராய்ச்சி வசதி**

உயர் பிரிவேணக்களில் ஆராய்ச்சி மரபு பேணப்பட்ட போதிலும் நவீன பல்கலைக்கழகக் கல்வி முறை பிரதான அம்சத்தினைக் கொண்டிருக்கவில்லை இது பல்கலைக்கழகக்கல்வியின் ஒரு பணியாகக் கருதப்படவில்லை. குடியேற்ற ஆட்சியாளர்கள் நாட்டுக்குத் தேவையான ஆராய்ச்சியை அமைச்சுக்களுக்குள்ளாகவும், திணைக்களங்களுக்குள்ளாகவும் நடத்தினர். இவ்வாறாக பல்கலைக் கழகக் கல்வி ஆராய்ச்சி அம்சம் இன்றி ஆரம்பத்திலேயே வலுவிழந்திருந்தது.

எனினும், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி அறிவு அவசியம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிரேஷ்டதரங்களுக்கான பதவி உயர்வுகளின்போது ஓர் உயர் பட்டமும், பதிப்பிக்கப்பட்ட ஆராய்ச்சியும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஆனால், இந்த அனுபவத்தை இங்கிலாந்திலும் உலகின் வளர்ச்சியடைந்த பாகங்களிலிருந்துமே பெற வேண்டி உள்ளது. இது இலங்கையின் புத்தி ஜீவிகளைப் பரந்த புத்தி ஜீவிகள் சமூகத்திற்குள் இட்டுச்சென்றபோதிலும் குறைபாடுகளும் காணப்பட்டன. ஏனெனில் அவர்கள் வெளிநாடுகளில் கற்றவற்றை உள்நாட்டில் அருமையாகவே பிரயோகிக்க முடிகிறது. மறுபுறத்தில், உள்நாட்டு ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்ய வேண்டிய உள்ளூர் அறிவு வெளிநாட்டு நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்றன.

பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியிலும் சிலரின் ஆராய்ச்சிப் பங்களிப்புக்கள் சர்வதேச புகழ் பெற்றுள்ளன. இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தின வருடாந்த அமர்வின்போது பல்கலைக்கழக ஆசிரியர்களின் கட்டுரைகளே பெரும்பாலும் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும், பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி வெளியீடு போதியதாகக் கருதப்படவில்லை.

பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனங்களிலேயே நடாத்தப்படுகின்றன. இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி டிப்ளோமா தவிர ஏனைய பட்டப்பின் கற்கைகள் மிக அண்மைக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. தற்போது மருத்துவம், விவசாயம், பௌத்தம் போன்ற துறைகளிலே யேபட்டப்பின் படிப்பு நிறுவனங்கள் உள்ளன. எனவே பட்டப்பின் படிப்பு விஸ்தரிக்கப்படுதல் அவசியமாகும். பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சித் துறையைக் கட்டியெழுப்ப இயலாமைக்குக் காரணம் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பானதாகும். ஆராய்ச்சி அனுபவத்தை வேண்டுகின்ற தொழில்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். பெரும்பாலான பட்டதாரிகள் ஒரு தொழில் கிடைக்கும் வரையில் பட்டப் பின் கல்வியையோ ஆராய்ச்சியையோ மேற்கொள்கின்றனர். தொழில் கிடைத்ததும், இதனை இடை நிறுத்துகின்றனர். எனவேபட்டப்பின் படிப்பு நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் மிகவும் கடினமாகும்.

**ஏனைய ஆராய்ச்சி நிறுவனங்கள் :**

சென்ற காலங்களில் பல்கலைக்கழகங்களுக்கு வெளியில் பல ஆராய்ச்சி நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுட் சில அரசாங்க நிறுவனங்களாகவும், இன்னும் சில தனியார் நிறுவனங்களாகவும் உள்ளன. இவற்றுள் மிகப் பழமையானவை பெருந்தோட்டப் பொருளாதாரத் தேவைகளுக்காக நிறுவப்பட்டவையாகும். தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், தென்னை ஆராய்ச்சி நிறுவனம் என்பன இதில் குறிப்பிடத்தக்கவைகளாகும். மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இவற்றின் பின்னர் தாபிக்கப்பட்டதாகும். அண்மைக் காலத்தில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. கைத்தொழிற் துறையின் தேவையைக் கருதி இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் இராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவும்தமதுசொந்தஆராய்ச்சிப் பிரிவுகளைக் கொண்டுள்ளன.

இதே போன்று பல அமைச்சுக்களும் ஆராய்ச்சிப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. பல் தேசிய தாபனங்களும் தமது சொந்த ஆராய்ச்சிப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இவை இளம் பட்டதாரிகளை சேர்த்து தமது தேவைக்கு ஏற்ப பயிற்றுவிக்கின்றன. பல்கலைக்கழகங்கள் இவற்றுடன் ஒன்றிணைந்து இயங்குதல் அவசியமாகும்.

**நிதி :**

ஆராய்ச்சியை முன்னேற்றுவதற்கு போதிய நிதி இன்மை ஒரு குறைபாடு எனக் கூறப்படுகின்றது. ஆக்கபூர்வமான ஆராய்ச்சித் திட்டங்களுக்குப் பல்கலைக்கழகங்கள் அரசாங்க நிதியில் தங்கியிருக்க முடியாது. வேறு நாடுகளில் அமைச்சுக்கள், தனியார் நிறுவனங்கள், சர்வதேச தாபனங்கள் என்பன ஆராய்ச்சிக்கு நிதி வழங்குகின்றன. சென்ற ஒரு தசாப்த காலத்திற்குள் ஆராய்சசி, உசாத்துணை நிறுவனங்கள் பெருமளவு தோன்றியிருப்பதிலிருந்து நாட்டில் ஆராய்ச்சிக்கான தேவையிருப்பதனை அறியலாம். பல்கலைக்கழகங்களும் முன்னரை விடவும் கூடுதலாக இம் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. (அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ குடாநாட்டின் அபிவிருத்திக்கு அடிப்படையான மூலவளங்களைப் பற்றி ஒரு ஆய்வினை நடாத்தியது). இவை ஆசிரியர்களின் தனி முயற்சியின் விளைவுகளாகும். ஆனால், ஆராய்ச்சிக்குரிய வாய்ப்புகளிலிருந்து உச்ச பயன் பெறப்படுவதில்லை. உதாரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட பணம்குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு சில ஆசிரியர்கள் தவிர ஏனையோரின் ஆராய்ச்சி நடவடிக்கை போதாது எனக் குறை கூறப்படுகின்றது ஆசிரியர்களுக்குரிய வேலைப் பளுவே இதற்குக் காரணமாகும். வேலை நிலைமைகளும் வாழ்க்கை நிலைமைகளும் சிறப்பாக இல்லாத போது ஆராய்ச்சி நடவடிக்கைகளும் குறைவாகவே இருக்கும் எனக் கூறுதல் வேண்டும். எனினும், முன்னரை விடவும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. கற்பித்தலுக்கு ஆராய்ச்சி உறுதுணையாக இருப்பதால் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அறிவியல் ரீதியான ஆராய்ச்சி உலகைக் குலுக்குகின்ற முடிவுகளைத்தரக் கூடியதாகும். ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்ப பாடசாலை மட்டங்களிலிருந்தே செய்யலாம்; இதுகற்றலை உந்துதல் மிக்கதாக மாற்றும். எனவே பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சியை பட்டப் பின் படிப்பு மட்டத்திலிருந்து மாத்திரமன்றி அதற்கு முன்னருள்ள மட்டத்திலிருந்தே மேற்கொள்ளலாம். ஏற்கனவே சிலபல்கலைக்கழகப் பிரிவுகளில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆராய்ச்சி ஒரு அவசியமான அம்சமாக அமையின் கல்வி மட்டம் உயர்வடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரேபிய வளைகுடா நாடுகளிலிருந்து முதலீடு பெறுதலும் வர்த்தக வாய்ப்புகளும்

## இலங்கை நிலை தொடர்பான சில குறிப்புகள்

— ஆர். ஏ. அரம்பேவெல

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயம் நிறுவப்பட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பும் அளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, இலங்கையினால் முதலீட்டுத் திட்டங்களுக்கு குறிப்பிடத்தக்க அளவு வெளிநாட்டு மூலதனத்தைக் கவரக் கூடியதாக உள்ளது. பல ஆசிய நாடுகள், அரபு உலகின் பாரிய மூலதன உட்பாய்ச்சலினால் நன்மை பெறுகின்ற அதேவேளை, இத்துறையில் இலங்கை புதிதாக வே உட்பிரவேசித்துள்ளது. முதலீடடுக்குரிய ஒரு இடம் என்ற இலங்கையின் பொதுத்தோற்றம் இன்னும் நடுந்தரமானதாகவே உள்ளது.

சிறப்பாகத் திட்டமிடப்பட்ட பிராந்தியம் சார்ந்த ஊக்குவிப்பு முயற்சிகளின் துணையுடன் இலங்கை முதலீட்டுத் துறையில் அரபு உலகுடன் சிறந்த உறவினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு திட்டத்தினதும் அமுலாக்கக் கூடிய தன்மையின் அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய துறைகள் வேறுபட்டு அமையும். திட்டப் பங்கெடுப்பு, கூட்டு முயற்சி என்பவற்றின் வடிவில் முதலீடு இடம்பெறலாம். சந்தையைப் பொறுத்தவரையில் மத்திய கிழக்கு சந்தை அல்லது பொருள் தயாரிக்கப்படுகின்ற நாட்டுச் சந்தை மிகப் பொருத்தமானதாக அமையும்.

அதிகமான முதலடுகள் மெய் ஆதனங்களிலும் உல்லாசப் பிரயாணத் (ஹோட்டல்) திட்டங்களிலும் இடம்பெற்றிருப்பதுடன், கைத்தொழிற் தயாரிப்புத் துறையில் எல்லை முதலீடே இடம்பெற்றுள்ளது என இலங்கையின் அரபு முதலீடு தொடர்பான ஒரு நுண்ணாய்வு காட்டுகின்றது; உல்லாசப் பிரயாணத் திட்டங்கள் அரபு முதலீட்டாளர்களை விசேடமாகக் கவர்ந்திருப்பதனால், மேலதிக முதலீட்டினை ஊக்குவிக்கக்கூடியதொரு துறையாக இதனை அடையாளம் காணலாம். விவசாயத் திட்டங்கள், பண்ணைகள், பெருந் தோட்டங்கள், விவசாய - கைத்தொழில்கள் என்பன அரபு முதலீட்டாளர்கள் விசேட ஆர்வம் செலுத்துகின்ற வேறு துறைகளாகும். ஊழியச் செறிவும், ஏற்றுமதிச் சந்தையும் கொண்ட பதனிடல், தயாரிப்புக்கைத்தொழில்கள் என்பனவற்றிலும் முதலீடு வாய்ப்புக்கள் உள்ளன.

பணப் பொருட்களை மையமாகக் கொண்ட முதலீடுகள் (பண்ட வர்த்தகம், பண்டத் தயாரிப்பாளர்களுக்குரிய நேரடி நிதிப்படுத்தல்) அரபு வர்த்தகர்களிடையிலும், வர்த்தக நிலையங்களிடையிலும் பிரபல்யம் அடைந்து வருவதாக மத்திய கிழக்கினதும், மேலைத் தேசத்தினதும் முதலீட்டு நுண்ணாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். உரியவழிப்படுத்தல்களுடன், போதிய ஊக்குவிப்புகள் அளிக்கப்பட்டால் உற்பத்தி, பதனிடல் என்பவற்றிற்கு மாத்திரமன்றி பல்வேறு புனருத்தாரணத் திட்டங்களுக்கும் இலங்கை மூலதனத்தை வேண்டி நிற்கின்ற தேயிலை, கோப்பி, சீனி, கொக்கோ போன்ற பண்டங்களின் சந்தைப்படுத்தலுக்கும் கூட முதலீட்டினைத் தோற்றுவிக்கலாம்.

### வர்த்தக முதலீட்டு நிலையமொன்றினை ஸ்தாபிப்பதற்குரிய தேவை

இப்பிராந்தியத்தில் கிடைக்கக்கூடிய பொருளாதாரவாய்ப்புகளை உலகில் உள்ளஎல்லா நாடுகளும் சிறப்பாகப் பயன்படுத்த முயற்சிக்கின்ற தீவிர போட்டிமிக்க ஒரு சந்தையாக மத்திய கிழக்கு மாறியுள்ளது. மூலவளங்கள் இன்மையால், இலங்கை இன்றுவரையிலும் இப் போட்டியை எத்தகைய பலத்துடனும் எதிர்நோக்க இயலாத நிலையிலுள்ளது. ஏனைய பல நாடுகளைப் போன்று மத்திய கிழக்கில் தனது நலன்களைக் கவனிப்பதற்கு வெளிநாட்டு தூதரகங்களையோ அல்லது வர்த்தக முகவர்களையோ இலங்கை கொண்டிருக்கவில்லை. மிக அண்மைக் காலத்தில் இந் நிலையில் தீவிர மாற்றம் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்க இயலாது. ஆகையால், இந்த இடைவெளியை தொழில்சார் ரீதியில் நிரப்புவதற்குரிய தேவை இலங்கையின் பிரதான கடமையாக விளங்குகின்றது. அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட வர்த்தக முதலீட்டு நிலையம் இத் தேவையைச் சிறப்பாக நிறைவுசெய்யும் என உணரப்பட்டுள்ளது.

வர்த்தக முதலீட்டு நிலையமொன்றினை ஸ்தாபிப்பதில் உள்ள சில பிரதான சாதனங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொழில் ரீதியில் இலங்கையை விற்பனை செய்வதற்குரிய சாத்தியம். இலங்கைத் தயாரிப்புகளுக்கும், சேவைகளுக்கும் இந் நிலையம் ஒரு காட்சி அறையாக விளங்கலாம். இலங்கை குறித்த சில பொருட்கள், சேவைகள் என்பவற்றிற்குரிய ஒரு நிரம்பல் நாடாகவே பெயர் பெற்றுள்ளது; வேறு துறைகளில் இலங்கை எதனை வழங்கலாம் என்பது சந்தைக்குத் தெரியாது. ஆகையால், இலங்கையின் வர்த்தக முதலீட்டு வாய்ப்புகளைச் சுட்டிக்காட்டித் தகவலைப்பரப்புதல் இந் நிலையத்தின் ஒரு பிரதான பணியாகும்.

2. வர்த்தகம், முதலீடு தொடர்பான நடவடிக்கைகளை அதே இடத்தில் ஒன்றிணைக்கக்கூடிய வாய்ப்பும் அதன் மூலம் உள்ளூர் வர்த்தகர்களுக்கும் இலங்கை வர்த்தகர்களுக்கும் இடையில் ஒரு நேரடி இணைப்பாக இந் நிலையத்தை மாற்றுதலும்.

3. இலங்கையின் உறுதியான ஈடுபாட்டினைத் தெரிவித்தல். தமது வர்த்தகப் பங்காளர்களின் ஈடுபாடு தொடர்பான விவகாரத்தில் அரபு உலகு மிகவும் கரிசனை கொண்டுள்ளது. வர்த்தக, முதலீட்டுநிலையமொன்று நிறுவப்பட்டால், அது இலங்கை தனது வர்த்தகம், பொருளாதார உறவுகள் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளமையை உறுதிப்படுத்தும்.

4. போட்டியாளர்களின் மூலவளங்களுக்கு ஈடுகொடுத்தல். இப் பிராந்தியத்தில் வர்த்தக, பொருளாதார உறவுகளை ஊக்குவிப்பதற்குப் பல நாடுகள் ஏற்கனவே இதனை ஒத்த நிலையங்களை நிறுவி உள்ளன. இப் போட்டியைச் சமாளிப்பதற்கு இலங்கையும் சமமான அளவு மூலவளங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

ஆகையால் மத்திய கிழக்கு சந்தைகளுக்கு தயாரிக்கக்கூடிய இலங்கைத் தயாரிப்புக்களதும், சேவைகளதும் காட்சி அறையாக இம் முன்மொழியப்பட்டுள்ள நிலையம் அமையலாம். வர்த்தக, முதலீட்டுத்துறையில் இலங்கையின் நலன்களை ஊக்குவித்தல் இதன் பிரதான பணியாக அமையும்; ஆகையால் இந் நோக்கினை அடைவதற்கு இது இயன்ற எல்லா மார்க்கங்களையும் பயன்படுத்திக்கொள்ளும். வர்த்தகமும், முதலீடும் இரு வேறுபட்ட துறைகளாகும்; எனினும் இவை இரண்டும் ஒன்றிற்கு ஒன்று துணையாக உள்ளன; ஒரு துறைக்குரிய நடவடிக்கை மற்றொரு துறை மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்பினை ஏற்படுத்தலாம். இவ் உத்தேச நிலையத்தின் நடவடிக்கைகள் எதனை உள்ளடக்குதல் வேண்டும் என்பதனைக் கட்டுரை ஆசிரியர் கீழ் வருமாறு சுருக்கித் தருகின்றார். இவை வர்த்தக ஊக்குவிப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன:–

**வர்த்தக ஊக்குவிப்பின் கீழ் உள்ள நடவடிக்கைகள்**

(அ) மத்திய கிழக்குச் சந்தைகளுக்குப்பொருத்தமான இலங்கைத் தயாரிப்புக்களை நிரந்தரமாகக் காட்சிக்கு வைத்தல்.

(ஆ) உள்ளூர் வர்த்தகவிசாரணைகள், தயாரிப்புக்கள் மீதான ஆலோசனைகள், தரம், விலைகள், கிடைப்புத்தன்மை என்பனவற்றைக் கவனித்தல்.

(இ) தயாரிப்புக்களைப் பதனிடவும், சந்தைப்படுத்தவும் கூட்டு முயற்சிகளை ஊக்குவித்தல்.

(ஈ) இலங்கைத் தயாரிப்புக்களை ஊக்குவிப்பதற்கு வர்த்தகச் சந்தைகள், கண்காட்சிகள், என்பவற்றில் பங்குபற்றுதல்.

(உ) சந்தைகள், தயாரிப்புக்கள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றல். இலங்கைத் தயாரிப்புக்கள், சேவைகள் என்பவற்றின் சந்தை வாய்ப்பினை அடையாளம் காணுதல்.

(ஊ) இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஆலோசனைச் சேவைகளை அளித்தல்.

(எ) இலங்கையிலிருந்து உள்ளூர் செயற் திட்டங்களுக்கு அளிக்கின்ற தொழிற் சேவைகள், நிபுணத்துவம் என்பன தொடர்பாக அரசாங்க திணைக்களங்களுடனும் தொடர்புள்ள முகவர்களுடனும் தொடர்பு கொள்ளுதல்:-

**முதலீட்டு ஊக்குவிப்பின் கீழான நடவடிக்கைகள்**

(அ) இலங்கையின் திட்டக்களில் மத்திய கிழக்குமுதலீட்டாளர்களுககும்இலங்கைப் பங்காளர்களுக்குமிடையேதொடர்பினைஏற்படுத்தவசதி செய்தல்.

(ஆ) இலங்கைப் பங்காளர்கள் தொடர்பான ஆலோசனை, மூலவளங்கள், கைத்தொழில் அமைவிடங்கள் பற்றிய வழிகாட்டல், சட்டச் செய்முறைகள், இலாபத்தை மீளப் பெறல், சந்தை வாய்ப்புக்கள் தொடர்பான ஆலோசனைகள்.

(இ) கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல். இலங்கை முயற்சியாளர்களைச் சந்திப்பதற்கு மத்திய கிழக்கு முயற்சியாளர்களுக்கு வசதி செய்தல்;

(ஈ) சந்தைகளிலும், கண்காட்சிகளிலும்பங்குபற்றுதல்.

முன் மொழியப்பட்டுள்ள இந் நிலையத்தின் நடவடிக்கைகளின் வெற்றி பெரும்பாலும்

(33ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க தீர்மானங்கள்

# அவற்றின் மீது செல்வாக்கு பிரயோகிக்கும் ஆவணங்களில் காணப்படும் பிழைகள் அவற்றின் காரணங்களும் பரிகாரங்களும்

—ஜோன் தியன்தாஸ்

**தீர்மானங்களை எடுப்பதற்கு ஆதாரமாக இருக்கும் ஆவணங்களில் காணப்படும் பிழைகள், பொருத்தமற்ற தீர்மானங்களை எடுப்பதற்கும், இறுதியில் அவற்றை நம்பிச் செயற்பட்டோரை சங்கடத்தில் மாட்டி விடுவதற்கும் வழி கோலக் கூடியவை. அரசாங்கத்தின் தீர்மானங்கள் எடுக்கும் மிக உச்சமட்டத்தில் கூட இப்படி நிகழ முடியும் என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த அமர்வுகளுக்காக (டிசம்பர் 1982) சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சிக்கட்டுரையில், இத்தகு பிழைகள் ஏற்படுவதற்கான காரணங்களையும், அவற்றுக்குரிய சில பரிகாரங்களையும் ஜோன் தியன்தாஸ் விளக்குகிறார். தொழில் முறையில் ஒரு பட்டயக்கணக்கறிஞரான அவர், போக்குவரத்து, வலு போன்ற துறைகளில் ஆராய்ச்சி ஈடுபாடு காட்டி வருகிறார்.**

பிரதானமாகப் புள்ளி விவரத் தகவல்களை அளிப்பதில் அரசாங்க முடிவுகளுக்கான அடிப்படையாக உபயோகிக்கப்படும் ஆவணங்களுக்குள் உண்மையைப்பொறுத்த பிழைகள் நுழைந்து விடுகின்றன. சில பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களிலும் சில பிரசுரிக்கப்படாத ஆவணங்களிலும் இத்தகைய பிழைகள் நேர்ந்துள்ளதற்கான உதாரணங்கள் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

இத்தகைய ஓர் உதாரணம் நாட்டின் வாகனத் தொகை பற்றிய புள்ளி விவரமாகும். இங்கே பதிவேட்டிலுள்ள வாகனங்களின் தொகை லைசென்ஸ் வழங்கப்பட்ட வாகனங்களின் தொகையைவிட 50 சதவிகிதம் அதிகமாயுள்ளது. இப்படியிருந்தபோதிலும், குடி ஜனமதிப்புத் திணைக்கள வெளியீடுகள் "பதிவேட்டிலுள்ள" தொகையை அதிகாரபூர்வமாகக் கூறுபடுத்தி, சீர் தூக்கி ஆராய்கின்றன. இந்த முரண்பாடு அவ்வெளியீடுகளுக்குத் தெரியாது போலும். ஏனைய உதாரணங்கள், சிறுநீருப்பு(யூரியா) நிலக்கீல் தைலம் (நப்தா) ஆகியவற்றின் நிறை விகிதங்களைத்தவறாக விளங்கிக் கொண்டமை, உலக வங்கி ஆலோசனை அறிக்கையொன்றில் 1981 ம் ஆண்டுக்குரிய மின்சார உபயோகம்பற்றிய மிகைக் கூற்று (பத்தாண்டுக் கால முற்கணிப்பொன்றுக்கு அடிப்படையாக இநத மிகைக் கூற்று உபயோகிக்கப்படுகிறது), நாட்டின் வர்த்தக எரிசக்தியில் 10 சத விகிதத்தை மட்டுமே நீர் மின்சாரம் வழங்குவதாகத் தவறாகக் குறிப்பிடும் அமைச்சரின் ஓர் உரை பற்றியனவாகும்.

இவ்வழுக்கள் ஒன்றில்ஆவணத்தைச் சுயேச்சையாக மதிப்பாய்வு செய்யாததனாலோ அல்லது பொருளடக்கத்தைத் தொகுப்பாளர் உணராததாலோ அல்லது இவ்விரு காரணங்களினாலோ தான் எழுகின்றனவென்று இக்கட்டுரை எண்ணுகிறது. முக்கியமான முடிவுகள் சம்பந்தப்பட்டுள்ள இத்தகைய ஆவணங்கள் நுணுக்கமாக ஆராயப்படுவதற்கான முறையொன்று அமைக்கப்படவேண்டுமென இக்கட்டுரை சிபார்சுசெய்கின்றது.

**1. முகவுரை**

1.1 அரசாங்கம் என்பது பல பேரைக் கொண்ட ஓர் உருவமற்ற கதம்ப ஸ்தாபனம். உண்மையில் முடிவு செய்வோர் யார் என இனங் காண்பது சில சமயங்களில் கடினமாகும். யோசனைகள் பல்வேறு இடங்களில் பல்வேறு மட்டங்களில் பிறப்பிக்கப்படுகின்றன. அவை முடிவுகள் ஆகின்றனவா அல்லவா என்பது பெருந்தொகையானநிகழ்வுப் போக்குகளையும் நடைமுறைகளையும் சார்ந்திருக்கின்றது.

1.2 முடிவுகளின் மீது செல்வாக்குப் பிரயோகிக்கும் சில தஸ்தாவேஜுகளில் (பத்திரங்கள்), மோசமான முடிவுகளை உண்டாக்கிய அல்லது உருவாக்கிய அல்லது உண்டாக்கியிருக்கக்கூடிய அல்லது உருவாக்கியிருக்கக்கூடிய பாரதூரமான பிழைகள் அடங்கியுள்ளன.

1.3 இப்படி என் நேருகின்றதென்று அநுமானிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும், சில பரிகாரங்களை ஆராய்வதுமே இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும். இப்பணியைச் செய்வதற்காக, முடிவுகள் மீது செல்வாக்குப் பிரயோகிக்கும் ஆவணங்களில் காணப்படும் பிழைகளுக்குச் சில உதாரணங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

## 2. அரசாங்க முடிவுகள் செயல்படும் முறையியல்கள்

2.1 முடிவுகளைச் செய்யத் தூண்டும் காரணிகளில் சில:—

.1 அசமந்தம் அஃதாவது முன்பு செய்தது போலவே செய்.
.2 பளிச்சிடும் கருத்துக்கள்.
.3 சுயநல நாட்டமுள்ள குழுக்களின் பகிரங்க அல்லது அந்தரங்க நோக்கங்கள்.
.4 மாற்று வழிகளை ஆழமாக ஆராய்தல்.
.5 முழுமையான திட்டங்களின் அல்லது இயனேக்குகளின் கூறுகளுடைய தேவைகள்.
.6 தற்போது இருந்துவரும் வேலைத்திட்டங்களில் வெளிப்படையாகத் தெரியும் அல்லது மேல் தோற்றத்துக்குத் தெரியும் தவறுகள்
.7 நெருக்கடிகள்.

.2 முடிவுகளுக்கு அடிகோலும் நிகழ்வுப்போக்குகளின் நடைமுறைகளில் சில வருமாறு :—

1 கலந்துரையாடலும் விவாதித்தலும்.
2 சுயநலநாட்டமுள்ளோரும் தகவல் தொடர்புச் சாதனங்களும் பிரயோகிக்கும் நெருக்குதல்.
.3 பல்வேறு விதிமுறைகளையும் நீளங்களையும், கொண்ட ஆவணங்கள் குறிப்பிடும் யோசனைகள்.
4 அளப்பல், உபகதை, ஊர்ப்பேச்சு.

2.3 கணிசமான முடிவுகளைச் செய்யும் இடங்களில் சில :—

.1 சுயநல நாட்டமுள்ள முக்கிய குழுக்கள்.
.2 முக்கிய நிர்வாகிகள்.
.3 அமைச்சர்.
.4 அபிவிருத் திக்காரியதரிசிகளின் கமிட்டி.
.5 அமைச்சரவை.
.6 ஜனுதிபதி.

2.4 சில சமயங்களில், விவகாரம் பற்றிய யோசனையைக்கொண்ட ஓர் ஆவணம், மந்திரிசபைத் தஸ்தாவேஜு, மகஜர், காரியசாத்தியம் பற்றிய பரிசீலனையறிக்கை, மாற்று விதிகளைப்பற்றிய அறிக்கை, பாராளுமன்ற விவாத அறிக்கைப்பத்திரம், —நீங்கள் அதை என்ன பெயர்கொண்டு அழைத்தாலும் — அதுவே முடிவு செய்யப்படுவதற்குஉண்மையில் அடிப்படையாக அமைகின்றது. சில சமயங்களில் அது ஒரு செய்திட்டத்துக்கோ அல்லது வேலைத் திட்டத்துக்கோ அல்லது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கொள்கைக்கோ அல்லது கொள்கை மாற்றத்துக்கோ ஆதரவை மட்டுமே அளிக்கின்றது. இவ்விஷயத்தில், சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜு உண்மையான யோசனைக்குப் பாதகமாயிருந்தால், அதிக இணக்கம் காட்டும் ஆவணமொன்றினுல் அது தட்டிவிடப்படலாம் அல்லது புரட்டிவிடப்படலாம்.

2.5 எனினும், எழுத்துமூலமான மதிப்பாய்வுகள் இதில் முக்கியமான பங்காற்றுவதாகத் தோன்றுகிறது. எனவே, இந்த மதிப்பாய்வுகளை எழுதுபவர் யார்? எந்த உண்மைகளையும் முற்கணிப்பையும் அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதுகிருர்? உட்கிடைகளை அவர் எவ்வளவு தூரம் அறிந்துணர்ந்து எழுதுகிருர்? என்ற கேள்வி எழுகின்றது. சில ஆவணங்கள் உயர்தகைமை படைத்தனவாய் உள்ளன. மற்றவை அவ்வளவு தகைமையுள்ளனவாக இல்லை. சிலசமயங்களில் உயர் தகைமையுள்ள தஸ்தாவேஜுகளில் கூட உண்மையைப் பொறுத்த வழுக்கள் அல்லது கணக்குப் பிழைகள் நுழைந்துவிடுகின்றன. எனினும், வரலாறு, நிதிகள் அல்லது கணக்கீடு சம்பந்தமான அறிக்கைகளில் போலவன்றி, இத்தகைய தஸ்தாவேஜுகள் எதுவும் ஒழுங்காகச் சுயேச்சையான சரி—பிழை பார்க்கும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை.

## 3. கவனக்குறைவான மதிப்பாய்வுக்கு உதாரணங்கள்

### 3.1 எரிசக்தியில் நீர் — மின்சாரத்தின் பங்கு:

1. 1979ஆம் ஆண்டில் மத்திய வங்கி எரிசக்தி பற்றி வெளியிட்ட அறிக்கையொன்றில் தரப்பட்டுள்ள ஓர் அட்டவணையில், 1970ன் பிற்பகுதியில் (விறகு நீங்கலாக) மொத்த வர்த்தக எரிசக்தி உபயோகத்தில் பெற்றோலியம் பொருள்கள் 90 சதவிகித நிலைக்கு வளர்ந்தனவென்றும், (நீர்) மின்சாரத்தின் ஒப்பியல் பங்கு 10 சதவிகிதத்துக்குக் கீழேயே இருந்ததென்றும் மிகத்தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் அடுத்த பந்தியில் சங்கரும், பொன்னுண்டோவும் தெரிவித்த கருத்துக்களை எற்று, ஒரு நீண்ட முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அஃதாவது, எண்ணெயில் அல்லது நிலக்கரியில் உள்ளடங்கியுள்ள வெப்பம் மின்சார சக்தியாகவோ அல்லது இயக்கு சக்தியாகவோ மாறறப்படும் போது, வெப்பத்தில் 70 சதவிகிதம் இழக்கப்பட்டு வருகிறது ; இதற்கு ஏது சொல்லப்பட்டால், (நீர்) மின்சாரத்தின் ஒப்பியல் பங்கு 30 சத விகிதத்துக்கு அதிகரிக்கிறது என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.2 அமைச்சரொருவர் ஒரு முக்கியமான கருத்தரங்கில் உரையாற்றுவதற்காக இந்த மத்திய வங்கி அறிக்கையை அடிப்படையாக உபயோகித்தார். முழு அட்டவணையையும் எடுத்துக் கூறிய அவர் "(விறகு நீங்கலாக) எரிசக்தி உபயோகத்தில் 90 சதவிகிதத்துக்கு மேல் பெற்றோலியப் பொருள்களால் பூர்த்தி செய்யப்படுகிறது ; இதில் மின்சாரத்தின் பங்கு 10 சதவிகிதத்துக்கும் குறைவாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். ஆனால், மத்திய வங்கியின் அறிக்கையில் அடுத்துவரும் பந்தியை அவர் எடுத்துச் சொல்லவில்லை. அல்லது அப்படி எடுத்துச் சொல்ல அவர் வழி நடத்தப்படவில்லை.

3 அமைச்சரின் உரை பத்திரிகைகளில் வெளிவந்தபோது, "மின்சாரத்தின் 10 சத விகிதப் பங்கு" வலியுறுத்தப்பட்டது. அதன் பின் அவருடைய முழு உரையின் சுருக்கமொன்று ஞாயிறு பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டது.

4 நீர் மின்சாரத்தின் சிறிய (10 சத விகிதம்) பங்களிப்பு அமைச்சரின் மனத்தில் பதிந்து விட்டதென்பது தெளிவு. அதே போல அவ்வருடைய உரையைக் கேட்டவர்கள், அதைப் பத்திரிகையில் வாசித்தவர்கள் பலரின் மனங்களிலும் இது பதிந்திருக்கும். இந்தத் தவறான தகவலால் ஒரு குறிப்பிட்ட முடிவு செய்யப் படவிருந்ததென்பதோ அல்லது உருவாக்கப் படவிருந்ததென்பதோ இங்கு பிரச்சினையல்ல. ஆனால், பலருடைய உள்ளங்களில் பதிந்துவிட்ட இத்தவறான கருத்தை நீக்க, ஏதாவது சந்தர்ப்பம் எழும் வரை எரிசக்திப்பிரச்சினை பற்றியும் அதைப் பரிகரிப்பது பற்றியும் எத்தனையோவித மான மனோபாவங்கள் அரசியல் சிந்தனையிலும் மந்திரிசபையின் சிந்தனையிலும் வியாபித்திருக்கலாமல்லவா ?

.5 எனவே, நீர் மின்சாரம் வர்த்தக எரிசக்தியில் 10 சத விகிதத்தை மட்டுமே உற்பத்திசெய்வதாயிருந்தால் பெரும் முதலீடுகள் வாயிலாக நீர் மின்சார உற்பத்தியை இரட்டிப்பாக்கினாலும் கூட வர்த்தக எரிசக்தியில் அதன் பங்கு 20சதவிகிதமாகத்தானே இருக்கும். ஆதலால், எரி சக்தி சம்பந்தமான பெரும் பிரச்சினையில் நீர் மின்சாரத்தின் தாக்கம் அவ்வளவாக இருக்காது. ஆனால், நீர்-மின்சாரத்தின் பங்கு 30 சதவிகிதமாயிருந்தால், அப்பொழுது அதன் பங்கை 60 சத விகிதத்துக்கு இரட்டிக்க முடியும். அதன் மூலம் ஒரு வேளை நாட்டின் எண்ணெய் இறக்குமதிகளுக்காகச் செலவிடப்படும் பணத்தில் மூன்றிலொருபங்கை மிச்சப் படுத்தலாமல்லவா?

6 மத்திய வங்கி அறிக்கையின் பின் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள முன்னறிவிப்புக்களைத் தேடிப் பார்க்காமல் பொருளியலாளர்கள் எழுதியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்ததற்காக மந்திரி மார்மீது ஒருவர் குற்றஞ் சொல்லக்கூடாது. எனினும், நீர்-மின்சாரத்தின் சிறிய அளவிலான பங்களிப்புப் பற்றி மனத்தில் பதிக்கப்பட்ட தவறான எண்ணம், அணு சக்தி உற்பத்தியில் ஈடுபடும் "கட்டுப்பாட்டை" மந்திரி சபை பின்னர் மேற்கொண்டதில் தனது பங்கு வேலையைச் செய்திருக்கக் கூடுமல்லவா? அணு சக்தி உற்பத்தியில் ஈடுபடுவதென்ற முடிவும் நிறைவற்ற தகவல்களையே பெருமளவுக்கு அடிப்படையாகக் கொண்டதென்பதில் சந்தேகமில்லை. எனினும், இந்தக் கட்டுப்பாடு, இப்பொழுது கைவிடப்பட்டுள்ளது.

### 3.2 வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதும் சென்மதி நிலுவைகள் மீதும் எண்ணெயின் தாக்கம்.

1.1 அதே அமைச்சரின் உரையும் ஞாயிறுபத்திரிகையில் வெளிவந்த அவருடைய உரைச் சுருக்கமும் 1976 ம் வருட எண்ணெய் இறக்குமதிகள், ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் 26 சதவிகிதமாக இருந்துள்ளன வென்பதைக் காட்டுவதற்காக மத்திய வங்கியின் தரவுகளை மேற்கோள் காட்டின. ஏற்றுமதிகளில் கால் பங்கு, நாட்டில் எரிசக்தி உபயோகத்தைப் பெறுவதற்காகப் போகிறதென்பது ஆழ்ந்த கவலையை உண்டாக்கும் ஒரு நிலைமையல்லவா?

1.2 எனினும், 1976 ம் ஆண்டில் 121 கோடி 90 இலட்சம் ரூபா மதிப்புள்ள எண்ணெய் இறக்குமதிகள் நடைபெற்ற அதே வேளை, மறு ஏற்றுமதிகள் 51 கோடி 40 இலட்சம் ரூபா வருவாயைக் கொண்டுவந்தன, எனவெ எரி சக்திக்கான நிகர செலவு 70 கோடி 50 இலட்சம் ரூபா மாத்திரமேயாகும். இந்த அடிப்படையில், எண்ணெய் உபயோகத்துக்கு ஏற்றுமதி வருமானத்தில் 16 சத விகிதம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. சகல ஏற்றுமதிச் சம்பாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களும் சேர்க்கப்பட்டால் (அஃதாவது, உல்லாசப்பயணிகள் வருகையால் கிடைக்கும் வருமானம் போன்ற "கட்புலனுகா" வருவாய்களும் மேற்கு ஆசியாவிலிருந்து அனுப்பப்படும் பணத்தொகைகளும்), அப்பொழுது எரிசக்தியின் செலவு விகிதம் இன்னும் குறைவாயிருக்கும்.

1.3 உண்மையைக் கண்டறிவதில் செய்யப்படும் அதே பிழை நாளது வரை தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. 1981 ம் வருட எண்ணெய் இறக்குமதிகளுக்கு ஏற்றுமதிகளின் சம்பாத்தியத்தில் 48 சதவிகிதம் செலவிடப்பட்டதாகப் பலர் நம்புகிருர்கள். எனினும், எண்ணெயின் மறு ஏற்றுமதிகளுக்கும் கட்புலனுகா ஏற்றுமதிகளுக்கும் கணக்கில் சீராக்கங்கள் செய்யப்படும் போது, எண்ணெய் இறக்குமதிகளின் செலவு விகிதம் எறக்குறைய 27 சத விகிதமாகவே உள்ளது.

4. எண்ணெய் இறக்குமதிகள் சம்பந்தமாக இத்தகைய குறைவான செலவு விகிதங்கள் எல்லாம் சரியாயிருக்கிறதென்ற சுயதிருப்தி மனப்பான்மைக்கு அடிப்படையாக இருந்திருக்கவேண்டும் என்பதோ அல்லது இருக்க வேண்டும் என்பதோ எமது கருத்தல்ல. ஆனல், எண்ணெய் இறக்குமதிகளின் செலவுவிகிதம் 1976 ம் ஆண்டில் 24 சத விகிதமாகவும் 1981 ம் ஆண்டில் 48 சத விகிதமாகவும் இருந்ததென்று உயர்வான விகிதங்களைக்காட்டினல், இதன் விளைவாக முடிவுகளைச் செய்யும் பலரின் மனத்தில் தவருன இயநோக்குகள் எழக் கூடுமென்பது தெளிவு.

3.3 மின்சாரத்தின் செலவு.

.1 எரிசக்தி வரலாறறலே சற்றே ஆரம்ப கட்டத்தில் அரசாங்க மின்சார வேலைகள் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையொன்றில், மின்சார சக்தியின் செலவு ஒரு கிலோ வாட் மணி நேரத்துக்கு 9 ரூபா 98 சதம் எனக் குறிப்பிடப்பட்டது. சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இந்த அறிக்கை பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.

.2 எனினும், இந்தச்செலவுவிவரம் எடுக்கப்பட்ட திணைக்களத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பற்றிய பகுப்பாய்வொன்று தொழில்முறையான சஞ்சிகையொன்றில் வெளியிடப்பட்டது. இந்தப் பகுப்பாய்வில் மூலதனச் செலவுகளுக்கும் கடன் தீர் நிதிக்கும் வட்டிக்கும் மற்றும் பல வற்றிற்கும் சீராக்கங்கள் செய்யப்பட்டிருந்தன. முதலில், பல்வேறு முறைகள் மூலம் உற்பத்திசெய்யப்படும் மின் சாரத்தின் உண்மையான ஒப்படைப்புச் செலவுகள் தரப்பட்டன. அவை வருமாறு:— ஒரு கிலோ வாட் மணிநேரத்துக்கு நீர்-மின்சாரம் 3 ரூபா 79 சதம்; கல்லோயா கொள்வனவு மின்சாரம் 6 ரூபா 85 சதம்; அனல், மின்சாரம் 10 ரூபா 63 சதம்—சராசரியாக 5 ரூபா 24 சதம்.

.3 இவ்விதமாக, சஞ்சிகையில் காட்டப்பட்ட முழுமையான செலவு அறிவிக்கப்பட்ட தொகையில் பாதிக்குச் சற்று மேற்பட்டதாயிருந்தது. ஆனல் திரட்டப்பெற்ற செலவுத் தொகை பிரிக்கப்பட்ட போது, நீர்-மின்சாரத்தின் (அப்பொழுதும் இப்பொழுதும் இதுவே பிரதான உற்பத்தி மூலமாக இருக்கிறது.) செலவு அறிவிக்கப்பட்ட செலவில் மூன்றிலொருபங்குக்குக் சற்று மேற்பட்டதாயிருந்தது.

.4 இவ்விஷயத்தில் கூட குறிப்பான முடிவுகள் பெருப்பிக்கப்பட்ட செலவு உணர்வினல் உருவாக்கப்பட்டிருக்கலாம் அல்லது உருவாக்கப்படாதிருக்கலாம். எனினும், மின்சாரத்தின்விலை நிர்ணயம் பற்றிய சில முடிவுகள், நீர் மின்சார முதலீடுகள் பற்றிய சில வாய்ப்புகள், தேயிலைத் தொழிற்சாலைகளை அல்லது புகைவண்டிப் பகுதியை மின்சாரமயமாக்குவதற்கான சில யோசனைகள் இந்தத் தவருன எண்ணத்தினல் பாதிக்கப்பட்டிருப்பது சாத்தியம்.

.5 இன்று மின்சாரச் செலவு பற்றி நல்ல திருந்திய ஆராய்ச்சிக்கட்டுரைகளும் ஆவணங்களும் (எனினும் உத்தியோகபூர்வமான பிரசுரங்கள் குறைவு) உள்ளன. எனினும் தனியான செய்திட்ட யோசனைகள் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாகப் பிரயோகிக்க வேண்டிய எல்லைச் செலவுகளை விட, அநுமானிக்கப்பட்ட சராசரிச் செலவுகளையும் விலைகளையும் கணக்கெடுத்துக்கொள்ளும் ஆபத்து இன்னும் இருந்து வருகிறது.

3.4 நிலக்கரிச் சக்திநிலையமொன்றை அமைப்பதற்கான வாய்ப்புகள்

.1 இன்னேர் உதாரணம் என்னவென்றல், பெரிய (1080 கிலோவாட்) நிலக்கரி எரியும் அனல் சக்தி நிலையமொன்றில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கணிப்பியலை ஆராயும் ஓர் ஆலோசகரின் அறிக்கையாகும்.

.2 கணக்கிடும் தொடையொன்றில் 60,000 தொன் கொள்ளளவுள்ள நிலக்கரிக் கப்பல்கள் தேவையென்றும், இவை முதலாவது கட்டத்தில் (60 மெகவொட்) வருடாந்தம் 3 கப்பல்கள் வீதம் வளர்ந்து, இறுதிக்கட்டத்தில் (1080மெகவொட்) 36கப்பல்களாக இருப்பதவசியமென்றும் மதிப்பிடுகிருர்.

.3 ஆனல், சுமைக்காரணியில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லையென்று ஊகித்துக்கொள்வோம். அப்பொழுது 18 ஆல் (1080 ஐ 60 ஆல் பிரிக்கவும்) பெருக்கினல், 54 கப்பல்கள் தேவைப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரியவருகிறது. இது உத்தேசிக்கப்பட்டனத விட 50 சதவிகிதம் அதிகமாகும். அத்துடன், ஒவ்வொரு 10 நாட்களுக்குப் பதிலாக ஒவ்வொரு 7 நாட்களுக்கும் ஒரு கப்பல் வீதம் கையாள்வதுபோன்ற மற்றும் கணிப்பியல் தேவைகளையும் இது மாற்றுகின்றது.

.4 இவ்விடயத்தில், அறிக்கையின் நகல் தயாரிப்புக் கட்டத்தில் விழுந்த ஒரு தட்டச்சுப் பிழை அடுத்த நகலில் கூட்டற் பிழைக்கு அடிகோலி, இப்படியே பிழையைப் பெருப்பித்துக் கொண்டு போகின்றது. ஒரு பொறியியலாளர் விட்ட பிழையைப் பரிகசிப்பது சுலபம்; ஆனால் அப்படிச் செய்வது விவேகமற்ற செயலாகும். ஏனென்றால், எங்களுடைய அட்டவணைப் படுத்தல்களில் குறுக்குச் செவ்வை பார்த்தல்களுக்கு உபாயஞ் செய்தாலன்றி அல்லது அலகுவீதமான ஒப்பீட்டுச் சோதனைகளுக்கு நாம் திட்டமிட்டாலன்றி அல்லது எங்களுடைய வேலைகளைச் செவ்வை பார்க்க ஒரு சுயேச்சையான ஆளை அமர்த்தினாலன்றி நாமெல்லோரும் இத்தகைய பிழைகளை விடத்தான் செய்கிறோம்.

3.5 மின்சாரக் கோரிக்கை பற்றிய முற்கணிப்புகள்

.1 மின்சார நிலை பற்றிய ஆவணங்களை மீண்டும் ஒரு முறை ஆராயுமிடத்து, உலக வங்கியினதும், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட தாபனத்தினதும் நகல் அறிக்கையொன்று மின்சாரத்தின் வருடாந்த கோரிக்கை வளர்ச்சி உபகுதி வளர்ச்சி விகிதங்களில் 4 சத விகிதத்திலிருந்து 24 சத விகிதம் வரை இருக்குமென்று முற்கணிப்புச் செய்தது. இது 1,795 கிகா வாட் மணி விற்பனைகளைத் தரும் 1981ம் வருட மதிப்பீடான 2.112 கிகா வாட் மணி உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது. 1990 ம் வருடத்துக்கான முற்கணிப்பு யாதெனில், 4,342 கிகா வாட் மணி விற்பனைகள் நடைபெற வேண்டும் என்பதாகும். இதற்கு 5,108 கிகா வாட் மணி உற்பத்தி நடைபெறுவதசியம். (கிகா வாட் என்பது 100 கோடி அல்லது ஒரு பில்லியன் வாட்டுகளாகும்.)

.2 அடுத்து, மின்சார நிலைய முதலீட்டுத் திட்டத்தை அநுமானிப்பதற்காக, கோரிக்கை பற்றிய இந்த முற்கணிப்பு காப்பு நடவடிக்கைகளுடனும் காப்பு நடவடிக்கைகளில்லாமலும் உபயோகிக்கப்பட்டது.

.3 1981 ம் வருட மதிப்பீடும் முற்கணிப்பும் 1981 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை மின்சார சபை செய்த முற்கணிப்பொன்றிலிருந்து எடுக்கப்பட்டனவென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. எனினும், உலக வங்கியினதும் ஐ. நா. அபிவிருத்தி திட்ட ஸ்தாபனத்தினதும் நகல் அறிக்கை 1982 பெப்ரவரி மாதத்தில் தான் வெளியிடப்பட்டது. இக்காலத்துள் 1981 ம் ஆண்டில் 1,492 கிகா வாட் மணி மட்டுமே உண்மையில் விற்கப்பட்டதென்பதைச் சுலபமாக நிதானிக்கக் கூடியதாயிருந்தது — இது ஆகஸ்ட் மாத மதிப்பீட்டை விட 17 சத விகிதம் குறைவாகும். 1,872 கிகா வாட மணியில் உற்பத்தி 11 சத விகிதம் மட்டுமே குறைவாயிருந்தபோதிலும், தொகுதி நஷ்டங்கள் 1981 ம் ஆண்டில் 20 சத விகிதத்துக்கு உயர்ந்துவிட்டன. உலகவங்கித் தூதுக்குழுவினர் தங்களுடைய அறிக்கையை 1981 அக்டோபர், நவம்பர் மாதங்களில் விவரமாக எழுத வேண்டியிருந்தபோதிலும், 1981 ம் வருடத்துக்கான விற்பனைகள் இ. மி. சபையின் முற்கணிப்பை விட வெகு குறைவாயிருக்குமென்பதை நிதானிக்கப் போதிய சந்தர்ப்பம் இருந்தது.

.4 அஃதெப்படியிருந்தபோதிலும், விஷயம் விவாதிக்கப்பட்ட காலத்தில் இப்பிழை பற்றி ஒரு பகுப்பாய்வாளரோனும் உலக வங்கிக்குழுவுக்கு ஆலோசனை கூறினரென்பது இக் கட்டுரையாளருக்குத் தெரியும். எனினும், 1981ம் ஆண்டு முடிவடைந்து நெடுங்காலத்துக்குப்பின்னர் 1982ம் ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட இறுதி அறிக்கையில், அனல் மின்சார நிலையங்களை அமைப்பதன் அவசியம் பற்றியும், அவற்றிற்கு எரிபொருள் வழங்குவதற்குத் தேவையான எண்ணெய், நிலக்கரி பற்றியும் செய்யப்பட்ட அதே முற்கணிப்புப் பற்றி நடைபெற்ற அதே விவாதங்களில் உபயோகிக்கப்பட்ட அதே அட்டவணைகளிலுள்ள அதே புள்ளிவிவரங்கள் அடங்கியுள்ளன.

.5 இந்நிலைமையில், தனது உலக வங்கி முத்திரையைத் தாங்கும் இந்த அறிக்கை தங்களுடைய சொந்தப் புள்ளிவிவரங்களை நன்கறிந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு மனக் கலக்கத்தை உண்டாக்காது. ஆனால், அது பகுப்பாய்வாளர்களையும் ஆலோசகர்களையும் ஏனைய அமைச்சுக்களிலுள்ள மற்றவர்களையும் ஆட்கொண்டு, நிலக்கரி, மின்சாரம், நீர் மின்சாரம் முதலியன சம்பந்தமாக அவர்களுடைய மனோபாவங்களை உருவாக்கலாம்.

.6 1981 ம் வருட உண்மையான விற்பனைகளையும், அறிக்கையில் உள்ளவாறுவருடவாரியான வளர்ச்சி விகிதங்களையும்(1981ம்வருட உண்மையான விற்பனைகளுக்கொப்ப இவை ஒரு வேளை குறைக்கப்பட வேண்டும் அல்லது திருத்தியமைக்கப்பட வேண்டும் எனினும்) 15 சதவிகித தொகுதி நஷ்டங்களின் அதே மதிப்பீட்டையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்வதாயின், அப்பொழுது 1990 ம் ஆண்டில் தேவைப்படக்கூடிய மின்சார சக்தி அறிக்கையின் அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயவாதமாக உள்ள 5,108 கிகா வாட் மணிக்கெதிராக 4,235 கிகா வாட் மணியாகவும், "காப்பு நியாய வாதமாக"உள்ள 4,853கி வா. ம.யுக்கெதிராக 4,023 கி. வா.ம. ஆகவும் மட்டுமே இருக்கும்.

.7 இவ்விரு விஷயங்களிலும் (நியாயவாதங்கள்) முறையே 1,574 கி.வா. ம., 1,323 கி.வா.ம. போதாக்குறைகளைக் காட்டுவதற்காக உலக வங்கியினதும், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட ஸ்தாபதனத்தினதும் அறிக்கையில் எரிசக்தித் தேவைகள், நீர் மின்சார உற்பத்தித்திறனுக்கெதிராக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. 1981 ம் வருட உண்மையான விற்பனைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, இப்பற்றுக் குறைகள் முறையே 701 கி.வா.ம. ஆகவும், 493 கி.வா.ம. ஆகவும் தான் இருக்கும்.

.8 1990 ம் ஆண்டளவில் 80 மெகாவாட்டுகளை (மெகாவாட் என்பது பத்து இலட்சம் வாட்டுகள் அல்லது ஆயிரம் கிலோவாட்டுகள்) உற்பத்தி செய்யவல்ல டீஸல் இயந்திரத் தொகுதியும் 120 மெகா வாட்டுகளை உற்பத்தி செய்யக் கூடிய நிலக்கரி இயந்திரத் தொகுதியும் தேவைப்படும் என எடுத்துக் காண்பிப்பதற்காகவே இந்தப் போதாக்குறைகள் அறிக்கையில் உபயோகிக்கப்பட்டுள்ளன; எரிபொருள் தேவை 3,00,000 தொன் நிலக்கரியும், 2,46,000 தொன் எண்ணெயுமாக இருக்கும். காப்பு விஷயத்தில், எண்ணெய்த் தேவை 1,69, 000 தொன்களாகக்குறையும். ஆனால், கி. வா.ம. கோரிக்கை இவ்விதம் குறைத்துக் கணக்கிடப்பட்டால்; இரு விஷயங்களில் எதிலும் எண்ணெய்த் தேவை இருக்காது (எனவே புதிய டீஸல் இயந்திரத்தொகுதி தேவைப்படமாட்டாது); அத்துடன், இரு "விஷயங்களிலும்" நிலக்கரித் தேவை 2,86,000 தொன்களாகவும் 2,01,000 தொன்களாகவும் குறைந்து விடும்.

9. இங்கு ஒரு சுவாரஸ்யமான விடயத்தைக் குறிப்பிட வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கிக்காக 1981 ம் ஆண்டு மார்ச் மாத முற்பகுதியில் வெளியிடப்பட்ட உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று (இது "இத்துறையைப்பற்றிய நல்லதோர் ஆராய்ச்சியும் விவரணமுமாகும்" என்று உலக வங்கியினதும் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஸ்தாபனத்தினதும் அறிக்கை குறிப்பிட்டது) 1990 ம் ஆண்டளவில் மின்சாரத்தேவை வெகுவாக அதிகரிக்கும் என்று — அஃதாவது 5,722 கி.வா.ம. மின்சாரம் தேவைப்படும் என்று இதற்கு முன்பு இலங்கை மின்சார சபை 1981 பெப்ரவரி மாதத்தில் வெளியிட்ட முற்கணிப்பொன்றை ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் இந்த முற்கணிப்பை "பரீட்சார்த்தமானது" என்று அது மிகவும் விவேகமாக வர்ணிக்கின்றது. உலக வங்கியினதும் ஐ. நா. அபிவிருத்தி திட்ட ஸ்தாபனத்தினதும் தூதுக் குழு, இலங்கை மின்சார சபை 1981 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்ட முற்கணிப்பு சம்பந்தமாக ஒன்றில் அதே சொற்றொடரையே உபயோகித்திருக்க வேண்டும்; அல்லது 1982 பெப்ரவரி மாதத்தில் அவர்களுக்கு அவசியப்பட்டது போல, 1981 ம் வருடப் புள்ளி விவரங்களை அவர்கள் ஆராய்ந்திருக்கவேண்டும்.

.10 ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையை விட அதிக கவர்ச்சியாக அச்சிடப்பட்டு, கட்டப்பட்டுள்ள உலக வங்கியினதும் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட ஸ்தானத்தினதும் அறிக்கை பற்றி, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல், இலங்கை மின்சார சபையினர் (இவர்கள் தங்கள் சொந்தப் புள்ளி விவரங்களை நன்கறிந்தவர்கள்) அளவுக்கு மிஞ்சி அலட்டிக்கொள்வது சாத்தியமல்ல. 1990 ம் ஆண்டிலோ அல்லது அதற்குக் கிட்டிய ஆண்டிலோ ஊரொத்துக் கொள்ளாத மின்சாரவெட்டுகளுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு வேலியாக, தேவை ஏற்படும் காலத்துக்கு முன்னதாகவே நிதிகளை முதலீடு செய்ய வேண்டுமென்று கோருவதற்காக அவர்கள் உண்மையில் அதை உபயோகிக்கக்கூடும். அப்படியான ஒரு நிலைமையில் ஏனைய அமைச்சுகளிலோ அல்லது நிதி வழங்கும் ஸ்தாபனங்களிலோ உள்ள மற்றும் பகுப்பாய்வாளர்கள், ஆலோசகர்கள் முதலியோர் யதார்த்த நிலையிலிருந்து குறிட்பிடத்தக்க அளவுக்கு வழுவிச்செல்லும் புள்ளி விவரங்களால் அல்லது எவ்வளவோ மோசமானஅடிப்படைகளைக் கொண்ட முற்கணிப்புகளால் இயக்கப்படுவது சரியா?

.11 1982 மே மாதத்தில் கூட உலக வங்கிக் குழு உபயோகிக்காத பின்னோக்கிப் பார்க்கும் விவேகபுத்தியை உபயோகிக்குமிடத்து, ஒரு சுவாரஸ்யமான உண்மை புலப்படுகிறது. 1982 ம் ஆண்டின் உண்மையான மின்சார உற்பத்தி 2,050 கி.வா.ம. ஆக மட்டுமே இருக்குமென்பதைக் கவனிக்கச் சுவையாயிருக்கிறது. வழங்கல் கட்டாயங்களை அடிப்படையாகக்கொண்ட மின்சார வெட்டுக்களால் கட்டுப்படுத்தப்படாத உற்பத்தியளவாகும் இது. மேலும், 1981 ம் ஆண்டு சம்பந்தமாக உலக வங்கி மேற்கொண்ட உற்பத்தி அளவான 2,112 கி. வா. ம. வுக்கு இது சற்றுக் குறைவாகும். 25 சத விகிதம் போன்ற வளர்ச்சி விகிதங்கள் அநுமானிக்கப்பட்டு இந்த உற்பத்தியளவே மேற்கொள்ளப்பட்டதென்பது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.6 பெற்றோலியம் பொருள்கள்

.1 பெற்றோலியம் கூட்டுத்தாபனம் அண்மையில் வருடாந்தப் புள்ளி விவரச்சுருக்கமொன்றை வெளியிடத்தொடங்கியுள்ளது. இது மெச்சத்தக்க ஒரு நடவடிக்கையாகும். முதலாவது ஆண்டுச் சுருக்கம் 1970 ம் ஆண்டுக்கும் 1980 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை உள்ளடக்கியதாகும். விரைவில் வெளி வரவிருக்கும் இரண்டாவது இதழ் புள்ளிவிவரங்களை 1981 ம் ஆண்டுக்குக் கொண்டுவந்து விடும்.

.2 முதலாவது இதழின் முதற் பக்கத்தில் தரப்பட்டுள்ள கூட்டு மொத்தச் செயற்பாடுகளைப் பற்றிய அட்டவணையொன்றில் விற்பனைகளும் ஆகு செலவுகளும் இலாபங்களும் கனஅளவும் காட்டப்பட்டுள்ளன. தொன் ஒன்றுக்குக் கிடைத்த அலகு வருமானமும் தொன் ஒன்றுக்கு ஆன செலவும் கூட இதில் சேர்க்கப்பட்டுள்ளன. விசேஷமாக 1980 ம் வருடம் சம்பந்தமாகத் தொன் ஒன்றுக்குக்கிடைத்த வருமானம் 49 இலட்சம் ரூபா என்றும் தொன் ஒன்றுக்கு ஆன செலவு 48 இலட்சம் ரூபா என்றும் காட்டப்பட்டுள்ளன. ஆனால், இந்த இலக்கங்கள் முறையே தொன் ஒன்றுக்கு 4,900 ஆகவும் 4,800 ரூபா ஆகவும் இருக்கவேண்டும் என்பது இவ்வெளியீட்டின் பெரும் பாலான வாசகர்களுக்குத் தெளிவாகும்.

.3 இங்குள்ள ஆபத்து அவ்வளவாக எண்ணெயின் விலை ஓராயிரம் மடங்கு (மூன்று பூச்சியங்களைப் பொறுத்த விஷயம்) அதிகரித்துதுள்ளதென்று இந்த அட்டவணையை உடனடியாக உபயோகிப்பவர்கள் ஊகித்துக் கொள்வார்கள் என்பதல்ல: ஆனால், இந்த அறிக்கையை ஓர் ஆதாரமாக உபயோகிக்கும் ஆராய்ச்சியாளர்கள் இவ்வழுவை ஸ்திரமாக்கி, தாங்கள் காணும் ஆராய்ச்சிமுடிவுகளிலும் அதைப் புகுத்தி- விடுவார்கள் என்பதே இங்குள்ள ஆபத்து.

.4 மூன்று பூச்சியங்கள் அல்லாவிட்டாலும் ஒரு பூச்சியத்தையேனும் விட்டுவிடும் இதேபோன்ற அகஸ்மாத்தான வழுக்களைப் பல உள்நாட்டு வெளியீடுகளில் இக் கட்டுரையாசிரியர் கண்டுள்ளார். இவ் வழுக்கள் புரூக்கிங்ஸ் கழகம் போன்ற புகழ்பெற்ற நிலையங்களில் அமர்ந்துள்ள கிரந்த கர்த்தாக்களின் ஆராய்ச்சிமுடிவுகளைப் போலியாக்கியுள்ளன.

.5 இதே போல, கண்டனத்துக்குள்ளான பல முடிவுகளைக் கொண்ட ஐ.நா. அபிவிருத்தித் திட்டஸ்தாபன அறிக்கையொன்றுள்ளது. இக் கண்டங்கள் "நியூ சயன்டிஸ்ட்" எனும் சஞ்சிகையிலும் வேற்றிடங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்குமுன்னர் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கையொன்றில் இடம் பெற்ற ஒரே ஒரு பிழை ஒருமுறையேனும் தவறாக உபயோகிக்கப்பட்டமை இக் கண்டனங்களுக்கு வலுவூட்டின.

### இலங்கையில் உள்ள வாகனங்களின் தொகை

.1 இனிப் போக்குவரத்து உலகைக் கவனிப்போம் குடிசன மதிப்புத் திணைக்களம் அண்மையில் வெளியிட்ட தகவலறிக்கையொன்று மற்றவற்றுடன் கீழ்க்கண்டதையும் படாடோபமாகக் குறிப்பிடுகின்றது.(அடிக் கோடுகள் என்னுடையவை):

"மோட்டார் வாகனங்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று சமீப வருடங்களில் பல்வேறு வட்டாரங்களிலிருந்து எழுந்துள்ள இடைவிடாத கோரிக்கை துரிதமாக விரிவடைந்து வரும் ஒரு பொருளாதாரத்தின் தேவைகளைச் சமாளிக்க, தேசிய போக்குவரத்து முறையை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் மென்மேலும் உணரப்படுவதை ஓரளவுக்கேனும் பிரதிபலிக்கின்றது. கிடைக்கும் தகவல்களை நாளது வரை தரும் இவ் வெளியீடு இக்கோரிக்கையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்யும் என்பது திண்ணம். உள்நாட்டுக் கைத்தொழில்களின் நுகர்பொருள்கள், நிறைவுப் பொருள்கள் ஆகிய இரண்டையும் ஏற்றிப் போகும் நடவடிக்கை மக்களின் வாழ்க்கை மீது ஓர் ஆழ்ந்த பயனை உண்டாக்கின்றது. ஆதலால், தேசிய லொறிப் போக்குவரத்துப் பற்றிய புள்ளிவிவரங்கள் இதனகத்து தரப்படுகின்றன. இதே போல, சகல பிரயாணிகள் போக்குவரத்து வாகனங்களும்..... நாட்டில் பொருள்களினதும் பிரயாணிகளினதும் போக்குவரத்துச் சேவைகளை விருத்தி செய்வதற்காகத் திட்டமிடுவதிலும் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அவற்றை மதிப்பாய்வு செய்வதிலும் இத்தகவல்கள் பெருமளவுக்கு உபயோகமாயிருக்குமென்று நம்பப்படுகிறது. 1977 ம் ஆண்டுக்கு முந்திய காலத்தில் போக்குவரத்துச் சாதனங்களை இறக்குமதி செய்வதில் கடுங்குறைவு விசேஷமாகக் காணப்பட்டது. 1977 ம் ஆண்டு முடிவில் இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்டதுடன் மோட்டார் வாகனங்களையும் உதிரிப்பாகங்களையும்துணைச்சாதனங்களையும் இறக்குமதி செய்வதில் முன்னெப்போதும் காணாத அதிகரிப்பு காணப்பட்டது. ஆதலால், இத் துறையில் பொருளாதார வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது அக்கொள்கை ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பிடுவதில் இவ் வெளியீட்டில் தரப்பட்டுள்ள தகவல்கள் பயனுள்ளனவாயிருக்கும்.

.2 "31.12.81 ல் இருந்தவாறு வாகனங்களின் மொத்தத் தொகை" என வர்ணிக்கப்படும் பட்டியல் அத்தகவலறிக்கையின் முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ளது. பதின்மூன்று வகையான வாகனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் மொத்தத் தொகை 3,37,382. இந்தத் தொகை உண்மையில் "31.12.80 ல் இருந்தவாறு பதிவேடுகளிலுள்ள மோட்டார் வாகனங்கள் பற்றிய மோட்டார் வாகனப் பதிவாளரின் மொத்தத் தொகையாகும். பிந்திய திகதியான 31.12.81 ல் இருந்தவாறு பதிவாளரின் மொத்தத் தொகை 3,74,900.

.3 இத்தொகை எந்த ஆண்டுக்குரியதென்பது ஒரு புறமிருக்க, "வாகனங்களின் மொத்தத் தொகை" என்றும் "பதிவேடுகளிலுள்ள மொத்த வாகனங்கள்" என்றும் வர்ணிப்பதிலுள்ள வித்தியாசம் முக்கியமானதாகும். ஏனென்றால், நிதி திட்டமிடல் அமைச்சின் வெளியீடொன்று மோட்டார் வாகனப் பதிவாளரின் பதிவேடுகளிலிருந்து அதே பட்டியலை — மொத்தம் 3,37,382—மறுபிரசுரஞ் செய்து, அதில் கீழ்க்கண்ட குறிப்பைச் சேர்த்துள்ளது —

"பதிவேட்டிலுள்ள மோட்டார் வாகனங்களின் தொகை, செயற்பட்டு வரும் வாகனங்களின் தொகை பற்றிய ஒரு குறிப்பிடத்தக்க மிகைக்கூற்றாகுமென நம்பப்படுகிறது. ஏனென்றால், உபயோகத்திலிருந்து கழிக்கப்பட்டுவிட்ட ஆனால் பதிவேட்டிலிருந்து நீக்கப்படாத பல வாகனங்கள் இதில் சேர்ந்திருப்பதாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையிடம் ஏறக்குறைய 7,500 பஸ்கள் இருக்கின்றன. ஆனால், பதிவேட்டில் இன்னும் 15,000 வாகனங்கள் இருந்து வருகின்றன"

.4— 1980 ம் ஆண்டில் 2,21,827 வாகனங்களுக்கு மட்டுமே லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளன. அத்தொகையைக் கவனிக்குமிடத்து, இந்த முரண்பாடு தெளிவாகத் தெரிகிறது.

.5 குடிஜன மதிப்புத் திணைக்களம் வெளியிட்ட தொகை மதிப்புத் தகவலறிக்கையிலுள்ள இந்தப் பாரதூரமான புள்ளிவிவரப் பிரச்சினை சம்பந்தமாகப் பிழையை ஒப்புக்கொள்ளும் ஒரே ஒரு செயல், இ.போ.ச. பஸ்களின் தொகையான 15,000 க்கெதிராக (முன்பு குறிப்பிடப்பட்ட பட்டியலில்)க் காணப்படும் ஓர் அடிக்குறிப்பாகும். அதன் வாசகம் வருமாறு :—

(மிகுதி அடுத்த இதழில்)

---

(25 ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தின் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையிற் தங்கியுள்ளது, ஆகையால் உத்தியோகபூர்வமான அங்கீகாரம் முக்கியமாகும்.

இப் பிராந்தியத்தில் ஏற்கப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைய, எமது வெளிநாட்டு அமைச்சின் ஊடாக, உள்ளூர் வெளிநாட்டு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இப் பிராந்தியத்தில் இத்தகைய வர்த்தக ஊக்குவிப்பு கேள்வி விஷயங்களை வைத்துள்ள பல்வேறு நாடுகளும் இவ் வழக்கத்தைப் பின்பற்றுகின்றன. இந்தியாவில் முதலீட்டு நிலையம், கைத்தொழில் ஊககுவிப்புப் பேரவை, இந்திய தேயிலைச் சபை, வங்காள்தேச அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம், பாகிஸ்தான் வர்த்தக ஊக்குவிப்புப் பேரவை, ஈராக் வர்த்தக நிலையம் என்பவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்

**நிலையத்தின் அமைவிடம்**

முன்மொழியப்பட்டுள்ள வர்த்தக, முதலீட்டு வலயத்தின் அமைவிடம் பற்றித் தீர்மானித்தல் மிகமுக்கியமாகும். எல்லாப் பிராந்தியங்களையும் உள்ளடக்கக்கூடியதாக இது அமைதல் வேண்டும். இத்தகைய தீர்மானத்தை எடுக்கையில் கீழ்க்காணும் காரணிகளுக்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்:

அ) சந்தை இலக்குகளைச் சேவைப்படுத்துவதற்கு வலயத்திற்கு உள்ள புவியியல் வாய்ப்பு.

ஆ) இத்தகைய முயற்சிகளுக்குச் செல்லுபடியான உள்ளூராட்சி விதிகளும் கொள்கைகளும்.

இ) செய்தித் தொடர்பு, போக்குவரத்து தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற வசதிகள்.

ஈ) உள்ளூர் வர்த்தக நிலைமை.

உ) நாடு அதன் அயலவர்களிடையே கொண்டுள்ள பிராந்திய நிலைமையும் அங்கீகாரமும்.

ஊ) நிலையத்தின் இயக்கச் செலவு.

வர்த்தகப் பங்காளர்கள், விநியோகஸ்தர்கள், முகவர்கள் என்போரைக் கவருதல் பிரதான நோக்கமாக இருப்பதனால் ம. கி. வர்த்தகர்கள் எந்நேரமும் விஜயம் செய்கின்றதும், தாராள வர்த்தகக் கொள்கைகளைக் கொண்டதுமான ஒருநகரத்தில் இது அமைதல் வேண்டும். அரசியல் அடிப்படையில் அயல் நாடுகளினால் மதிக்கப்படுகின்ற ஒரு நாட்டில் இது அமைதல் வேண்டும். வளைகுடாவில் முன்னணி வர்த்தக, சேவை நிலையங்களாக விளங்குகின்ற துபாய் அல்லது பஹ்ரைன் இத்தகைய ஒரு நிலையத்திற்குரிய இயற்கையான தெரிவாகத் தென்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org